# திருமுக்கூடல்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008

# திருமுக்கூடல்

பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.
ஆணையர் (பொ)

ஆசிரியர்
ஜெ. ரஞ்சித்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை – 600 008.
திருவள்ளுவர் ஆண்டு 2044

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| TITLE | : | **THIRUMUKKUDAL** |
| Genral Editor | : | **Dr. S. Vasanthi,** M.A., M.Phil., Ph.d. |
| Copy Right | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 264 |
| Year | : | 2013 |
| No. of Copies | : | 500 |
| Type Point | : | 11 |
| No. of Pages | : | 108 |
| Paper Used | : | 80Gsm Maplitho |
| Printer | : | The Then Chennai District Printing workers Indl. Co-op Society (Ltd) 5/2, Koya Arunagiri 1st Street, Royapettah, Chennai-4. |
| Publisher | : | State Dept. of Archaeology, Tamil Valarchi Valagam, Halls Road, Egmore, Chennai - 600 008. |
| Price | : | Rs. 79.00 |

முனைவர் சீ. வசந்தி, எம்.ஏ., எம்பில்., பிஎச்.டி.
ஆணையர் பொறுப்பு

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008
நாள்: 15 - 03 - 2013

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973–74 –ஆம் ஆண்டு 'கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்' ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் முதுநிலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. தமிழக அரசு இம்மாணவர்களுக்கு மாதம் ரூ. 2000/= பயிலுதவித் தொகை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 208 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சி காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து அவ்வூர் மற்றும் அவ்வூர் கோயில்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 25 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2004 – 2005 – ஆம் ஆண்டு பயின்ற திரு ஜெ. ரஞ்சித் அவர்கள் எழுதிய 'திருமுக்கூடல்' என்னும் ஆய்வேடு தற்போது 26 – வது நூலாக வெளிவருகிறது. இந்நூல் திருமுக்கூடல் கோயிலின் கட்டட கலை, சிற்ப கலை ஆகியவை

பற்றியும் அக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அக்கால அரசியல், சமுதாய பொருளாதாரச் செய்திகளையும் விரிவாக விளக்குகிறது. திருமுக்கூடல் என்றாலே வரலாற்று அறிஞர்களுக்கு நினைவுக்கு வருவது சோழர்காலத்தில் செயல்பட்ட ஆதுல சாலை (மருத்துவ மனை) தான். பொதுப்பிணி நீக்கும் பொது மருத்துவர்களும், அறுவை சிகிச்சை செய்யும் (சல்லியக் கிரியை பண்ணுவான் எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது) மருத்துவர்களும் பணியாற்றியுள்ளனர் என்பதும், இவர்களுக்கு ஊதியமாக நெல்லும், காசும் கொடையாக மருத்துவக்காணி என்ற பெயரில் நிலம் வழங்கப்பட்ட செய்தியும், இக்கோயில் கல்வெட்டின் மூலம் அறியப்படும் அரிய செய்தியாகும்.

திருமுக்கூடல் வரலாற்று நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கு எனது உளம் கனிந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை நல்ல முறையில் கணினியில் தட்டச்சு செய்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி. கு. கோகிலா மற்றும் அச்சுப்பிழைத்திருத்துபவர் திருமதி. கோ. கீதா ஆகியோருக்கும் எனது பாராட்டுகள்.

இந்த வரலாற்று நூலினை வெளிக்கொணர 2012 – 2013 – ஆம் ஆண்டு பகுதி திட்டத்தின் கீழ் நிதியுதவி நல்கி சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்கள் அனைவருக்கும் பயனு–டையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சி. வசந்தி

# பொருளடக்கம்


பதிப்புரை

1. தமிழகமும் வைணவமும் – 1

2. ஊர் அமைப்பு – 11

3. கோயில் கட்டடக்கலை – 12

4. கோயில் சிற்பங்கள் – 26

5. கல்வெட்டுச் செய்திகள் – 38

6. திருவிழாக்கள் – 83

நிழற்படங்கள்

# தமிழகமும் வைணவமும்

## கோயில்

இறைவுணர்வு ஒன்றுதான் மக்களை நல்வழிப்படுத்தும் என்றும், மக்களை ஒழுக்கமுள்ளவர்களாக ஆக்கும் என்றும், மக்களிடையே மன ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்கும் என்றும் தமிழ் மன்னர்கள் கருதினர். எனவே தாங்கள் நல்லாட்சி நடத்தவும், குடிமக்களை நற்குடிமக்களாக வாழ வழிவகை செய்யவும் எண்ணியே இறைவன் உறையும் கோயில்களை அமைப்பதில் ஈடுபட்டனர்.''[1]

பழங்கால மக்கள் அச்ச உணர்வின் அடிப்படையிலேயே இறைவனை வணங்கத் தொடங்கினார்கள். இறை வழிப்பாட்டுடன், ஐம்பெரும் பூதவழிபாட்டினையும் (நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு) மக்கள் மேற்கொண்டனர்.

இதைக் காப்பியத்தில் இறைநிலை என்னும் தலைப்பில்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடு நீங்கிய சிறப்பின் முதலான மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே''[2]

என்ற தொல்காப்பிய இலக்கணத்தால் உணரலாம்.

இவ்வாறு இயற்கையை வணங்கும் வழிபாட்டு முறை பின்னர் வாழ்க்கை வளர்ச்சிக்கேற்ப வளர்ந்து வளம் பெற்றது. கால வளர்ச்சியை ஒட்டியும் வளர்ந்து வளம் பெற்றது. பின்னர் மனிதனது கலை உணர்வால் நலம் பெற்றது. அதன் அடிப்படையில் கோயில்கள் உருவாகின.

## கோயிலும் - தத்துவமும்

"உள்ளம் பெரும் கோயில் ஊன் உடம்பு ஆலயம்''

என்று பெரியோர் தம் நூல் வழக்கமாகவும் பேச்சு வழக்காகவும் கொண்டு வாழும் நாகரிகம் பொதுவானதாக உள்ளது.

கோயில் அமைப்பு முறைகள் – பிரபஞ்சத்தின் வடிவம், இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் ஆகிய ஐந்து தொழில்களை விளக்குவதாகவும், ஆன்மா பரமான்மாவுடன் இணைவதைக் காட்டுவதாகவும் அமைத்து சிறப்புப் பெறுகின்றன.

திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது என்பது ஒரு கட்டடத்திற்குள் போவதும், ஒருவரைக் காணுவதும் போன்றதல்ல. பிரபஞ்சம் என்னும் மாளிகையில் உயிருக்கு உயிராக வீற்றிருக்கும் இறைவனைத் தரிசிப்பதுதான் கோயில் வழிபாடாகும். பிரபஞ்சமே இறைவன் வடிவம். அணுக்கள் தோறும் அவனே ஆடியும், அவைகளைச் இயங்கச் செய்தும் அருள் செய்கிறான். இதையே உலக மக்கள், "அவன் அன்றி அணுவும் அசையாது'' என்கின்றனர்.

எனவே, "பிரபஞ்ச வடிவமே கோயில் என்றும் அவ்வடிவமும் மனித உடல்போல் உறுப்புகள் உடையதென்றும் பெரியோர்கள் கோயிலை ஒரு தத்துவ மாளிகையாகவேக் கொண்டனர்.''[3]

## வைணவம்

தமிழ்நாடு மக்கள் பண்டுதொட்டு திருமாலை வழிபட்டனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. "திருமால் வழிபாடும் திருமகள் கேள்வனே'' என்னும் தொடரால் திருமால் வழிபாடு[4] உள்ளது எனத் தெரிகிறது.

பாரத பூமியில் உள்ள வேதங்களும், தர்ம சாஸ்திரங்களும், இதிகாசங்களும், புராணங்களும் நாராயணனே பரத்துவம் என முழங்குகின்றன. இக்கருத்தை நாம் தெளிவாக நோக்கும்போது நன்கு புலனாகும். மேலும் பூவைநிலை என்றும் புறநிலை வாழ்த்து என்றும் கடவுள் வாழ்த்தோடு கண்ணியவருமே, என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதி காலத்தில் வாழ்ந்த மக்கள் பெருநிலப்பரப்பினை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்துவகையாகப் பிரித்துள்ளனர். முல்லை நிலத்திற்கு தெய்வம் மாயோன் (திருமால்) என வகுத்து அவரைச் சிறப்பித்தனர். எனவே அவர்கள் முல்லை நிலத்தினையும் அதன் தெய்வமான திருமாலினையும் போற்றி வணங்கினர்.

மேலும், தமிழகத்தில் சிவநெறியும், திருமால் நெறியும், நிலவழிபாடும் இருந்தன. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொன்மையான இதனை, "மாயோன் மேய காடுறை உலகமும்'' என்று குறிப்பிடும்நிலை கொண்டுதிருமால்மாயோன் எனக்குறிப்பிடப்படுவதும், முல்லை நிலத்திற்குரிய இறைவன் என்பதும் புலனாகும்.

## திருமாலே பரம்பொருள்

புறப்பொருள் துறையில் மன்னனைத் திருமாலோடு ஒப்பிட்டுக் கூறி அதற்குப் பூவை நிலை என்னும் துறைப் பிரிவை உண்டாக்கினர். இதையே தொல்காப்பியர் தமது நூலில்

"மாயோன் மேய மன்பெருஞ்சிறப்பின்
தாவா, விழுப்புகழ் பூவை நிலையும்''[5]

என்று கூறிச் சிறப்பித்துள்ளார். தொல்காப்பியமும், அவருக்கு முற்பட்டோரும் காக்கும் இயல்பினன் கண்ணபெருமானே என எண்ணி வணங்கினர். அவரைத் தனிப்பெருந்தெய்வம் எனக்கூறி வழிபட்டனர்.

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு''[6]

என்று திருமாலின் சிறப்பை திருக்குறள் விளக்குகிறது. இங்கு 'அடியளந்தான்' என்பது திருமால் இவ்வுலகை மூன்றடியால் அளந்த சிறப்பைக் குறிக்கிறது.

உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அளவிலா விளையாட்டுடையார் . . . .

என்று இறைவனின் சிறப்பை கம்பர் பெருமானும், மனம் உருகிப் பாடி மகிழ்கிறார்.

## திருமாலின் சிறப்பு

நம்மாழ்வார் திருவாய் மொழி என்னும் நூலில் ''உயர்வற உயர்நலம் உடையவன் எவன், அவன் மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன் அயர்வற அமரர்கள் அதிபதி'' என்று சிறப்பாக திருமாலை வழிபடுகிறார்.[7]

"உண்ணும் சோறும், பருக நீரும், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம்பெருமான்'' என்கிறார் நம்மாழ்வார்.''எனவே நாராயணனே பரப்பிரம்மம், பரஞ்சோதி, பரமாத்மா, அவரே உலகெங்கும் பரந்து, விரிந்து நிற்கின்றார் என விளக்கியுள்ளார்.

## நாராயணன் - பொருள்

நாராயணன் தனது நாராயணத்துவத்தை உள்ளபடியே காட்டிக் கொடுக்கக் கண்டவர்கள் ஆழ்வார்கள். உலக உயிர்கள் அனைத்திலும் நீக்கமற நின்று, தன்னைச் சரணடைந்த அடியவர்களின் பிறவிப்பிணி அகற்றி, பேரின்ப மோட்சமளித்து ஆட்கொள்ளும் சிறப்புடையவர் திருமாலேயாவார்.''[8]

"பெற்ற தாயினும் ஆயின செய்யும் நலந்தரும்
சொல் நாராயணா வென்னும் நாமம்''[9] எனத் திருமங்கை யாழ்வார் தமது பாடலில் திருமாலின் சிறப்பைக் குறிப்பிடுகிறார்.

## தியானம்

நாராயணனே தியானத்திற்குக் காரணமானவர், காரணந்துதியே காரணவஸ்து தியானத்திற்குரியது என்று காரண வஸ்துவை பற்றி வேதாந்தம் விளக்குகிறது.

திருமாலின் பெருமையை கி.பி. 7–ஆம் நூற்றாண்டில், "வல்லானை, கொன்றானை, மாற்றானை மாற்றழிக்க வல்லானை, மாயனைப் பாடேலோர் எம்பாவாய்.''[10] என்று ஆண்டாள் சிறப்பித்துப் பாடியுள்ளார். கொடுமைகள், பாவங்கள், பகைவர்கள், இவைகளை அழிக்கக் கூடிய திறம் பெற்றவர் பரம்பொருள் ஆகிய ஸ்ரீமன் நாராயணனேயாவார். "கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா''[11] என்று கண்ணனை அழைப்பதன் வாயிலாகப் பகைவர்களை அழிக்கக் கூடிய திறம் பெற்றவர் ஒப்பற்றவராகிய திருமாலேயாவார் என்று ஆண்டாள் (திருப்பாவையில்) கூறியுள்ளார். கண்ணனையே குழந்தையாகப் பாவித்துப் பெரியாழ்வார் பாடிய பாடல்கள் பின்னாளில் பிள்ளைத் தமிழ் இலக்கியத்திற்கு வித்தாக அமைந்தன.

## வைணவத்தை வளர்த்த பெருமக்கள்

தமிழ் மண்ணில் திருமால் நெறியினை வளர்த்த பெருமை ஆழ்வார்களையும், ஆச்சாரியர்களையும் சாரும். ஆழ்வார்கள்

பாசுரங்களால் முல்லை நிலத் தெய்வமாகிய திருமாலைப் பரம்பொருளாக முதற்பொருளாகப் பலரும் போற்றும் நிலை உறுதியாயிற்று. ஆழ்வாருக்குப்பின் வந்த ஆசாரியர்கள் வைணவ தத்துவங்களையும், சமய உண்மைகளையும் நெறிப்படுத்தினர். மேலும் ஆழ்வாரின் பாசுரங்களை விளக்கினர்''[12]

வடமொழி வேதங்களும், திராவிட வேதமாகிய திவ்வியப் பிரபந்தங்களும் இறைநெறியில் உயிர்களை இட்டுச்செல்லும் இருவழி என்னும் உபய வேதாந்தக் கொள்கையினை உருவாக்கினர். அவர்கள் பணியில் வைணவமும் முழுமை பெற்றது என்று கூறலாம்.

## ஆச்சாரியர்கள் பெருமை

வைணவ உலகம் ஆச்சாரியர்களை 'நம்பி' என்றும் 'பிள்ளை' என்றும் போற்றுகிறது. இக்கருத்தை ஆச்சாரியர்கள் கூறிய நம்பி என்கைக்கும், அவர்கள் அழைத்தால் அடியேனென் கைக்கும்''[13] என்னும் தொடர்களால் தெரிந்துக் கொள்ளலாம்.

## வைணவ உரையின் முன்னோடிகள்

ஆச்சாரியப் பெருமக்களுள் 'உடையவர்' என்று குறிக்கப்படும் ஸ்ரீராமானுஜர் காலத்தில்தான் முதன் முதலாகத் திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை, எழுத்து வடிவில் மலர்ந்தன. அதுவரை அவைகளுக்கு விளக்கம் கூறுவது மட்டுமே நிகழ்ந்தது. அவ்விளக்கங்கட்குப் பலராலும் விளக்கம் சொல்லப்படாமல் ஓராசியர் ஒரு மாணாக்கனுக்கு சொல்வது என்னும் "ஓராண் வழி'' நடையாகச் சொல்லப்பட்டு வந்தன என்பர்.

திவ்வியப்பிரபந்த உரை விளக்கத்திற்குக் காலத்தால் முற்பட்ட பெரியோர்களும், சம காலத்துச் சான்றோர்களும் உரைத்துள்ள விளக்கங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. அவ்விளக்கங்கள் தந்தவர்களை வைணவ முன்னோடிகள் அல்லது உரைகாரர்கள் எனக் கூறலாம்.

1. நாதமுனிகள், 2. ஆளவந்தார், 3. இராமானுஜர், 4. எம்பார், 5. கூரத்தாழ்வார், 6. திருவரங்கத்தமுதனார், 7. அனந்தாழ்வார்,

8. முதலியாண்டான், 9. அம்மங்கியம்மாள், 10. பிள்ளைத் திருநறையூரையர் என்பவராவார்.

## திருவரங்கத்து அமுதனார்

வைணவ முன்னோடிகளில் திருவரங்கத்தமுதனார் இராமனுஜ நூற்றாந்தாதி பாடிய பெருமையுடையவர். இவர் இராமனுஜரால் பாடப்பெற்று; அமுதன் என்னும் பெயரினைப் பெற்றார். சில காலத்திற்குப் பிறகு இவர் இராமானுஜர் மீது பாடினார் என்று "கோயிலொழுகு'' தெரிவிக்கிறது.[14] பிரம்ம சூத்திரத்தினுடைய வேதவாக்கியங்களின் பொருளை சங்கரர் விளக்கிக் கூறினார் என்பது முக்கியத் தத்துவச் செய்தியாகும். சங்கரரது வேதாந்தக் கொள்கை அறிவுக்கு விருந்தாக இருந்தபோதிலும் இராமானுஜரது கொள்கை அறிவுக்கு விருந்தாக மட்டுமின்றி, இதயத்தை தொடக்கூடியதாக உள்ளது. இவ்வாறு உலகெல்லாம் அன்றும், இன்றும் என்றும் போற்றப்பட்டு வருகின்ற இராமனுசரது பெருமை சொல்லுக்கும், எழுத்திற்கும் அப்பாற்பட்டதாகும் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.''[15]

## இலக்கியம் வளர்த்த வைணவம்

நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம், பன்னிரு ஆழ்வார்களால் படைக்கப்பட்ட தமிழ்த் தேனமுதாகும். இதன் பல்லாயிரப்படி உரைகள் மணிப்பிரவாள நடையில் இருப்பினும் நயமிக்கன அழகிய பெருமாள் ஜீயர் கி.பி. 10 – ஆம் நூற்றாண்டில் குருபரம்பரைப் பிரபாவத்தைத் தந்துள்ளார். தமிழ் வியாசர் எனப்படும் நாதமுனிகள் எழுதிய யோகரகசியம், நியாயதத்துவம் முதலிய நூல்கள் வைணவ வளர்ச்சிக்கு வித்திட்டவையாகும்.

சிலப்பதிகாரத்தில் மாங்காட்டு மறையவன் மூலம் திருமால் வழிபாடு அன்றிருந்த நிலையை, திருப்பதியாகிய வட வேங்கடத்தில் நின்ற திருக்கோலத்தையும், திருவரங்கத்தில் கிடந்த திருக்கோலத்தையும் விரிவாகக் காண்கிறோம். ஆய்ச்சியர்குரவையில் திருமாலைப் போற்றும் பாசுரங்கள் குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு தமிழகத்தில் வைணவம் வளர்ச்சியடைந்த விதம், அதற்குப் பாடுபட்டவர்களின் சிறப்பு, முதலிய கருத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் வைணவத்தை வளர்த்த ஆழ்வார்கள், ஆச்சாரியர்களின் ஒப்பற்ற தொண்டும் உலகமக்கள் உய்ய வழிகாட்டியுள்ளதையும் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## காஞ்சி நகர் சிறப்பு

நம் இந்திய நாடு, வட இந்தியா, தென்னிந்தியா என்ற இருபகுதிகளை உள்ளடங்கியது. இவ்விரு பகுதிகளில் திருக்கோயில்கள் அதிகமாகப் பெற்றிருப்பது தென்னிந்தியாவேயாகும். தென்னிந்தியாவில் சிறப்புடன் விளங்குவது தொண்டைநன்னாடு. இதனைத் “தூயமாதவம் செய்து தொண்டை நன்னாடு'' என்னும் சேக்கிழாரின் கூற்றால் அறியலாம்.

தொண்டைநாடு என்பது தற்காலத்திய, காஞ்சிபுரம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், வேலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், மற்றும் கடலூர் மாவட்டத்தின் வடபகுதி ஆகியவற்றினைக் கொண்டது. இந்நாடு சான்றோர்களை மிகுதியாக உடையதாய் இருந்ததால் இதனைத் “தொண்டை நன்னாடு சான்றோருடைத்து'' என்னும் ஔவை வாக்கால் அறியலாம்.

“உச்சிக்கு மிஞ்சின பொழுதுமில்லை
கச்சிக்கு மிஞ்சிய பதியும் இல்லை''

என்னும் பழமொழி காஞ்சி மாநகரின் சிறப்பை விளங்குகிறது.

பெரும்பாணாற்றுப்படையில் நெடிய தெருக்கள், உயரிய மாடங்கள், படைத்திறம் மிக்க மறவர், கொடைத்திறம் உடைய மாந்தர் கொண்ட இந்நகரை விளக்கும் இடத்து,

'மலர்தலை உலகத்துள்ளும் பலர்தொழ
விழவு மேம்பட்ட பழ விறல் மூதூர்'[16] என்று போற்றப்பட்டுள்ளது.

தொண்டை நாட்டின் தலைநகரான காஞ்சியைச் சங்க இலக்கியங்கள் காஞ்சி, கச்சி என்ற இரு பெயர்களால் குறிப்பிடுகின்றன. காஞ்சி, காஞ்சிபுரம், கஞ்சி, கஞ்சிபுரம், காஞ்சீ, காஞ்சீபுரம், காஞ்சி மாநகர், கச்சியம்பதி, சின்னக்காஞ்சி, சிவகாஞ்சி, விஷ்ணு காஞ்சி, ஜைனகாஞ்சி, புத்த காஞ்சி, காஞ்சனபுரம், காஞ்சீபுரி, அத்தியூர், திரு அத்தியூர், சம்பாபுரி, பல்லவேந்திரபுரி, முப்புவனவனம், காமபீடம், தபோமயம், மும்மூர்த்தி வாசம், துண்டிரபுரம், இலயசித்தூர், பிரமபுரம், விண்டுபுரம், சிவபுரம், சருவசித்திகரம், கன்னிகாப்பு, ஆதிபீடம், பிரளயசித்து, இந்துபுரம், மும்முடீஸ்வரம், காமகோட்டம், சகலசித்தி தாண்டகபுரம், சத்திய வ்ரத க்ஷேத்திரம் போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது இந்நகரம்[17].

இவற்றுள் காஞ்சி, காஞ்சிபுரம், காஞ்சி நாடு, கச்சி, கச்சிப்பேடு, கச்சிமாநகர் தவிர மற்றவை அனைத்தும் கி.பி. 6 – ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு உருவான பெயர்களாகும்[18].

காஞ்சி என்ற சொல்லுக்குக் 'காஞ்சி' என்ற ஒருவகை மரம் (பூவரசு மரம்), மகளிர் இடையில் அணியும் மேகலை, நிலையாமை, மதில் என்ற பல பொருள்கள் உள்ளன. காஞ்சி மரங்கள் நிறைந்த பகுதி என்பதால் இப்பெயர் பெற்றது எனலாம்.

"வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங் கொடிப்
பாசிலைக் குருகின் புன்புறவரிப்பூ''

– இப்பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகளில் காஞ்சியின் இயற்கை வர்ணனையில் 'காஞ்சி' மரங்கள் சூழ்ந்த என்ற குறிப்பு இதனை மேலும் வலுவூட்டுகிறது.

கச்சிப்பேட்டு நன்னாகையார், கச்சிப்பேட்டு இளந்தச்சனார், கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார், கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார் ஆகிய சங்ககாலப்புலவர்கள் கச்சி, காஞ்சி ஆகிய இவ்வூர்களில் வாழ்ந்தவர்கள் ஆவர்.

சங்க இலக்கியங்களில் 'காஞ்சி' என்றும், மணிமேகலை காஞ்சி நகர், காஞ்சி நாடு எனக் குறிப்பிட்டுள்ளதை தவிர, 'காஞ்சிபுரம்' என வழங்கவில்லை. பதஞ்சலி இவ்வூரினைக் 'காஞ்சிபுரக' என அழைத்ததற்குப் பின் பல்லவர் செப்பேடுகளே முதன் முதல் 'காஞ்சிபுரம்' என அழைக்கத் தொடங்கியுள்ளதை அறிய முடிகிறது.

காஞ்சி மாநகரில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற திருப்பதிகள் பதிநான்கு உள்ளன[19]. அவை,

1. திரு அட்ட புயகரம் (அஷ்ட புஜம்)
2. திரு அத்தியூர் (வரதராஜப் பெருமாள்)
3. திருவூரகம் (உலகளந்த பெருமாள் கோயில்)
4. திருக்கள்வனூர் (காமாட்சி அம்மன் கோயிலில் இந்த சன்னதி உள்ளது.)
5. திருக்காரகம் (உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளது)

6. திருக்கார் வானம் (உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளது.)
7. திருத்தன்கா (விளக்கொளி பெருமாள் திருக்கோயில்.)
8. திருநிலாத்துண்டம் (ஏகாம்பரம் நாதர் கோயிலில் உள்ளது.)
9. திரு நீரகம் (உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளது)
10. திருப்பரமேச்சர விண்ணகரம் (வைகுண்ட பெருமாள் கோயில்)
11. திருப்பவளவண்ணர் (பவள வண்ணம் கோயில்)
12. திருப்பாடகம் (பாண்டவர் தூதர் கோயில்)
13. திருவெஃகா (யதோத்தகாரி கோயில்)
14. திருவேளிக்கை (முகுந்த நாயர் கோயில்)''

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திருத்தலங்கள் தவிர இம்மாவட்டத்தில் முக்கியமான வைணவக் கோயில்களும் உள்ளன.

## வைணவக் கோயில்கள்

விஜயராகவப் பெருமாள் கோயில், திருப்புட்குழி.

ஆதிகேசவப் பெருமாள் கோயில், கூரம்.

சுந்தர வரதராஜப் பெருமாள் கோயில், உத்திரமேரூர்.

இலட்சுமி நரசிம்ம சுவாமி கோயில், பழைய சீவரம்.

கோதண்டராமர் கோயில், செங்கல்பட்டு.

ஸ்ரீ அப்பன் வெங்கடேசப் பெருமாள் கோயில், திருமுக்கூடல்''

ஏரிக்காத்த ராமர் கோயில், மதுராந்தகம்

விஜயராகவப் பெருமாள் கோயில், ஆனூர்

சிங்கப் பெருமாள் கோயில்.

## அடிக்குறிப்புகள்

1. லேனா. தமிழ்வாணன், 'தெய்வ நம்பிகையும் தெளிவு மிக்க வாழ்க்கையும்', சென்னை, 1988. பக். 20 – 21.
2. தொல்காப்பியம் புறத்திணை இயல் – 33.

3. அறிவொளி 'காஞ்சி காமாட்சி' மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983. பக். 96.

4. இராமசாமி இராமானுஜதனார், ''நாராயணனே பரம்பொருள், ஆழ்வார்கள்'', அமுத நிலையம், சென்னை, 1983. பக் 7.

5. தொல்காப்பியம்

6. திருக்குறள் : பொருட்பால், அதிகாரம் – 61. குறள் எண். 610.

7. நம்மாழ்வார் 'திருவாய்மொழி' முற்பத்து.

8. புலவர் சொல்லேர் உழவனார், 'ஆறு சமய விளக்கம்', சங்கர் பதிப்பகம், சென்னை, 2000. பக். 72 – 73.

9. திருமங்கையாழ்வார் 'பெரிய திருவாய்மொழி,' முதற்பத்து, பா.எண்.9.

10. ஆண்டாள் திருப்பாவை. பா.எண். 15.

11. ஆண்டாள் திருப்பாவை. பா.எண். 27.

12. ஞானசுந்தரம், தெ. 'வைணவ உரைவளம், சென்னை. 1989. பக். 1.

13. ஞானசுந்தரம், தெ. 'வைணவ உரைவளம், சென்னை. 1989. பக். 1.

14. ஞானசுந்தரம், தெ. 'வைணவ உரைவளம், சென்னை. 1989. பக். 3, 42.

15. கண்ணன்சாமி, ஆர். 'ஸ்ரீராமானுஜவைபவம்', அம்மன் அச்சகம், சென்னை.

16. பெரும்பாணாற்றுப்படை, அடி. 410–11.

17. பகவதி, கு. 'கி.பி. 6 – ஆம் நூற்றாண்டும் காஞ்சிபுரம்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

18. பகவதி, கு. 'கி.பி. 6 – ஆம் நூற்றாண்டும் காஞ்சிபுரம்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

19. அறிவொளி, அ. 'காஞ்சி காமாட்சி', மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983. பக். 95.

# ஊர் அமைப்பு

## ஊர் அமைவிடம்

"கல்வியில் கரையிலாக் காஞ்சி'' என்று காஞ்சியினை அப்பர் புகழ்கிறார். இந்த காஞ்சி மாவட்டத்தில் பாலாறு, செய்யாறு, வேகவதியாறு ஆகிய மூன்று ஆறுகளும் கூடுமிடத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து செங்கல்பட்டு செல்லும் நெடுஞ்சாலையில் 20 கி.மீ. தொலைவில் பாலாற்றின் தென்கரையில் அமைந்திருக்கும் இயற்கை அழகு நிறைந்த சிற்றூர் தான் திருமுக்கூடல். இவ்வாற்றின் கரையில் அமைந்துள்ள ஸ்ரீ அப்பன் வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் வரலாற்றுப் புகழ் பெற்ற அரிய கல்வெட்டுகள் பலவற்றைப் பெற்றுள்ளது.

## திருமுக்கூடல் - பெயர் காரணம்

ஆறுகள் கூடும் இடங்கள் புனிதமானவை. "வட இந்தியாவில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்தைத் திரிவேணி சங்கமம்'' என்பது போல் தமிழகத்தின் வடக்கே தொண்டை நாடடில் பாலாறு, செய்யாறு, வேகவதி ஆறு ஆகிய இம்மூன்று ஆறுகளும் கூடும் இடமாதலால் இவ்வூருக்கு 'முக்கூடல்' எனப்பெயர் பெற்றது. உயர்வின் காரணமாக 'திரு' சேர்க்கப்பட்டு 'திருமுக்கூடல்' என்ற பெயர் எய்தியது. இவ்வூர் மிக்க தொன்மையான ஊராகும். இவ்வூர்ப்பகுதி மற்றும் இதனை சுற்றியுள்ள ஊர்களில் பெருங்கற்காலச் சின்னங்கள், எச்சங்கள் காணப்படுகின்றன. பல்லவர் சோழர், விஜய நகரர் முதலான அரசுகள் இந்த ஊர் மீதும் இங்குள்ள மகாவிஷ்ணு கோயில் மீதும் தனிப்பற்று வைத்திருந்தன.''[3] இக்கோயிலின் தென் மேற்கில் பச்சைக்கல் சிலைகளும், கருங்கல் சிலைகளும், பூமிக்கடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. இக்கோயில் மத்தியத் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்டு வரலாற்றுச் சின்னமாகத் திகழ்கிறது.

# கோயில் கட்டடக்கலை

கோயில் என்பது, கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், விமானம், பரிவாரக் கோயில்கள், திருச்சுற்று, யாகசாலை, திருமதில், கோபுரம் ஆகிய அங்கங்களைக் கொண்டதாய் இருக்கும்.

திருமுக்கூடல் வெங்கடேசபெருமாள் கோயில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் திருஉண்ணாழிகை, அர்த்த மண்டபம், முக மண்டபம், இரு திருச்சுற்றுகளுடன் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. முதலாம் திருச்சுற்றில், தென்கிழக்கு மூலையில் ஆழ்வார்களும் அவர்கள் எதிரில் நான்கு தூண்களைக் கொண்ட சிறிய திருமஞ்சன மண்டபம் ஒன்றும் உள்ளது. வெளிதிருச்சுற்று உருளை தூண்கள் கொண்டு பாவுகல்லால் மூடப்பட்டுள்ளன. இவற்றை திருமாளிகை பத்திமண்டபம் என்றும் அழைப்பர். கருவறையின் நுழைவு வாயில் இருபக்கமும் உள்ளன. முதன்மை வாயிலில் துவாரபாலகர் சிற்பங்கள் அமைந்துள்ளன. மூலவருக்கு எதிரே கருடன், மடப்பள்ளி, பரிவார கோயில்கள், மண்டபங்கள், பலிபீடம், த்வஜஸ்தம்பம், டோலோத்சவ மண்டபம் கோபுரம் என்ற அமைப்பில் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது.

இக்கோயில் கருவறையில் மூலவரான மகாவிஷ்ணு மும்மூர்த்திகளும் சேர்ந்த ஒரே திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார். திருமால், சிவன், பிரம்மா, என ஆகியோரைத் தன்னுடன் இணைத்துத் திருக்கோலம் கொண்டுள்ளார். இவ்விறைவன், திருமாலைக் குறிக்க மேலிரு கைகளில் சங்கு சக்கரமும், சிவபெருமானைக் குறிக்க சடைமுடி, நெற்றிக்கண்ணும், பிரம்மாவைக் குறிக்க முன் கையில் தாமரை மலர் கொண்டும் பூமாதேவி அமர்ந்து வணங்கிய நிலையிலும், இடதுபக்கம் பக்த மார்க்கண்டேயர் அமர்ந்து வழிபடல் போன்று காட்சிகளுடன் பாங்குற அமைந்துள்ளார். திருமாலின் நெடிய சிற்பமானது கடுசர்க்கரை படிமத்தால் ஆனது இப்பிம்பமானது இயற்கை மூலிகைகளைக் கொண்டு வடிவமைக்கப் பட்டபிம்பமாகும். பிம்பத்திற்கு அபிஷேகம் இன்றி தைல காப்பு மட்டும் நடைபெற்று வருகிறது.

## முதன்மை கருவறை

திருக்கோயிலின் அமைப்பில் பிரதானமூர்த்தி எழுந்தருளியிருக்கும் அறைக்கு கருவறை என்று பெயர். இதனை 'மூலஸ்தானம் என்றும்' இங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு மூலவர் என்றும் பெயர். இக்கோயில் கருவறையின் அமைப்பானது அதிட்டானம், பாதம் (பித்தி, சுவர்) 'பிரஸ்தரம்' கண்டம் (கிரீவம்) சிகரம், கலசம் என விமானத்திற்குறிய ஆறு அங்கங்களைக் கொண்டு ஒருதளத்துடன் நீள்சதுரமாக விளங்குகிறது. அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை கருங்கல்லால் கட்டப்பட்டு அதன் மேல் விமானம் சுதையினால் கட்டப்பட்டுள்ளது.

## அதிட்டானம்

மேல் உறுப்புகளாகிய பாதம், பிரஸ்தரம், விமானம் கோபுரம் ஆகியவை எழுவதற்கு திண்ணையாக, அடிவாரமாகக் கொண்டு பலத்துடன் கூடியதாக அமைக்கப்படும் அங்கமே அதிட்டானம் எனப்படும். அதிட்டானம் என்ற சொல்லுக்கு பல பெயர்கள் உண்டு. அவை முறையே, ஆத்யங்கம், ஆதாரம், தரணி, புவணம், பிருதிவி, பூமி, வஸ்த்துவாதாரம், தரைதளம், தளம், மசூரகம், குட்டிமம் என்ற அதிட்டானம் இரண்டு வகைகளைக் கொண்டுள்ளது. அவற்றின் பாதபெந்த அதிட்டானம் 8 வகைகளைக்கொண்டும், பிரதிபந்தம் 15 வகைகளைக் கொண்டும் உள்ளன. அவற்றில் நாம் இக்கருவறை, அதிட்டானத்தை ஒப்பிட்டு பார்த்தால் பாதபெந்த அதிட்டான வகையில் பாதபெந்தம் என்ற முதல்வகை அதிட்டான வகையை சாா்ந்த அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. அதிட்டானத்தின் வர்கங்கள் முறையே கீழ் இருந்து மேலாக உபானம், ஜெகதி, எண்பட்ட குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, கம்பு என அங்கங்கள் அளங்காரபடுத்தி அதிட்டானம் அமைக்கப்பட்டுள்ளது. அதிட்டான கண்டத்தில் மேல் வரக்கூடிய பாத வர்க்கத்திற்கு இணையாக களபாதங்கள் காட்டப்பட்டுள்ளது. கீழ் இருந்து மேலாக ஜெகதி, குமுதகம், பட்டிகை ஆகிய அங்கங்களில் கல்வெட்டுகள் உள்ளன.

## பாதம் (சுவர்)

பாதம் என்பது, அதிட்டான மேல்மட்டத்திலிருந்து உத்திர கீழ்மட்டம் வரை கட்டப்படும் கட்டடமாகும். இதனை பாதம் என்றும்,

பித்தி என்றும் சொல்வதுண்டு. இவ்வுறுப்பே கட்டடச் சுவர் பகுதியாகும். கருவறையின் பின் ஆறு அரைத்தூண்களும் மற்ற இரு பக்கங்களில் நான்கு அரைத்தூண்களும் காட்டப்பட்டுள்ளன. இக்கோயிலில் தேவகோட்டம் இன்றி அமைக்கப்பட்டுள்ளது. சுவர்பகுதியில் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன.

## பிரத்தரம்

கருவறைக் கட்டடத்தில் சுவர்ப்பகுதிக்கு மேல் மூடுவதற்காக கூறையாகப் பயன்படும் உறுப்பு பிரத்தரமாகும். பிரத்தரம் என்ற சொல்லுக்கு மாற்றுப் பெயர்கள் உண்டு. அவை, கபோதகம், பிரஸ்தரம், மஞ்சம், பிரச்சாதனம், சோபானம், விதானம், வலபி, மத்தவாரணம், விடாணம், லூபம் என்பவை. பிரஸ்தரம் என்ற உறுப்பு மூன்று சிறு அடுக்குகளை உடையதாகும். அவை கீழிருந்து மேலாக உத்தரம், கபோதம், வியாழம் என்று கட்டப்பட்டுள்ளது. உத்தரம் என்ற உறுப்பு மூன்று சிறு வர்கங்களை உடையதாகும். அவை கீழிருந்து மேலாக முறையே உத்தரம், கம்பு, எழுதகம், வாஜனம் என்றும் காட்டப்பட்டுள்ளது. வியாழம் என்ற மேல் உறுப்பில் ஆலிங்கம், அந்தரி, பிரதி, வாஜனம் என்று உறுப்புகள் கீழ் இருந்து மேலாக அமைக்கப்பட்டுள்ளன. இப்பிரதி வர்க்கங்களில் வியாழங்களை வரிசைப்படுத்தி அழகுபட அமைத்து கட்டப்படுவதால் இவ்வுறுப்பிற்கு ‘வியாழவரி’ என்று பெயர் பெற்றுள்ளது.

## கண்டம் (கிரீவம்)

கண்டம் என்று சொல்லப்படுகின்ற அங்கமானது பிரஸ்தரத்திற்கு மேலும் சிகரத்திற்கு கீழும் வரக்கூடியவை. இக்கோயில் கிரீவம் நீள் சதுரவடிவில் அமைத்து, நான்கு பக்கங்களில் விமான கோட்டங்கள் கொண்டு கட்டப்பட்டுள்ளது. கிரீவத்திற்குரிய வர்க்க அலங்காரங்கள் யாவும் உரிய முறையில் காட்டப்பட்டுள்ளன.

## சிகரம் ஆயத சதுரம்

கண்டத்தின் மேல் கலசத்திற்கு திண்ணையாக அமைக்கக் கூடிய அங்கத்திற்கு சிகரம் என்று பெயர். இச்சிகரமானது நீள்சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. கண்டம் எவ்வமைப்பை பெற்றுள்ளதோ அதே வடிவமைப்பில் தான் மேலே வரக்கூடிய அங்கம் இடம் பெறும் என்பது

அய்யம்மில்லை. வேறு வடிவில் மாறாது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சிகரத்தில் கண்டத்தின் கோட்டங்களுக்கு மேல் மகாநாசிகளும், லலாட நாசிகளும் கொண்டு கட்டப்பட்டுள்ளன. சிகரத்திற்கு வரக்கூடிய அலங்கார உறுப்புகள் யாவும் காட்டப்பட்டுள்ளன.

## கலசம் (ஸ்தூபி)

சிகரத்தின் மகா பத்மத்தின் மேல் மட்டத்தில் கலசம் இடம் பெற்றுள்ளது. கலசமானது சுதையால் செய்யப்பட்டுள்ளது. கலசத்திற்க்கென்று கைக்கொண்ட அலங்கார உறுப்புகள் யாவும் குடம், மேல்கழுத்து, சில்லு, குட்மலம் என்று அங்கங்கள்யாவும் காட்டப்பட்டுள்ளன. இக்கலசத்தின் வடிவமானது தொண்டை மண்டல கலைபாணியை ஒத்துள்ளது. இவ்வாறு கட்டடக்கலை பாணியை ஒத்து பார்க்கும் பொழுது இக்கோயில் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டுள்ளன என்பது அறிய முடிகிறது.

## அர்த்த மண்டபம்

கருவறைக்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட பகுதி 'அர்த்தமண்டபம்' ஆகும். ஆயதசதுரவடிவில் அமைக்கப் பட்டுள்ளது. விமானத்திற்குறிய கட்டட அங்கங்கள் யாவும் இடம் பெற்றுள்ளன.

## முகமண்டபம்

அர்த்தமண்டபத்திற்கு முன் முகப்பில் கட்டப்படுவதால் இவற்றிற்க்கு 'முகமண்டபம்' என்று பெயர். இம்மண்டபம் ஆயதசதுர வடிவில் உள்ளன. கருவறைக்குறிய அனைத்து உறுப்புகளையும் பெற்றுள்ளன. ஒரே தரைதளம் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. கருவறைக்குறிய அதிட்டானம், பாதம், பிரஸ்தரம் ஆகிய அங்கங்களைக் கொண்டுள்ளது. முகமண்டபத்தில் வடக்கு முகமாக கருவறைக்கு செல்லும் நுழைவு வாயில் அமைக்கப்பட்டுள்ளது. பாதவர்கங்கள் இன்றி காணப்படுகின்றன. இம்முகமண்டபத்தில் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன.

## திருமாளிகைபத்தி

கருவறைச்சுற்றி உருளைத்தூண்கள் கொண்டு உபபீட அங்கத்துடன்கட்டப்பட்டுள்ளன. முதல்திருச்சுற்றுசுவர்பகுதியையொட்டி தூண்களுடன் கூடிய மண்டபம் போன்று அமைக்கப்படும் அங்கம்

'திருமாளிகைபத்தி' ஆகும். ஒவ்வொரு உருளைதூண்களின் மேல் வெட்டு போதிகையானது உத்தரத்திற்கு ஏற்றாற்போல் மேல் தாங்கக்கூடிய விதானம் அமைக்கப்பட்டுள்ளது. 28 உருளை தூண்களும் 4 சதுர தூண்களும் உள்ளன. வடகிழக்கு மூலையில் ஆழ்வார்கள் பீடத்தின் 15 ஆழ்வார் சிலைகள் நின்றநிலையிலும் அமர்ந்த நிலையிலும் வைக்கப்பட்டுள்ளன. வடமேற்கு மூலையில் மண்டபத்தூண்கள் இருபக்கம் சுவர் அமைத்து கருவறையின் அங்கமாக தாயார் சன்னதி கிழக்கு நோக்கி அமைக்கப் பட்டுள்ளது.

முதலாம் திருச்சுற்று சுவர்

திருச்சுற்று சுவர் பகுதியானது உயரமாக கட்டப்பட்டு விமானத்திற்குரிய அங்கங்களை பெற்றுள்ளன. அவைகள் முறையே அதிட்டானம், பாதம், பிரஸ்தரம் என்றவாறு இடம் பெற்றுள்ளன. அதிட்டானம் பாதபெந்த வகையைச் சார்ந்தது கீழ்முதல் உபானம், ஜெகதி, எண்பட்ட குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, கம்பு என்று வர்க்க அலங்காரத்துடன் அழகுமிளிற அமைக்கப்பட்டுள்ளன. அதிட்டானகண்ட பகுதியில் கலபாதம் ஒவ்வொரு அரைத்தூண்களின் கீழும் காட்டப்பட்டுள்ளன. ஜெகதி, குமுதம், பட்டிகை ஆகிய வர்கங்களில் கல்வெட்டுகள் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு துவாரங்கள் கொண்ட முதன்மை நுழைவுவாயில் மற்றும் உபதுவாரம் என்று இரு வாயில்கள் உள்ளன. உபதுவாரத்தின் வாயிற்கதவு மரத்தால் அமைக்கப்பட்டு கிழக்கு பக்கம் இரண்டு தூண்களைக் கொண்ட மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அதிட்டானம் மற்றும் பாதம் (சுவர் பகுதி) ஆகிய பகுதிகளில் மருத்துவத்திற்குறிய கல்வெட்டு குறிப்புகள் வடகிழக்கு இருபுறத்திலும் வெட்டப்பட்டுள்ளன. சுவர்பகுதியில் பத்திகள் முறையே அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. இவ்வரைத் தூண்கள் நான்கு திக்குகளிலும், ஒருமித்தமாக வடிவமைக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன. கபோதகம் என்ற அங்கம் இடம்பெற்று அவற்றிற்குறிய வர்க்கவரிகள் யாவும் அமைக்கப்பட்டு திருமாளிகை பத்தியாக பாவுக்கற்கள் கொண்டு முதல் திருச்சுற்று முழுவதும் மூடப்பட்டு மண்டபம் போல் காட்சியளிக்கிறது.

## முதன்மைவாயில்

முதலாம் திருச்சுற்றில் ஸ்ரீ அப்பன்வெங்கடேச பெருமாள் சென்று வணங்க வாயில் அமைக்கப்பட்டுள்ளது. வாயில் அமைப்பானது திருச்சுற்று சுவர்பகுதியில் இருந்து முகபத்ரம் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது ஆலயத்திற்குறிய வாயில் லட்சணம் யாவும் காட்டப்பட்டுள்ளன. கருங்கல்லில் நிலைக்கால்கள் வர்க்க அலங்காரத்துடன் காட்டப்பட்டுள்ளன. வாயிற்கதவு மரத்தால் வேயப்பட்டு, தொங்கு மணிகள் கொண்டு அழகுபடுத்தியுள்ளனர். வாயில் (நீட்ச்சி) கொண்டு அதிட்டானம், அரைத்தூண்கள், கபோதகம், என்று வர்க்க அலங்காரத்துடன் அமைத்துள்ளனர். அரைத்தூண்களில் பாதவர்கம் இடம் பெற்றுள்ளன. அவைகள் போதிகை, வீரகண்டம், பலகை, கண்டம், குடம், கண்டம், ஆஸ்யம், பத்மம், விருத்தம், கலசம் இடைகட்டு, தொங்குமாலை என்று வர்க்க அலங்காரங்கள் முதன்மை வாயில் துவாரம் மட்டும் வேறுபடுத்தி மிகைபடுத்தி காட்டப்பட்டுள்ளது. முதன்மைவாயில் இருபக்கங்களிலும் அசுவபாதத்தில் நின்றவாறு துவாரபாலகர்கள் 6 அடி உயரம் கொண்டு கருங்கல்லால் வடிவமைத்து மிகவும் கம்பீர தோற்றத்துடன் திரிபங்கநிலையில் காட்டப்பட்டுள்ளது.

## மகாமண்டபம்

மகாமண்டபம் முதல் திருச்சுற்று ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. அப்பன் வெங்கடேசபெருமாள் சன்னதிக்கும், கரியமாணிக்கபெருமாள் சன்னதிக்கும் ஒரே மண்டபமாக கட்டப்பட்டுள்ளன. மண்டபத்திற்குறிய அங்கங்கள். உபபீடம், தூண், கொடுங்கை ஆகிய மூன்று அங்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வங்கங்கள் அனைத்தும் கிழக்கு முகம் மட்டும் காண்பிக்கப் பட்டுள்ளன. மற்ற மூன்று பக்கங்களில் சுவர்பகுதியாக காட்டப்பட்டுள்ளன. 16 உருளை தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இம்மண்டபம், அதில் முன் மூன்று தூண்கள் மட்டும் சிம்மம் தூண்கள் விதானத்தை தாங்கும் தூண்களாக அமைக்கப்பட்டுள்ளன. இம்மூன்று சிம்மதூணில் மட்டும் பாதவர்கங்கள் முறையாக காட்டப்பட்டுள்ளன. சிம்மம் முன் இரண்டுகை ஊன்றியும் பின்இரண்டுகால் மடக்கி அசுவபாதத்தின்

மேல் உட்கார்ந்தவாறு தோற்றமளிக்கின்றன. மண்டபத்தில் முதல் அங்கமான உபபீடம் மிகவும் அலங்காரத்துடன் அமைக்கப்பட்டுள்ளன முறையே உபானம், பத்மம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, கம்பு, எனக்கொண்டு அஷ்டாங்க உபபீட வகையைச்சார்ந்த உபபீடமாக அமைக்கப்பட்டுள்ளது. மண்டபம் எளிதாக ஏறிச்செல்ல ஏதுவாக சோபானம் அமைக்கப்பட்டுள்ளது. இருபக்கத்திற்கு படிச்சுருள் கல் அமைத்துள்ளனர். தூண்கள் மேல் விதானத்தை தாங்கும் வண்ணமாக உத்தரம் அமைத்து அதன்மேல் கொடுங்கையும் கருங்கல்லால் கட்டப்பட்டு வியாழம் என்று சொல்லக்கூடியஅங்கம் பட்டையாக காண்பிக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் கூரை பகுதி பாவுகல்லால் வேயப்பட்டுள்ளன. மூலைகளில் விசிரிபாவுக்கல் கொண்டு கட்டுமான நுணுக்கங்கள் இடம் பெற்றுள்ளன. இம்மண்டபம். மிகவும் எழிலுற அமைக்கப்பட்டுள்ளது. முதல்திருச்சுற்று சுற்றி நடைபாதயானது கருங்கல் கொண்டு பரப்பப்பட்டு கோயிலைச் சுற்றிவர எளிதாக்கப்பட்டுள்ளது.

### இரண்டாம் திருச்சுற்று

இக்கோயில் இரண்டாம் திருச்சுற்றுப்பாதையில் பரிவார கோயில்கள், மண்டபங்கள், பலிபீடம், த்வஜஸ்தம்பம், டோலோத்சவ மண்டபம், மற்றும் கோயில் உள்செல்வதற்கு கிழக்கு முக வாயிற்கோபுரம் முடிவுற்ற நிலையில் கட்டப்பட்டுள்ளன. திருமதில் சுதையினால் கட்டப்பட்டுள்ளது.

### வாயிற்கோபுரம்

இக்கோயில் இரண்டு திருச்சுற்றுகளைக்கொண்டுள்ளது. இரண்டாம் திருச்சுற்றில் கோபுரம் கிழக்கு திசையில் அமைக்கப் பட்டுள்ளது. இக்கோபுரம் கோபுரத்திற்குறிய அங்கங்களான உபபீடம், அதிட்டானம், பாதம் ஆகியன கொண்டுள்ளன. இருபக்கம் வாயிற் கதவுக்குறிய நிலைக்கால் மட்டும் நின்றநிலையில் உள்ளது. கோபுரத்திற்குறிய ஆயாமம், விஸ்தாரம் என்ற அளவு முறையில் கட்டப்பட்டுள்ளது. உபபீடம் வர்கங்களுடன் கொண்டுள்ள அதிட்டானம் ஸ்தான மட்டம் வரை பட்டியாக காணப்படுகிறது. பாதம் என்று பகுதி முடிவுற்றநிலையில் பாதிஅளவு உள்ளன. விஸ்தாரவசத்தில் திருச்சுற்று சுவர் பகுதி முட்டிய நிலையில் கட்டப்பட்டுள்ளது.

### மடப்பள்ளி

இரண்டாம் திருச்சுற்றில் தென்கிழக்கு மூலையில் கட்டப்பட்டுள்ளது. இறை உருவங்களுக்கு உணவு படைக்க வேண்டி இம்மடப்பள்ளி அமைக்கப்பட்டுள்ளது. இம்மடப்பள்ளி மேற்கு நேக்கி கட்டப்பட்டுள்ளது.

### வீரஆஞ்சநேயர் மண்டபம்

இரண்டாம் திருச்சுற்று வடகிழக்கு மூலையில் மேற்கு நோக்கி கட்டப்பட்டுள்ளது. மண்டபத்திற்குறிய அங்கங்கள், உபபீடம், சித்திரகண்டகால் தூண், கூறை போன்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளன. உபபீடமானது திரி அங்கம் என்று சொல்லக்கூடிய உபானம், கண்டம், பட்டிகை ஆகிய அங்கங்களுடன் கட்டப்பட்டு அதில் எளிதாய் ஏறுவதற்கு முன் படிகட்டுகள் அமைத்துள்ளனர். இம்மண்டபம் மூன்று பக்கம் சுவர் கட்டப்பட்டுள்ளன. ஆறு தூண்களைக் கொண்டு கட்டப்பட்டு அதில் பின்பக்கம் உள்ள தூண்களில் சுவர் அமைத்து அனுமன் கருவறையாக வழிபட்டு வருகின்றனர். ஒவ்வொரு தூண்களின் மேல் போதிகையும் அதன் மேல் உத்தரம் காண்பிக்கப்பட்டு பின்பு பாவுக்கல்லால் கூறையை மூடிக் கட்டப்பட்டுள்ளன. இம்மண்டபம் கபோதக தோற்றமில்லாமல் மொட்டையாக கட்டப்பட்டுள்ளன. மண்டபத்தூண்கள் யாவும் பக்கத்திற்கு ஏற்றார் போல் புடைப்புச்சிற்பங்களும் அலங்கார கொடிகருக்குகளும் காட்டப்பட்டுள்ளன.

### வாகன மண்டபம்

ஆஞ்சநேயர் மண்டபத்தின் தெற்கு பக்கசுவர் ஒட்டியே இம்மண்டபம் ஒரே பீடத்தைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. நான்கு கால் கொண்டு இம்மண்டபம் எளிதாய் தோற்றமளிக்கின்றது. மேற்கு நோக்கி அமைக்கப்பட்டு பக்க சுவற்றில் அரைத்தூண் காணும் போல் மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

### காஞ்சிவரதர் மண்டபம்

தென்கிழக்கு மூலையில் மடப்பள்ளி எதிரே வடக்கு நோக்கி இம்மண்டபம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தைமாதம் மாட்டுப்பொங்கல் அன்று நடைபெறும் பாரிவேட்டை விழாவின் போது காஞ்சிவரதர் இம்மண்டபத்தில் நிலைப்பாடு அடைவதால், இது

காஞ்சி வரதர் என்ற பெயர் பெற்றது. இம்மண்டபம் மூன்று பக்கம் சுவர் கொண்டு ஆறு தூண்களுடன் உபபீடத்தின் மேல் ஆதாரமாக கொடுங்கையுடன் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபம் முற்றிலும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது.

## உபபீடம்

உபபீடம் முன்பக்கம் மட்டும் வர்கத்துடன் கட்டப்பட்டுள்ளனர். கல்யாண காரிக்கை என்ற பெயர் கொண்ட உபபீடவகையைச் சார்ந்ததாகும். அவை முறையே, உபானம், பத்மம், கம்பு, பத்மம், பட்டிகை, பத்மம், கம்பு, கண்டம், கம்பு, பத்மம், மகாபட்டிகை, மகாபட்டிகையானது கபோதகம் போன்று அமைத்து, அதில் அலங்கார வேலைபாடுகள் மற்றும் வியாழவரி அங்கம் இடம்பெற்று அழகு காணப்படுகிறது. மற்ற மூன்று பக்கங்களில் உபபீடத்தில் பட்டிகை காண்பிக்கப்பட்டு வேறுபடுத்தி உள்ளனர். பத்மம், கம்பு போன்ற அலங்காரங்கள் மண்டபத்தின் அழகை மிகைப்படுத்திக் காட்டுகின்றன. உபபீடத்தில் படிகட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

## தூண்கள்

சித்திரகண்டகால் கொண்ட தூண் அமைத்துள்ளனர் அதில் கீழ் இருந்து மேலோக அசுவபாதம், செவ்வகம், இடைகட்டு, நாகபந்தம், 16 பட்டம், சதுரம், 16 பட்டம் சதுரம், சதுரம் எனக்கொண்டு தூண்களில் ஒவ்வொரு பக்கங்களிலும் கடவுள்களின் புடைப்புச்சிற்பம், கொடிகருக்குகள் என பலவகையான சிற்பங்கள் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. தூண்கீழ் வரக்கூடிய அசுவ பாதத்தினை பலபிரிவுகளாக பிரித்து அப்பாதத்தை அலங்கார படுத்தும் வண்ணமாக உபானம், பத்மம், கம்பு, கண்டம் கம்பு, குமுதம், கம்பு கண்டம், கம்பு, கபோதம், வியாழம் என அப்பீடத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தூணிற்கு அழகு சேர்க்கும் வண்ணமாகவும் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூண்கள் மீதும் நீண்டவாக்கில் பூ போதிகை அமைக்கப்பட்டு இரு பக்கங்களில் தொங்கு வண்ணமாக போதிகை அழகுபடுத்தி காட்டப்பட்டுள்ளன.

## கொடுங்கை / கபோதகம்

மண்டபம் மூடும் கூறை பகுதியானது இரண்டு வகையாக கட்டுமானத்தில் காணப்படுகின்றன. கபோதகம் சுவர் பகுதியின்

மேல்வரக்கூடியது கொடுங்கை மண்டபம் அழகை மேம்படுத்தவும் இதனோடு முன்பக்கம் மட்டும் உபபீடம் மற்றும் தூண்கள் இவற்றிற்கு ஏற்றார் போன்று கொடுங்கை இவ்விடத்தில் இடம்பெற்று மண்டபம் அழகுப் படுத்தி கட்டப்பட்டுள்ளதை நன்கு உணரலாம். வியாழவரியின் முன்பக்கம் மட்டும் புடைப்பு சிற்பமான வியாழங்கள் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. சுவர்பகுதியில் வரக்கூடியக் கபோதகத்தில் பக்கத்திற்கு இரண்டு நாசிக் கூடுகள் இடம் பெற்றுள்ளதையும் இம்மண்டபத்தில் காணலாம்.

## ஊஞ்சல் மண்டபம்

திருவிழாக்காலங்களில் இறைவன்திருவுரு திருவீதி உலா வந்த பின்பு ஊஞ்சலில் மக்கள் பார்வையில் வைத்து ஆராதனை செய்யும் மண்டபம் ஆகும். மண்டபம் மூன்று அங்கங்களைக் கொண்டு முறையே உபபீடம், சித்திரகண்டகால், கொடுங்கை என அமைப்பைக் கொண்டு விளங்குகிறது.

## சுந்தரவல்லி தாயார் சன்னதி

பரிவாரக்கோயில்களில் ஒன்றான இச்சன்னதி தென்மேற்கு மூலையில் வடக்குநோக்கி கட்டப்பட்டுள்ளது. கருவறை, முகமண்டபம், மகாமண்டபம் எனக்கொண்டு கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ளன. கல்ஹாரம் என்று சொல்லக்கூடிய மூன்று அங்கங்கள் மட்டுமே உள்ளன. விமானம் இன்றி மொட்டையாகக் கட்டப்படும் கட்டுமானத்திற்கு கல்ஹாரம் என்று பெயர். தரைதளம் அதிட்டானத்திற்கு பதிலாக உபபீடவகை அமைத்துள்ளனர். முறையே உபானம், கண்டம், பட்டிகை என மூன்று அங்கங்களைக் கொண்டு திரியாங்க உபபீடமாக இடம்பெற்றுள்ளது. இவ்வுபபீடவகை கருவறை, முகமண்டம் மகாமண்டபம் ஆகியவற்றிற்கு கட்டப்பட்டுள்ளன. மகாமண்டபத்திற்கு சற்று உயரம் குறைவாக அமைத்து மண்டபத்தினை வேறுபடுத்தி காட்டியுள்ளனர். ஏறிசெல்வதற்காக எளிதாக படிகள் (சோபானம்) அமைத்து இருபக்கம் சுருள் கல் கட்டப்பட்டுள்ளன.

பித்தி என்று சொல்லக்கூடிய சுவர்பகுதி கருவறை, மற்றும் முகமண்டபம் ஆகியவற்றினை இணைத்துக் கட்டப்பட்டுள்ளது கோட்டங்கள் சுவரில் ஏதுமின்றி வெறுமனே அரைத்தூண்கள் சுவர்ப் பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது.

கருவறை, முகமண்டபம் ஆகியவற்றில் கபோதகம் மட்டும் உரிய அமைப்புகளுடன் கட்டப்பட்டுள்ளன. கபோதகத்தில் அல்பநாசிகள் இடம்பெற்றுள்ளன. கருவறையில் நான்கு அல்பநாசிகளும் முகமண்டபத்தில் இரண்டு அல்பநாசிகளும் எனக்கொண்டு மூன்று பக்கங்களின் மொத்தம் பதினாறு அல்பநாசிகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு நாசிக் கூடுகளும் கீழ் பித்தி பகுதியில் அரைத்தூண்கள் இருப்பது போல் வடிவமைக்கப்பட்டுள்ளன. வியாழவரியில் வியாழம் இன்றி அமைக்கப்பட்டுள்ளது. கோயில் முதன்மை வாயில் முகமண்டபத்தில் மரத்தால் ஆன கதவுகள் பொறுத்தப்பட்டுள்ளன.

### மகாமண்டபம்

இம்மண்டபத்தில் உள்ள ஒவ்வொரு தூண்களின் மேல் 'ட' வடிவில் போதிகை அமைத்து மேல்விதானம் தாங்கும் வண்ணமாக கட்டப்பட்டுள்ளது. மரத்தால் செய்தார் போன்று இம்மண்டபக் கொடுங்கைக் கருங்கல்லினைக்கொண்டு கட்டப்பட்டுள்ளன. இம்மண்டபத்திற்கு மட்டும் மூன்று பக்கங்களில் கொடுங்கை அமைத்துள்ளனர், வியாழ வரியில் வியாழம் இன்றி முழுவதும் கருங்கல்லாலே கட்டப்பட்டுள்ளது. தூண்கள் யாவும் சித்திரத்தூண்களால் காண்பிக்கப்பட்டு மண்டபத்தின் அழகினை மிகைபடுத்திக் கோயிலின் தோற்றம் பொலிவுற கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொருத் தூண்களின் பக்கங்களில் முறையே சிம்மம், கொடிகருக்குகள் எனக்கொண்டு தூண்கள் எழில் மிகுத்தோற்றத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### கரியமாணிக்கப்பெருமாள் சன்னதி

இக்கோயில் வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கிய கல்ஹாரமட்டத்துடன் கருங்கல்லால் அலங்காரங்களுடன் கட்டப்பட்டுள்ளது. கருவறை, முகமண்டபம் என்ற அமைப்பில் உள்ளது. கோட்டம், இதில் அரைத்தூண்களும் இடம் பெற்றுள்ளன. கோயிலுக்குரிய உயரம் முறையே அங்கங்களான அதிட்டானம், பாதம், பிரஸ்தரம், தோள் எனக்கொண்டு கட்டப்பட்டுள்ளன. உத்தரமட்டத்தில் பாவுக் கற்களைக்கொண்டு மூடப்பட்டு, கபோதகம் இன்றி கட்டப்பட்டுள்ளது இக்கோயில்.

### உபபீடம்

'ஸ்ரோனிபெந்தம்' என்று வடமொழியில் சொல்லக்கூடிய

அமைக்கப்பட்டுள்ளது. வர்கங்களின் முறையே உபானம், உபஉபானம், பத்மம், கம்பு, ஜெகதி, எண்பட்ட குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, கம்பு என்ற அலங்கார வர்கங்களுடன் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. இதில் பத்மம், என்று சொல்லக்கூடிய பகுதியே பல இதழ்கள் விரிந்து மடிந்தார் போன்று காண்பிக்கப் பட்டுள்ளது. அதிட்டான கண்டபகுதியில் கலபாதம் என்று சொல்லக்கூடிய பாதங்கள் அரைபாகம் காண்பிக்கப்பட்டுள்ளன. வரிகற்கள் எளிதாக அடுக்குவதற்கு ஏற்றவாறு உபானம் மற்றும் ஜெகதி ஆகிய பகுதிகளில் கடபாறை கட்டை என்று சொல்லக்கூடிய சிறுசிறு முகப்பு கல்முனைகள் விடப்பட்டு, அதை இறுதியாக சீர் அமைக்காமல் அப்படியே அமைக்கப்பட்டுள்ளது. ஜெகதி, குமுதம், பட்டிகை ஆகியப் பகுதிகளில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

## வேதிகை

வேதிகை என்று சொல்லக்கூடிய அங்கம் இக்கோயிலில் இச்சன்னதியில் மட்டும் காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கமானது பாதத்திற்கு கீழ், அதிட்டானத்திற்கு மேல் அமைக்கப்படுகின்ற பகுதியாகும். பாதவர்கத்திற்கு அழகு சேர்ப்பதால் இதனைப் 'பாத பூசணம்' என்றும் அழைப்பர். வேதிகை மூன்று இடங்களில் அமைக்கப்படுகின்றன, அவை முறையே அதிட்டான மேல்மட்டம், பாத அடிமட்டம், நிலங்கள் தோறும் பிரஸ்தரத்திற்கு மேல் மட்டத்தில் கண்டத்தின் அடி பாகத்திலும் அமைக்கப்படுகின்றன. ஆனால் இக்கோயிலில் அதிட்டானத்திற்கு மேல் பாதத்திற்கு கீழாக வேதிகைக்குறிய பகுதி மட்டும் உள்ளது. இச்சன்னதி கட்டட அமைப்பை நோக்கும் போது இக்கோயில் முதன்மைச் சன்னதி கட்டிய பின்னர் கட்டப்பட்டுள்ளது என்பதை எளிதாக அறிய முடிகிறது.

## பாதம்

பாதம், பித்தி, சுவர் எனக்கொண்டு பாதத்திற்கு பல பெயர்கள் சிற்ப சாஸ்த்திர நூல்களில் கூறப்பட்டுள்ளன. இக்கோயில் கருவறை, முகமண்டபம் ஆகிய சுவற்றின்பகுதியில் அரைத்தூண்கள் அமைத்து போதிகை, வீரகண்டம், பலகை, கண்டம், குடம், கண்டம், ஆஸ்யம், பத்மம், விருத்தம், கலசம், இடைகட்டு, கட்டுமாலை என மேல் இருந்து கீழாக அனைத்து உறுப்புகளையும் கொண்டு தூண்கள் அழகுபடுத்தப்பட்டுள்ளன. கோயில் கட்டடக்கலை வளர்ச்சியினை இக்கோயிலில் மட்டும் காணலாம்.

## கோட்டங்கள்

கருவறையின் தெற்கு, வடக்கு, மேற்கு, முகமண்டபத்தின் தெற்கு, வடக்கு பகுதிகளில் கோட்டத்திற்குறிய அங்கங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் கோட்டங்களில் இறை உருவங்கள் வைப்பதற்கு ஏற்ற வண்ணம் இல்லாமல் வெறும் சுவர் பகுதியாகக் கட்டப்பட்டுள்ளன. கோட்டத்திற்குறிய அனைத்து அங்கங்களும் இடம்பெற்றுள்ளன. இக்கோயில் சோழர் காலத்து கட்டடபாணியை ஒத்து கட்டப்பட்டுள்ளன. 'காஸ்யபசிற்ப நூலில்' தோரணங்கள் மூன்று வகைப்படும் என்றும் அவை ஒன்று சுவரில் செய்யப்படும் தோரணம், இரண்டாவது வாயிலில் செய்யப்படும் தோரணம், மூன்றாவது ஸ்தம்பங்களில் செய்யப்படும் தோரணம், என்று கூறுகிறது. மேற்குறிப்பிட்ட தோரண வகையில் முதலாவது வகை தோரணம் இக்கோயிலில் காணப்படுகின்றன. இப்பெயர் காரணங்கள் யாவும் அவற்றின் அமைப்பை கருத்தில் கொண்டு சொல்லப்படுகின்றன. தோரணங்களில் செய்யப்படும் அலங்காரங்களையும், உருவங்களையும் கருத்தில் கொண்டு தோரணம் மேலும் மூன்றுவகையாகப் பிரிக்கலாம் அவை முறையே பத்ரதோரணம், மகரதோரணம், சித்திரதோரணம் என்பவையே ஆகும். ஆனால் இக்கோயிலில் தோரணம் அலங்காரமின்றி காணப்படுவதால் எவ்வகையை சார்ந்த தோரணம் என்று குறிப்பிடமுடியவில்லை.

## பலிபீடம்

இக்கோயிலில் இரண்டாம் திருச்சுற்றில் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் எதிரில் வடகிழக்குமூலையில் மூன்று அங்கங்கள் கொண்டு சற்று உயரமான கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. உபபீடம், அதிட்டானம், பத்மபீடம் என கீழ் இருந்து மேலாக வடிவமைக்கப்பட்டுள்ளன. காசியபசிற்ப நூலில் கூறப்பட்டுள்ள அஷ்டாங்க உபபீடம் இடம்பெறுள்ளன. எட்டு அங்கங்கள் இடம் பெற்றுள்ளதால் அஷ்டாங்க உபபீடம் என்று கூறுகின்றனர் அவைமுறையே உபானம், பத்மம், கம்பு, கண்டம், கம்பு, மேல்பத்மம், வாஜனம், கம்பு எனக் கொண்டு வர்கங்கள் யாவும் தனித்தனி பெயர்களுடன் இடம்பெற்றுள்ளன. பத்மங்களுக்கு அமைப்பு பிரித்து காட்டப்பட்டுள்ளன. பலிபீடம் ஆதாரமாக தங்குவதற்கு முதல்

உறுப்பாக உபஉபானம் அமைக்கப்பட்டுள்ளன அதில் மேல் பாகத்தில் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. கண்டபகுதியில் பத்திகள் பிரித்து அதில் தூண்கள் உள்ளவாறு அரைத்தூண்கள் வர்கங்கள் இன்றி காட்டப்பட்டுள்ளன. உபபீடத்தை ஆதாரமாக கொண்டு அதிட்டானம் இடம் பெற்றுள்ளன. அவற்றை புஷ்பபுஷ்களம் என்று சிற்ப நூலில் கூறப்பட்டுள்ளன. அவ்வர்கங்கள் உபான மேல்மட்டத்திலிருந்து முறையே உபானம், பத்மம், கம்பு, ஜெகதி, பத்மம், கம்பு, கண்டம், பத்மம் , விருத்தகுமுதம், பத்மம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, பத்மம், கம்பு என்று வர்கங்கள் யாவும் பீடத்தினை அழகுபடுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளன. அதிட்டான கண்டபகுதியில் பத்திகள் பிரித்து பக்கத்திற்கு அரைதூண் போன்று சதுர வடிவில் 6 தூண்கள் வீதம் 24 அறை தூண்களாக காண்பிக்கப்பட்டுள்ளன. அதிட்டானத்தின்மேல் பத்மபீடமானது மையப்பகுதியில் வட்ட வடிவில் வடிவமைத்துள்ளனர்.

கொடிமரம்

கொடிமரம் என்பதை வடமொழியில் 'துவஜஸ்தம்பம்' என்பர். கொடிமரம், அமைக்க – சந்தனம், தேவதாரு, சண்பகம்,தேக்கு முதலிய மரங்கள் உயர்தரமானவை ஆகும்.

சிவன் கோயில் கொடிமரத்தில் மேல் பகுதியில் நந்தியும், விஷ்ணு கோயிலாக இருந்தால் கருடனும் அமைப்பர்.

கொடிமரம் பாகம், 1/5 பாகம், பூமிக்கடியில் இருக்கும்படி நடுவர். இதன் அடிப்பாகத்திலிருந்து உச்சிவரை ஏழு பாகமாகச் சதுர, கோண, விருத்த வடிவங்களில் அமைப்பர். கொடிமரம் அடிபாகம் சதுரமாக இருக்கிறது. இது பிரம்மபாகம் ஆகும்.

இதன் மேல் உள்ள பாகம் எண்கோணமாக இருக்கும். இது விஷ்ணு பாகமாகும். இதற்கு மேல் உருண்டு நீண்ட பாகம் உருத்திரனைக் குறிக்கும். இது அழித்தல் தொழிலின் அறிகுறியாகும். எனவே கொடிமரம் மும்மூர்த்திகளையும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களையும் உணர்த்துகிறது என்பர். இத்திருத்தலத்தின் கொடிமரம் கரிய மாணிக்கப் பெருமானின் எதிர்ப்புறத்தில் மேற்குத் திசையை நோக்கி அமைந்துள்ளது.

❋❋❋

# கோயில் சிற்பங்கள்

## 1. மச்ச அவதாரம்

திருமாலின் பத்து அவதாரங்களில் முதலாவதான மச்ச அவதாரத்தின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. திருமால் நான்கு திருக்கைகளுடன் காணப்படுகிறார். பின்கைகளில் சங்கு சக்கரமும், முன் கைகளில் அபய, வரத முத்திரையும் கொண்டு விளங்குகின்றார். உடலின் மேற்பகுதி மனித வடிவமைப்புடனும், இடைக்குக் கீழ் உடலின் கீழ்பகுதி மீனாகவும் வடிக்கப்பட்டுள்ளது. தலையில் மகுடம், நெற்றியில் பட்டம், செவிகளில் பூக்கள், காதுகளில் மகரகுண்டலங்கள், கழுத்தில் பல்வேறு கழுத்தணிகள், மார்பில் யக்ஞோபவிதம் (பூணூல்), இடையில் கச்சு ஆகியன ஆடையணிகளாகக் காட்டப்பட்டுள்ளன.

## 2. திருமால்

தாமரைப்பீடத்தில் திருமால் நின்ற நிலையில் நான்கு திருக்கைகளில் பின்கைகள் சங்கு சக்கரம் ஏந்தியும், முன்கைகள் அபய வரத முத்திரை காட்டியும் அமைந்துள்ளார். தலையில் கிரீட மகுடம் அணிந்தவராய், நீள் காதுகளில் மகரகுழைகள் விளங்க, கைகளில் தோள்வளைகள், முன்வளைகள் அணியப்பெற்று, வயிற்றில் உதரபந்தம், மார்பில் முப்புரிநூல், கணுக்கால் வரை நீண்ட பட்டாடை அணிந்தவராய் சமபாத நின்ற நிலையில் கண்ணுறும் வகையில் காணப்படுகிறார்.

## 3. சூரியன்

இருகைகளில் தாமரை மலரைப்பிடித்தபடி நின்றநிலையில் உள்ளார். தலையில் கரண்ட மகுடம், நீள் செவி, பருத்த வயிற்றில் உதரபந்தம், நீள் பட்டாடை அணிந்து விளங்குகின்றார்.

## 4. அனுமன்

வானரசீரன் அனுமனின் சிற்பம் திரிபங்க நிலையில் காட்டப்பட்டுள்ளது. கிரீடமகுடம், காதுகளில் குண்டலங்கள், கைகளில்

வளைகள், தோள்வளைகள், முன்வளைகள், இடையில் அரையாடைக் கொண்டு மார்பில் வீரத்திற்கு உரிய சன்ன வீரம் அணிந்து உள்ளார். இருகைகளில் வலதுகையை வலது தொடையில் வைத்தபடியும், இடது கையை மேலே உயர்த்தியும் உள்ளார். அனுமனின் வால் உடலின் பின்புறம் மேல்நோக்கி நீண்டுள்ளது. கால்களில் வீரக்கழல்கள் அணிவிக்கப்பட்டுள்ளன.

## 5. ஆடல்பெண்

உடலையும் தலையையும் பின்னிலிருந்து முன்புறம் திரும்பியபடி சுழன்று ஆடும் ஆடல் பெண் உருவம் தஞ்சை பெரியகோயிலில் உள்ள ஆடல் மங்கையின் ஓவியத்தை சற்றே நினைவூட்டுகிறது. கைகளை மேலே உயர்த்தி இணைத்துப் பிடித்துள்ள கரணத்தில் உள்ள இப்பெண்ணின் நீண்ட சடை சுழன்றாடும் வேகத்தில் பின்புறம் விசிறிய நிலையில் பாங்குற அமைக்கப்பட்டுள்ளது.

## 6. அமர்நிலை சிம்மம்

விஜய நகர நாயக்கர் காலக் கலையை உணர்த்தும் வண்ணம் காட்டப்படும் அமர்ந்த நிலையில் சிம்ம உருவம் இங்கும் சித்தரிக்கப்பட்டுள்ளது. கால்களை விரித்துக் குத்திட்டு அமர்ந்த நிலையில் இருகைகளையும், குத்திட்ட கால்களுக்கிடையில் ஊன்றியபடி நேராக சிம்ம உருவம் காட்டப்படுகிறது.

## 7. கும்பம் (குடம்)

நன்கு அலங்கரிக்கப்பட்ட கும்பம் அகன்ற வாய்ப்பகுதியில் இருபுறமும் கும்பலதா போன்று வடிவமைப்பில் காட்டப்பட்டு உள்ளது.

## 8. சங்கு

திருமால் கையில் ஏந்தியுள்ள பாஞ்சன்யம் எனப்படும் சங்கு வட்ட வடிவ தாமரைப்பதக்கம் போன்ற அமைப்பில் இங்கு காட்டப்பட்டுள்ளது. சங்கினைச் சுற்றி இருபுறமும் வஸ்திர முடிச்சுக் காணப்படுகிறது.

## 9. சக்கரம்

திருமாலின் சக்கரமும் வஸ்திரம் சுற்றிக் காட்டப்பட்டுள்ளது.

## 10. கூர்ம அவதாரம் (ஆமை அவதாரம்)

திருமாலின் உடலின் மேற்பகுதி மனித உருவிலும் கீழ்ப்பகுதி ஆமையின் வடிவமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு திருக்கைகளில் திருமாலுக்குரிய சங்கு, சக்கரம், அபயம், வரதம் கொண்டு தலையில் கிரீட மகுடம் அணிந்து அலங்காரப் பிரியராய் காட்சி தருகிறார்.

## 11. ஆநிரைக் காவலன்

ஆயர்குலத்தை இந்திரனின் கோபத்தால் விளைந்த பெரும் மழையிலிருந்துக் காக்க வேண்டி குன்றினைக் குடையாகப் பிடித்த கோபாலனின் புடைப்புச் சிற்பம், வெகு நேர்த்தியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆயர்களுக்குரிய கொண்டை, அரையாடை, அணிவகைகள் இவற்றுடன் காட்சியளிக்கிறது. இச்சிற்பம் குழலூதும் கண்ணனின் இடது கை ஊரு ஹஸ்தமாயும், வலது கை கோவர்த்தன மலையைத் தூக்கி பிடித்தபடியும் காட்டப்பட்டுள்ளது.

## 12. தாமரைப் பதக்கமும், பிறைமதியும்

ஒரு தூணின் மேற்சதுரப் பகுதியில் அடுத்தடுத்தப் பக்கங்களில் தாமரைப் பதக்கமும், பிறைமதியும் காட்டப்பட்டுள்ளன. நான்கு இதழ்கள் கொண்ட தாமரைபதக்கம் சதுரத்தில் காட்டப்பட்டுள்ளன.

## 13. அன்னமும், அறுகோணமும்

தூண் ஒன்றின் போதிகைக்குக் கீழ் உள்ள மேற்சதுரப் பகுதியில் அடுத்தடுத்தப் பக்கங்களில் அன்னமும் அறுகோணமும் காட்டப்பட்டுள்ளன. இதில் அன்னம் சரியாகப் புடைக்கப்படாமல், கீறல் கோடுகளாகவேத் தெரிகின்றது.

## 14. தாமரைத் தண்டு

மொட்டுடன் கூடிய நீண்ட தாமரைத்தண்டு இரண்டும் இரு நாகங்கள் ஒன்றுடன் பின்னிப் பிணைந்து காட்சியளிப்பதைப் போல் வடிக்கப்பட்டுள்ளது.

## 15. காமச்சிற்பங்கள்

ஆண், பெண் இணைவு சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. நின்றநிலையில் உள்ள இச்சிற்பக்காட்சியில் பெண் நீண்ட சடையுடனும், ஆண் இடப்புறக் கொண்டையுடனும் காட்டப்பட்டுள்ளனர். ஆணின் இடமார்பிலிருந்து தோளின் பின்புறம் நீண்டவஸ்திரம் தொங்குகிறது. மற்றொரு சிற்பம், உடலை வளைத்து மடக்கியபடி பெண் காட்டப்பட்டுள்ளாள். ஆண் நின்ற நிலையில் உள்ளான். முன் சிற்பத்தைப் போன்றே கொண்டையும், ஆடையணிகளும் இவர்களுக்கும் அமைந்துள்ளன.

## 16. காளிங்க நர்த்தனம்

யமுனையாற்றில் கால்நடைகளுக்கும், ஆயர்களுக்கும் தொல்லை கொடுத்து வந்த ‘காளிங்கன்’ என்னும் நாகத்தை கிருஷ்ணன் அடக்கி காளிங்கன் மேல் நர்த்தனம் ஆடுகின்ற காட்சியினை மிகவும் சிறப்பான முறையில் செதுக்கியுள்ளனர். உச்சிக் கொண்டையிட்ட குழந்தை வடிவத்தில் பால கிருஷ்ணனாக இங்கு காட்டப்பட்டுள்ளான். ஊர்த்துவ ஜானுவில் கிருஷ்ணன் வலதுகாலை காளிங்கனின் உயர்த்திய தலைமீதும், இடதுகாலை மற்ற தலைகளின் மீதும் வைத்தவாறு, வலதுகை அபயமுத்திரை காட்டியவாறும், இடதுகை காளிங்கனின் வாலை உயர்த்திப் பிடித்தபடியும் நடனகோலத்தில் எழிலாக அமைக்கப்பட்டுள்ளது. இடையில் அரையாடையும், கிண்கிணியும், கைவளைகளும், செவிப்பூ, குண்டலங்களும், கழுத்தணிகளும் அணிகளாக அமைந்துள்ளன.

## 17. மயில்

நீண்ட தோகையுடனும், உச்சிக் கொண்டையும் அலகில் கொத்திய மலர்க் கொத்துடனும் மயில் ஒன்று காட்டப்பட்டுள்ளது.

## 18. ஆடல் பெண்

அரைமண்டி இட்டு ஆடும் நிலையில் காட்டப்பட்டுள்ள பெண் சிற்பத்தின் முகம் வலப்புறம் திரும்பியுள்ளதால் முகத்தின் ஒருபாதியை மட்டுமே நாம் காண்பது போல் உருவாக்கப்பட்டுள்ளது. குந்தள தலையலங்காரமும், நீள்காதுகளில் குண்டலங்களும், மார்புக்கிடையில் வளைந்து தொங்கும் முத்தாரமும், கண்டியும், கணுக்கால் வரை

நீண்டுள்ள முழுநீள ஆடையும், இடைக்கட்டும், மார்பில் கச்சும், கையணிகளும் கொண்டு ஆடல் பெண் விளங்குகிறாள். இடதுகையில் டோல முத்திரையும், வலதுகையில் மலரைப் பிடித்தவாறும் ஆடல் கரணத்தில் உள்ளாள்.

### 19. பின்னிப் பிணைந்த இருநாகங்கள்

ஒன்றுடன் ஒன்று பிணைத்துக்கொண்ட இருநாகங்களின் தலைகள் எதிரெதிர் திசையிலும், உடல் மற்றும் வால்பாகங்கள் பிணைத்தவாறு அழகிய பூ அமைப்பிலும் காட்டப்பட்டுள்ளன.

## நாட்டிய மண்டபச் சிற்பங்கள்

### 1. கூர்மர்

இடையின் கீழ்ப்பகுதி ஆமையாகவும், உடலின் மேற்பகுதி திருமாலாகவும் உள்ள கூர்ம அவதாரமூர்த்தி முன்னதைப் போன்றே நான்கு திருக்கைகளில் முறையே சங்கு, சக்கரம், அபய, வரதம் கொண்டு கிரீடமகுடமணிந்து நேராக நின்ற நிலையில் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளார்.

### 2. தோகை மயில்

பீடத்தின் மேல் நின்ற நிலையில் அலகில் மலர்க்கொத்தை கவ்வியபடி நீண்ட தோகையுடன் மயில் ஒன்றுக் காட்டப்பட்டுள்ளது.

### 3. மாருதி (அனுமன்)

வாயுமைந்தன் அனுமன் சஞ்சீவி பர்வதத்தை வலது கையில் பெயர்த்து எடுத்துக்கொண்டு வான்வழியே பறக்கும் காட்சியாகச் செதுக்கப்பட்டுள்ளது. வானரவீரன் காற்றைவிட வேகமாக பறக்கிறவகையில் உள்ளது. அவனின் இடது காலும், இடது கையும் மேல் நோக்கி நீண்டுள்ளன. வலதுகை பர்வதத்தைத் தாங்கியுள்ளது. கால்களில் போர்வீரர்கள் அணிந்து கொள்ளும் வீரக்கழல்கள் அணிந்து உள்ளார். அரையாடையும், கைவளைகளும், கழுத்தணிகளும் தலையலங்காரமும் நனிமிகுக் காட்சியாக்கப்பட்டுள்ளது.

### 4. உடையவர் இராமனுஜர்

பீடத்தின் மேல் சம்மணமிட்டு அமர்ந்து இரு கைகளையும் கூப்பிய நிலையில் இராமனுஜரின் வலது தோளில் தண்டம் ஒன்று

சார்த்தி வைக்கப்பட்டுள்ளது, 120 ஆண்டுகள் வைணவத்திற்கு பெருந்தொண்டாற்றிய இம்மகான் உருவம் எளிய அடியாராகத் தோற்றங்கொண்டவராக விளங்குகிறார். விசிஷ்டாத்வைதக் கொள்கையினை கொணர்ந்தவர்.

### 5. கருடன்

இருகைகளை கூப்பி, பணிவுடன் வணங்கிய நிலையில் திருமாலின் வாகனமான கருடன் சிற்பம் உள்ளது. இறகுகளை விரித்தபடியும், அரையாடை அணிந்தும், காதுகளில் வட்டவடிவ பெரிய நாக குண்டல காதணிகளை அணிந்தும், கழுத்திலும் கையிலும், தோள்களிலும் அணிகளைப் பலவாறாகப் பூட்டிக் கொண்டும், விடைத்த மூக்கும், உருட்டிய கழுகுக் கண்களுமாய் கருடனின் தோற்றம் காட்சியளிக்கிறது.

### 6. சிம்மம்

உடலை குறுக்காகவும், முகத்தை நேராகவும் காட்டியவாறு பாய்ந்த நிலையில் உள்ள சிம்மம், அடர்ந்த பிடரியுடன் வலது முன்னங்காலைத் தூக்கித் தாக்கும் நிலையில் உள்ளது. வால் உடலின் மேல் நோக்கி நீண்டுச் சுருண்டுள்ளது.

### 7. திருமகள்

பத்மாசனத்தில் நான்கு திருக்கைகளுடன் காட்டப்பட்டுள்ள திருமகளின் புடைப்புச் சிற்பம் மேற்கைகளில் தாமரைமலர்களைப் பிடித்தபடியும், கீழ்கைளில் இடதுகை வரத முத்திரையும் வலதுகை அபய முத்திரையும் கொண்டும் விளங்குகின்றது. கரண்ட மகுடமும், காதுகளில் மகரக் குழைகளும், பட்டு உடுத்தி, நேராக அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளாள்.

### 8. யாளி

தலையைத் திருப்பியபடி, பாய்ந்து தாக்கும் நிலையில் 'யாளி' சிற்பம் காணப்படுகிறது.

### 9. இலக்குவன்

இராமனின் இளவலான இலக்குவன் தன் இடதுமார்பில் வைக்கப்பட்டுள்ள வில்லினைத் தாங்கியபடி, இருகைகளை கூப்பி,

பணிந்து வணங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளான். நீள் ஆடையும், மகுடமும், காதணிகள், கையணிகள் அழகு ஊட்டுகின்றன.

## 10. காளிங்க நர்த்தனர்

முன்பு குறிப்பிட்ட காளிங்க நர்த்தனர் உருவத்துடன் ஒத்துள்ள இச்சிற்பம் ஒன்று இம்மண்டபத்திலும் காணப்படுகிறது. கிருஷ்ணன் வலதுகாலை காளிங்கனின் உயர்த்திய தலைமீதும், இடதுகாலை ஏனைய தலைகளின் மீதும் வைத்து, வலதுகை அபயமுத்திரையும், இடதுகை காளிங்கனின் வாலை உயர்த்திப் பிடித்தபடியான நடனகோலத்தில் உள்ளான். அரையாடையும், கிண்கிணியும், கைவளைகளும், செவிப்பூ, குண்டலங்களும், கழுத்தணிகளும் அணிசெய்கின்றன.

## 11. திருமால்

சமபாதத்தில், நான்கு திருக்கையில் அவருக்குரியவாறே மேற்கைகள் சங்கு சக்கரம் ஏந்தியபடியும், கீழ்கைகளில் வலது அபயத்தையும், இடது ஊரு ஹஸ்தமாகவும் கொண்டும், கிரீட மகுடராய், கீழ் காதுகளில் மகர குண்டலங்கள் விளங்க, மார்பில் யக்ஞோபவீதம் துலங்க, கழுத்து மற்றும் கைகளில் அணிகள் அழகு செய்ய, கணுக்கால்வரை நீண்ட பட்டு உடுத்தி அலங்காரப் பிரியராய் விஷ்ணு காட்சியளிக்கிறார்.

## 12. இசைக்கலைஞன்

பூதகணம் போன்ற முகம் உருவ அமைதியும் கொண்டு கொம்பினை ஊதியவாறு இளைஞன் உருவம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. அரையாடை அணிந்துள்ள இக்கலைஞன் மார்போடு ஒட்டி வீை– ணயைப் பிடித்ததாற் போன்று கொம்பினை (வாத்தியக் கருவி) இருகைகளாலும் ஏற்றி ஊதுகின்றான். இருபக்கமும் நீண்டுச் சுருண்ட நிலையில் தலையலங்காரம் உள்ளது, நெற்றியில் நாமம் இடப்பட்டுள்ளது.

## 13. அடியவர்

வலதுகாலைக் குத்திட்டு, இடதுகாலை மடக்கி அமர்ந்த நிலையிலுள்ள அடியார் ஒருவர் பருத்த தொந்தியுடனும், அரையாடை அணிந்தவராய், மார்பில் முப்புரி நூல் விளங்க, பருத்த

வயிற்றில் உதரபந்தம் அணிந்து காட்சியளிக்கிறார். அன்னாரின் கை, தோள்வளைகள் மற்றும் கேயூர அணிகள் நன்கு காட்டப்பட்டு உள்ளன.

## 14. கருடன்

கருடன் பறக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளார். கருடாசனத்தில் அதாவது வலது காலை முன்னோக்கி குத்திட்டு ஊன்றியும், இடது காலை பின்னோக்கி மடக்கி வளைத்தும் இறகுகளை விரித்தபடி, இருகைகளைக் கூப்பி வணங்கிய நிலையில், அரையாடை அணிந்து, உச்சிக்கொண்டையுடனும், காதுகளில் நாககுண்டலமும், கை மற்றும் தோள்களில் நாகவளைகளை அணிந்தவாறு இடையிலும் நாகக் கச்சு விளங்க, கழுத்தில் பட்டையானப் பதக்கம் ஆகியவற்றுடன் கருடன் விளங்குகின்றார்.

## 15. குழலூதும் கண்ணன்

கால்களை மடக்கி நின்றநிலையில் கையில் புல்லாங்குழலைப் பிடித்து ஊதியபடி அரையாடையில் இடைக்கட்டு மடிப்புகள் இருபுறமும் நீண்டுத் தொங்க, இருபுறமும் மடித்துக்காட்டப்பட்டுள்ளத் தலையலங்காரத்துடன் காட்டப்பட்டுள்ளான்.

## 16. திருமால்

சமபாதத்தில், நான்கு திருக்கையில் மேற்கைகள் சங்கு சக்கரம் ஏந்தியபடியும், கீழ்கைகளில் வலது அபயத்தையும், கீழ் இடது கையில் இவர் ஊன்றியுள்ள கதாயுதத்தின் மீது வைத்துள்ளவாறு இச்சிற்பம் உள்ளது.

## 17. இராவணன்

பத்து தலைகளை கொண்ட இலங்கேஸ்வரன் பீடத்தின்மீது சுகாசனத்தில் அமர்ந்து தன் இரு கைகளால் யாழினை மீட்டியபடி காட்டப்பட்டுள்ளான். தலைகள் பத்து காட்டப்பட்டாலும் கைகள் இரண்டு மட்டுமே காட்டப்பட்டுள்ளது.

### 18. அசோகவன சீதை

இலங்கையில் அசோகவனத்தில் இராவணனால் சிறை வைக்கப்பட்டச் சீதையை அனுமன் சந்தித்து இராமனின் கணையாழியைக் கொடுக்கும் காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 19. குரங்கும் குட்டியும்

தாய்க்குரங்கு ஒன்று தன்குட்டிக்குரங்கினை இரு கைகளால் தூக்கி அரவணைத்துக் கொஞ்சி மகிழும் இயற்கைக் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

### 20. கோதண்ட ராமன்

நின்ற நிலையில் இடது கையில் வில்லினைத் தாங்கியும் வலதுகையில் அம்பினைப் பிடித்தபடியும், முதுகில் அம்பாரத் தூணியும், அலங்கரிக்கப்பட்ட ஆடையணிகளையும் உடையவராய் இராமன் காட்டப்பட்டுள்ளார். கோதண்டம் என்னும் வில்லை வைத்துள்ளதால் கோதண்டராமன் என்றழைக்கப்படுகிறார்.

### 21. தொட்டில் கண்ணன்

உத்தரத்தில் மாட்டப்பட்டுள்ள தொட்டிலில் தலைமட்டும் தெரியும் வண்ணம் கண்ணன் குழந்தையாகக் காட்டப்பட்டுள்ளான்.

### 22. சீதைமணாளனும் சேவகனும்

கைகளை மேலே உயர்த்தி வணங்கிய நிலையில் நிற்கும் அனுமனை தன் இரு கைகளாலும் அணைத்தபடி இராமனும், பின்னால் இளவல் இலக்குவனும் காட்டப்பட்டுள்ளனர். இராம இலக்குமணர்களுக்கு மார்பில் சன்னவீரமும், நீள் ஆடையும், கிரீட மகுடமும் கொடுக்கப்பட்டுள்ளன.

### 23. காமச் சிற்பம்

ஆணும் பெண்ணும் இணைவில் உள்ளது போன்று இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது.

### 24. மகப்பேறு சிற்பம்

பெண்ணொருத்தி தன்கால்களை அகட்டி, குத்த வைத்து அமர்ந்த நிலையில் குழந்தை பெறும் நிலையில் காட்டப்பட்டுள்ளாள்.

## 25. இராமனும் சீதையும்

இராமனும் சீதையும் அன்புடன் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ள விழையும் காதற்காட்சி.

## 26. ஆயன் / இடையன்

ஆயர் குலத்தைச் சேர்ந்த இடையன் ஒருவன் தனது கால்நடைகளை மேய்க்கும் பருவத்தில் மழை பெய்யும் போது தலையில் நீண்ட கோணியை அணிந்தவாறும், கையில் தொறட்டியை (ஆடுகளுக்கு தழை பறித்துப் போடும் கம்பு) வைத்துக் கொண்டு நிற்கிறான். மாமல்லபுரத்து பல்லவர் கலைப்பாணியில் கிருஷ்ண மண்டபத்தில் காட்டப்பட்டுள்ள இடையனின் சிற்பம் போன்றே இங்கு அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## 27. கண்ணன்

கண்ணன் நான்கு கைகளில் மேற்கைகளில் சங்கு, சக்கரமும், கீழிருகைகளில் குழலினை பிடித்து ஊதியவாறு கிருஷ்ணன் காட்டப்பட்டுள்ளான். இருபுறமும் பசுக்கூட்டம் குழலிசையை மெய்மறந்து கேட்கும் வண்ணமாகப் படைக்கப்பட்டுள்ளது.

## 28. அனுக்ரஹம் (அருள் பாலித்தல்)

சண்டேச அனுக்ரஹத்தினைப் போன்றே திருமாலும் அமர்ந்த நிலையில் உள்ள கருடனுக்கு அருள் செய்கின்றார். கீழே மண்டியிட்டு அமர்ந்த நிலையில் கருடன் உருவமும், பீடத்தில் அமர்ந்த நிலையில் நான்கு திருக்கைகளுடன் திருமால் தனது பக்தன் தலையில் மலர் சூட்டுகிறார்.

## 29. மச்சாவதாரம்

திருமால் மீனாக உருவெடுத்த அவதாரச் சிற்பம் இது. உடல் பகுதி மீனாகவும், மேற்பகுதி திருமாலாகவும் இச்சிற்பம் மச்சாவதாரத்தினை கூறும் வகையில் உள்ளது. இச்சிற்பத்தில் மேல் நான்கு கைகளில் சங்கு சக்கரமும், அபய வரத முத்திரைகளையும் கொண்டுள்ளார். கிரீட மகுடமணிந்த திருமாலின் நெற்றியில் திருநாமம் இடப்பட்டுள்ளது.

### 30. கருடசேவை

விஷ்ணு கருடன் மேல் அமர்ந்துள்ள காட்சி கருட சேவை எனப்படும் இக்காட்சி மிகவும் சிறப்பாக உள்ளது.

### 31. யானை

நீண்ட இரு தந்தங்களையும், சுருண்ட துதிக்கையையும் உடைய நன்கு அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று ஓடும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. யானையின் மத்தகம் முதல் தூண் போன்ற கால்கள் வரை அணிகள் பூட்டப்பட்டுள்ளன.

### 32. குழந்தைக் கண்ணன்

திருவாச்சியின் நடுவே ஆடும் நிலையில் குழந்தை கண்ணன் காட்டப்பட்டுள்ளார். கிருஷ்ணனின் உச்சிக்கொண்டை அழகுமிளிர்ந்து காணப்படுகிறது.

### 33. இசைக்கோமாளி

ஒருவன் நாடகக்கோமாளி தப்பட்டை எனப்படும் தோற்கருவியை இசைத்தபடியான நகைச்சுவை சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. 'கோமாளி' என்று அந்நாளில் அழைக்கப்பட்ட நகைச்சுவை நடிகர்கள் அக்காலத்தில் அவர்கள் எவ்வாறு இருந்தார்கள் என்பதற்கு இச்சிற்பம் உதவுகிறது. இச்சிற்பத்தின் தலையில் குல்லாவும், அரையாடையும் அணியப்பட்டுள்ளது. அந்நாளில் தெரு, மேடை நாடகங்களில் வரும் நகைச்சுவைப் பாத்திரத்தின் பிரதிபலிப்பே இக்கோமாளிச் சிற்பம்.

### 34. ஆடல் பெண்

நீண்ட சடைப் பின்னலுடன் நாட்டியக் கரணத்தில் ஆடல் பெண் சிற்பம் ஒன்று காட்டப்பட்டுள்ளது.

### 35. அமர்நிலை சிம்மம்

விஜயநகர – நாயக்கர் கலைப்பணியைக் குறிப்பிட்டுக் காட்டும் அமர்ந்த நிலையில் உள்ள சிம்மம் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது.

### 36. வணங்கும் அனுமன்

இருகைகளைக் கூப்பி வணங்கி நேராக நின்ற நிலையில் அனுமன் காட்டப்பட்டுள்ளது.

இம்மண்டபத்தில் கருடன், அனுமன், இராமன், விஷ்ணு, இராமனுஜர் முதலிய சிற்பங்கள் மீண்டும் மீண்டும் தூண்களில் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இம்மண்டபம் விஜய நகரார் காலத்தில் எடுக்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது. கோயில் கருவறை, முன்மண்டபம், திருச்சுற்று போன்றவை சோழக் காலத்தில் கட்டப்பட்டவை என்றாலும் சோழர் காலத்தூண்களில் சிற்பம் வடிக்கும் முறை உருவாகவில்லை.

❋❋❋

# கல்வெட்டுச் செய்திகள்

## ஆய்வுக்குத் துணைபுரியும் கல்வெட்டுகள்

கல்வெட்டு என்பது கற்களில் செய்திகளைச் செதுக்கி வைப்பதாகும். இது போலச் செப்பு ஏடுகளிலும் எழுதப்பட்டுள்ளன. செப்புப் பட்டயங்களில் எழுதப்படுகின்ற எழுத்துக்கள் வெள்ளப் பெருக்காலும், கள்வராலும், பகைநாட்டு அரசனாலும் கொண்டு செல்லப்படலாம். ஆனால் கற்களில் செதுக்கப்படும் எழுத்துகள் வெள்ளத்தாலோ, பகைவர்களாலோ அழியாது நிலைபெற்றுள்ளன. எனவே காலத்தால் பாதிக்கப்படாத எழுத்துகள் கல்லில் வடிக்கப்படும் எழுத்துகளே என்ற அடிப்படையில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் .

பழங்காலத் தமிழர்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், நாகரிகங்கள், பண்பாடுகள் முதலியவற்றினைத் தெரிந்து கொள்ளக் கல்வெட்டுகள் பெரிதும் உதவுகின்றன. மேலும் மூவேந்தர் நாடாண்ட முறை, அவர்களின் கிராம நிர்வாக முறை மக்களுக்கும் அரசனுக்கும் உள்ள தொடர்பு முறை, வரிவிதிப்பு முறை, கல்வி நிலைக்குழு அமைப்புகள் முதலிய செய்திகளைக் கல்வெட்டுகள் மூலமும் தெரிந்து கொள்ள முடிகிறது.

மெய்க்கீர்த்தி என்பது அரசனுடைய உண்மையான வெற்றியைக் குறிக்கும். அன்றைய அறச்செயல்கள் குறித்துக் கல்வெட்டுகள் நமக்கு அரிய பல செய்திகளைக் கூறுகின்றன.

## சோழர் கால வரலாற்று மூலங்கள்

தமிழ்நாட்டில் வியத்தகு முறையில் கற்கோயில்கள் பலவற்றை அமைத்த பெருமைக்குரியவர்கள் சோழர்கள் ஆவர்.

அவர்கள் காலத்தில் கோயில் சுவர் தூண்களின் இடையிட்ட அங்கத்திலும், அதிட்டானத்தில் வரும் அலங்கார உறுப்புகள் உபபீடம், ஜெகதி, குமுதகம், கண்டம், பட்டிகை ஆகிய அங்கங்களிலும், மண்டபத் தூண்களிலும், தரைகளிலும் ஏராளமான கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. கோயில் புதுப்பிக்கும் பொழுது கல்வெட்டுகளைப்

பிரதி செய்து கொண்டு புதிதாக அமைந்த கோயில்களில் பொறித்தல் அக்கால மரபாக இருந்தது. கோயில்களில் காணப்படும் சிற்பங்களைக் கொண்டு சோழர்களின் கலை ஆற்றலை அறியலாம்.

இத்திருக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகள் சோழர்கால ஆட்சிச் சிறப்பினையும், வழங்கப்பட்ட தானங்கள், மருத்துவமனை ஆகியவை பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

## திருமுக்கூடல் கல்வெட்டுகள்

இக்கோயிலில் மொத்தம் 22 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் 1915 – ஆம் ஆண்டு மத்தியத் தெல்லியல் துறையால் படியெடுக்கப்பட்டன. 1915 – ஆம் ஆண்டு இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் வரிசை எண் 167 முதல்188 வரை அக்கல்வெட்டுகளின் ஆங்கிலக் குறிப்புரைகள் வந்து உள்ளன. பின்னர் மத்திய தொல்லியல் துறையும், தமிழக தொல்லிய துறையும் இணைந்து வெளியிட்ட 'தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி – 30' என்னும் நூலில் இக்கல்வெட்டுகளின் முழு வாசகங்கள் வெளிவந்துள்ளன. அதனடிப்படையிலேயே இக்கல்வெட்டுச் செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

இக்கோயிலில் பல்லவர், சோழர், விஜயநகரர், செஞ்சி நாயக்கர் ஆகிய அரசுகளின் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் சோழர்காலக் கல்வெட்டுகளே மிகுதியானது. பல்லவர் காலக்கல்வெட்டு ஒன்றும், சோழர் காலக் கல்வெட்டுகள் பதினேழும், விஜய நகரர் காலக் கல்வெட்டுகள் இரண்டும், செஞ்சி நாயக்கரின் கல்வெட்டு ஒன்றும், ஆகிய இந்த 21 கல்வெட்டுகளும் தமிழ் கல்வெட்டுகளாகும். ஏனைய, ஒரு கல்வெட்டு தெலுங்கு கல்வெட்டாகும்.

இங்குள்ள பல்லவர் காலக் கல்வெட்டு நிருபதுங்கவர்மனின் 24 – ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 893) கல்வெட்டாகும். சோழர் காலக்கல்வெட்டுகளில் முதலாம் இராஜராஜனின் இரண்டு கல்வெட்டுகளும், முதலாம் இராஜேந்திரனின் 10 கல்வெட்டுகளும், வீரராஜேந்திரனின் மூன்று கல்வெட்டுகளும், முதலாம் குலோத்துங்கன் மற்றும் விக்கிரம சோழனின் கல்வெட்டு தலா ஒன்றுமாக இடம்பெற்றுள்ளன. அதுபோல் விஜயநகரர் அரசர் வீரபுக்கண உடையார், பூபண உடையார் கல்வெட்டுகள் தலா ஒன்றும் உள்ளன.

சோழர் காலக் கல்வெட்டுகள் முதலாம் இராஜராஜனின் 28 –ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தவை. அதாவது கி.பி. 1013 – ஆம் ஆண்டைச் சார்ந்தவை. முதலாம் இராஜேந்திரனின் 10 கல்வெட்டுகளும், முறையே 3,4,5,7,9,11,16 ஆட்சியாண்டைச் சேர்ந்தவை. மேலும் ஆட்சியாண்டுக் குறிப்பிடாத கல்வெட்டு ஒன்றும் இடம் பெற்றுள்ளது. இதில் 9,11 ஆட்சியாண்டுக்கல்வெட்டுகள் தலா இரண்டு உள்ளன. அதாவது இராஜேந்திரன் 3 – ஆம் ஆட்சியாண்டு முதல் (கி.பி. 1015) 16 – ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1028) வரையிலான கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இக்கோயிலில் உள்ள 22 கல்வெட்டுகளில் பத்து கல்வெட்டுகள் முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாம் இராஜேந்திரனின் மகனான வீரராஜேந்திரனின் கல்வெட்டுகள் மூன்று இடம்பெற்றுள்ளன. இவனது ஐந்தாம் ஆட்சியாண்டு (கி.பி. 1065) கல்வெட்டே இக்கோயிலில் இடம்பெற்றுள்ள கல்வெட்டுகளில் மிகச்சிறப்பு வாய்ந்தது. தமிழக வரலாற்றிற்கு சிறப்பு சேர்ப்பவையாக அமைந்துள்ளது இக்கல்வெட்டாகும். முதலாம் குலோத்துங்களின் 5 – ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1075), விக்கிரம சோழனின் 3 – ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1121) ஆகிய இருகல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

## அரசியல் பின்னணி

சோழ மன்னர்களின் ஆட்சிக்குரியதாய் தொன்று தொட்டு அரசாளப்பட்டு வந்த பகுதி. 'சோழ மண்டலம்' என்று வழங்கப்பெற்றது. இம்மண்டலம் தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்ததால் 'குணபுலம்' என்று அழைக்கப்பெற்றது. சோழமண்டலம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கடலூர் மாவட்டத்தின் சிலபகுதிகளையும், புதுக்கோட்டைமாவட்டத்தின்ஒருபகுதியையும்கொண்ட நிலப்பரப்பாகும். சிதம்பரத்திற்கு வடக்கே உள்ள வெள்ளாறு அதன் வடஎல்லையாகும். அறந்தாங்கி வட்டம் தாலுகாவில் ஆவுடையார் கோயிலுக்கு வடபுறமாக ஓடி மணமேற்குடிக்கு அருகில் கடலில் கலக்கும் வெள்ளாறு இதன் தென்னெல்லையாகும். திருச்சிராப்பள்ளி குளித்தலைக்கு மேற்கே

கோட்டைக்கரை இதனின் மேற்கு எல்லையாகவும், கிழக்கு எல்லை வங்காளப் பெருங்கடலுமாக இம்மண்டலத்தின் பேரெல்லைகளாக அமைந்திருந்தன.

சோழமன்னர்கள் தம் ஆற்றலாலும், படை வலிமையாலும் பிறநாடுகளை வென்று தம் ஆட்சிக்கு உட்படுத்தி, சோழப்பேரரசை நிறுவி அரசாண்டனர். சங்க காலத்தை அடுத்து இருந்த காலகட்டங்களில் பழையாறையைத் தலைநகராகக் கொண்டு சிற்றரசர்களாக ஆட்சி செய்தனர். கி.பி. 9 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சோழர்கள் மீண்டும் தம் வலிமையை நிலைநாட்டி, பெருங்பேரரசாக உருவாகி கி.பி. 13 – ஆம் நூற்றாண்டு வரை சிறப்புடன் ஆட்சிசெய்தனர். சோழர்களின் ஆட்சிகாலம் 'தமிழகத்தின் பொற்காலம்' என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அத்தகைய சோழப்பேரரசின் அரசர்களாக விளங்கியவர்களில், இவ்வூர் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ள மன்னர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை சிறிது காண்போம்.

## முதலாம் பராந்தகன் - (கி.பி. 907 - 955)

முதலாம்பராந்தகன் ஆதித்தசோழனின் மகனாவான். பராந்தகன் 48 ஆண்டுகள் சோழநாட்டை ஆட்சிசெய்தான். தன் தந்தை முதலாம் ஆதித்தனின் வெற்றிகளைத் தக்கவைத்துக் கொள்ளவும் சோழப்பேரரசை விரிவுபடுத்திடவும் தன்வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தான். தனது தந்தையின் காலத்தில் நிறைவேறாத கனவாயிருந்த பாண்டியநாட்டை தனது 3 – ஆம் ஆட்சியாண்டில் கைப்பற்றினானன். பாண்டியர்களோடு போரிட்டு கன்னியாகுமரிவரை தனது பேரரசை விரிவுபடுத்தினான்.

### பாண்டியர்களுடன் போர்

முதலாம் பராந்தகன் தனது 3 – ஆம் ஆட்சியாண்டின் தொடக்கத்திலேயே 'மதிரை கொண்ட கோப்பரகேசரி' என்ற பட்டம் தாங்கினான்[1] என்றாலும் அவனது 24 – ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளே மிகுதியாக பாண்டியநாட்டில் கிடைத்துள்ளன.

## ஈழப்போர்

பராந்தகனது 37 – ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இவனை 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி' என்று குறிப்பிகிறது. பராந்தகனின் மதுரை வெற்றியைத் தொடர்ந்து, தோற்றோடிய பாண்டியமன்னனின் மணிமுடியையும், மற்ற சின்னங்களையும் கைப்பற்ற ஈழத்தின் மீது படையெடுத்தான். அப்பொருட்கள் இராசசிம்மன் என்னும் ஈழமன்னனான நான்காம் உதயன் (கி.பி. 945 – 53) வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆனால் மறைந்துவிட்டான். துரத்திச் சென்ற சோழர் படை பொருட்களைப் பெற இயலாமல் வெறுங்கையுடன் திரும்பி விட்டது. ஈழப்படையெடுப்பு கி.பி. 944 – ஆம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்திருக்க வேண்டும்.

## வல்லம் போர்

உதயேந்திர செப்பேடுகள் முதலாம் பராந்தகன் இரண்டு வாணர்குல அரசர்களை வென்று வாணகப்பாடி நாட்டைக் கங்கமன்னனாகிய இரண்டாம் பிருதிவிபதிக்கு வழங்கியதோடு, அவனுக்கு செம்பியன் மாவலி வாணதிராயன் என்ற பட்டமும் அளித்தான் என்று கூறுகின்றன. சோளசிங்கபுரத்திலுள்ள பராந்தகனது 9 –ஆம் ஆண்டு கல்வெட்டு 'வல்லாள' என்ற இடத்தில் நடைபெற்ற போரைக் குறிப்பிடுகிறது. வல்லாள என்ற ஊர் வாணர்களின் தலைநகராகிய வல்லமாக இருத்தல் வேண்டும் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. வல்லத்துப் போர் கி.பி. 913 – ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டும். வாணர்கள் பாலாற்றுக்கு வடக்கே சித்தூர் மாவட்டம் வரையில் உள்ள வாணகப்பாடி நாட்டை 200 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்து வந்தவர்கள். இவர்களின் தலைநகரம் 'வல்லம்' என்கிற 'வானபுரம்' ஆகும். இவர்கள் பல்லவர்களுக்கு அடங்கிய குறுநிலமன்னர்களாய் இருந்தனர் என்பதை பல நடுகற்கள் மூலம் அறியலாம். பல்லவர்களை வென்ற சோழப்படைகள் அவர்களுக்கு அடங்கிய வாணர்களை அடக்குவது தேவையாயிற்று. வல்லம் போரில் வாணர்குல மன்னன் இரண்டாம் விஜயாதித்தன் இறந்ததால், அவன் மகன் இரண்டாம் விக்கிரமாதித்தன் என்பவன் இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணதேவனிடம் அடைக்கலம் புகுந்தான்.

## வைதும்பர்களுடன் போர்

பராந்தகன் ரேணாண்டு நாட்டை அரசாண்ட தெலுங்கர்களாகிய வைதும்பர்களைப் போரில் வென்றான் என்ற செய்தியை உதயேந்திரம் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. அந்த வைதும்ப மன்னன் யார் என இதுவரை அறியப்படவில்லை.

## சீட்புலிப் போர்

பராந்தகனது 36 – ஆம் ஆண்டில் (கி.பி. 941) இவன் படைத்தலைவன் சிறுகுளத்தூர் மாறன் பரமேசுவரன் செம்பியன் சோழியவரையன் என்பவன் சீட்புலியை வென்று நெல்லூரையும் கைப்பற்றினான் என்ற செய்தியை திருவொற்றியூர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## பராந்தகனின் கோயில் திருப்பணிகள்

முதலாம் பராந்தகன் சிறந்த சிவபக்தன். சிவன் தில்லைச் சிற்றம்பலத்தினை பொன் வேய்ந்து அதனை பொன்னம்பலமாக்கியவன் என்பதனை.

'வெங்கோல் வேந்தன் தென்னாடும் ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லையம்பலம்'

என்று கண்டாதித்தச் சோழன் இச்செயற்கரிய பணியைப் பாடுகிறான்.

'கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றல்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்'

என்று ஒட்டக்கூத்தரும் போற்றிப் புகழ்ந்துள்ளார். பராந்தகனின் காலம் 'தென்னாட்டு கோயில்களின் பொற்காலம்' எனக் கூறலாம். அவன் காவிரியின் கரையில் 42 – க்கும் மேற்பட்ட கோயில்களை எடுப்பித்தான். கோயில் திருப்பணிகளில் தன் தந்தை ஆதித்தனை அவன் முழுவதும் பின்பற்றினான். திருவாவடுதுறை, திருச்செந்துறை, உறுமூர், திருவிடைமருதூர் ஆகிய கோயில்களைக் கற்றளிகளாக்கினான். திருவாவடுதுறை கோயிலுக்கு அவனே நேர்நின்று 500 கழஞ்சு பொன் கொடுத்த செய்தியை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. தனது தந்தை முதலாம் ஆதித்த சோழனுக்கு தொண்டைமானாற்றூரில்

ஆதித்தேச்சுரம் என்னும் பள்ளிப்படையை எடுப்பித்தான். அவனுடைய இவ்வரிய செய்கையை பின்பற்றி முதலாம் இராஜராஜ பெருமன்னன் அரிஞ்சேச்சுவரம் என்னும் பள்ளிப்படையை கட்டுவிக்க முன்னோடியாக அமைந்தது எனில் மிகையில்லை.

## வேளாண்மை

பராந்தகன் நிலத்தைப் பங்கீடு செய்து வேளாண்மை சிறக்கச் செய்வது அவனுடைய நோக்கமாக இருந்தது. சிதம்பரத்திற்கு மேற்கே வீரநாராயண சதுர்வேதிமங்கலம் என்ற ஊரினையும் அவ்வூரின் வடக்கே 'வீரநாராயணன் ஏரி'யையும் அமைத்தான். சோழசிங்கபுரத்திற்கு அண்மையில் 'சோழவாரிதி' என்னும் ஏரி இவனது ஆட்சிக் காலத்தில் தோண்டப்பெற்றது. கிராமசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் குடவோலை முறை உத்திரமேரூர் கல்வெட்டில் இவனது ஆட்சித்திறமையைப் பறைசாற்றுகின்றன.

## பராந்தகனது சிறப்புப் பெயர்கள்

வீரநாராயணன் என்ற சிறப்புப் பெயர் பல போர்களில் வெற்றிகொண்டதாலும், இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ண–னைப் போரில் வென்றதால் 'வீரசோழன்' என்ற பெயர் பெற்றதாகவும் கன்னியாகுமரி கல்வெட்டு கூறுகிறது. புலவர்களை அன்போடு ஆதரித்து வந்ததால் பண்டித வத்சலன், மற்போரில் வல்லவனாகவும், வலிமை மிக்கவனாகவும் விளங்கியதால் 'குஞ்சரமல்லன்'. இராமனைப் போல் ஈழநாட்டில் போர் நிகழ்த்தி வென்ற 'சங்கிராமராகவன்', பாண்டிய நாட்டை வென்று அப்பேரரசை சோழப் பேரரசோடு இணைத்ததால் 'இருமுடிச்சோழன்' எனவும் பட்டங்கள் பெற்றான்.

## பராந்தகன் குடும்பம்

இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசீலி ஆகிய நான்கு புதல்வர்களும், வீரமாதேவி, அநுபமா முதலிய இருமகளிரும் இருந்தனர். இராசாதித்தன் தாயாகிய கோக்கிழானடிகளே இவனது பட்டத்தரசியாக விளங்கியவள். அரிஞ்சயன் தாய் பழுவூரில் வாழ்ந்த கேரள மன்னனாகிய பழுவேட்டரையன் மகளாவாள். அருமொழிநங்கை, வில்லவன் மாதேவி, திரிபுவன மாதேவி, வளவன் மாதேவி, சோழசிக–ாமணி, சோழ மாதேவி, தென்னவன் மாதேவி ஆகியோர் மற்ற அரசிகள் ஆவர். இராசாதித்தன் தந்தை இருக்கும்பொழுதே தக்கோலப் போரில்

உயிர்துறந்தான். இவனது மகள்கள் வீரமாதேவி இராஷ்டிரகூட மன்னன் நான்காம் கோவிந்த வல்லவரையனையும், அநுபமா கொடும்பாளூர் சிற்றரசன் பூதி விக்கிரமகேசரியையும் மணந்தார்கள். இம்மன்னனின் கல்வெட்டு இக்கோயில் இடம் பெறவில்லை. ஆனால் இவனது பெயரால் அமைக்கப்பட்ட ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்தின் வடபிடாகையாக திருமுக்கூடல் அமைந்திருந்தது. எனவே, இவ்வூரைப் பற்றி கல்வெட்டுப் பிரிவில் விரிவாகக் காண்போம்.

## முதலாம் இராஜராஜன் (கி.பி.985 - 1014)

சோழர்குலத்தின் மாணிக்கமாக விளங்கிய இப்பெருவேந்தன் சுந்தரசோழனுக்கும், பட்டத்தரசியார் வானவன்மாதேவிக்கும் பிறந்த அரும் தவப்புதல்வன். இராசராசனின் ஆட்சிக்காலம் சோழர்களின் பொற்காலமாகும். 'அருண்மொழிவர்மன்' என்ற இயற்பெயர் கொண்ட இவன் தான் பிறந்த ஐப்பசித் திங்கள் சதயநாளில் திருநந்திக்கரை கோயிலுக்கு இறையிலியாக நிலம் வழங்கி விழா நடத்த ஏற்பாடு செய்தான். அவ்வாறே திருவெண்காட்டிறைவர்க்கும் விழா நடைபெற்றது. தன் சிறிய தந்தை உத்தமசோழன் ஆட்சிக்குப் பின் கி.பி.985 – இல் 'இராசகேசரி' என்ற புனைவுடன் முடிசூடி பேரரசனாகத் திகழ்ந்தான்.

மதுராந்தகத்தில் வரையப்பெற்றுள்ள இவனது ஆட்சியின் 4 – ஆம் ஆண்டு கல்வெட்டொன்று இவனைக் காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளிய கோ இராசகேசரிவர்மன்' என்று கூறுகிறது. காந்தளூர்ப்போர் சேரன் பாஸ்கர ரவிவர்மனுக்கு எதிராக கி.பி. 988 – இல் நடந்தது. அந்நாளில் சேரருக்கு உதவும் பொருட்டு இராசராசனின் பெரும்படையை வழிமறித்து எதிர்த்த பாண்டியன் அமரபுயங்கனையும் வெற்றி கண்டு 'செழியரைத் தேசுகொள் கோவிராசகேசரி வர்மன்' என்று புகழப்பட்டவன். அரசர்களுக்கு மெய்க்கீர்த்திகள் வழங்கும் வழக்கினை இவன் தொடங்கி வைத்தான். இப்பேரரசனின் மெய்க்கீர்த்தி, 'திருமகள் போல பெருநிலச்செல்வியும்' என்று தொடங்கும், இராசகேசரியின் மெய்க்கீர்த்தியினை நோக்குங்கால் அவன் மாபெரும் சோழச் சக்கரவர்த்தியாக பரந்த சோழப் பேரரசின் நிலப்பரப்புக்கு விளங்கியமை நன்கு புலப்படும். முந்நீர் பழந்தீவு பன்னீராயிரமும், ஈழநாடு, கொல்லம், கலிங்கம்,

குடமலைநாடு, கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பபாடி ஆகிய பல பகுதிகள் இவன் ஆட்சியின் எல்லைக்குட்பட்டதோடு, சோழப்பேரரசு இவ்வெற்றிகளின் மூலம் மிகுந்த பொருள்வளத்தையும் பெற்றது. பெருஞ்செல்வமும், பெருநிலமும் உடைய பேரரசன் செய்யத்தக்க உயர்ந்த அரிய பல செயல்களை இராசராசன் தன் ஆட்சிக்காலத்தில் செய்தான்.

இவனது 16 – ஆம் ஆட்சியாண்டில் 'உலகளந்தான் கோல்' என்னும் நில அளவு கோலைக் கொண்டு சோழநாடு முழுவதும் அளந்தான். இவனது சிறப்புகளில் தஞ்சை பெருவுடையார் கோயிலை எடுப்பித்ததும் மிக முக்கியமானது.

சமயப்பொறை கொண்டு விளங்கிய இப்பெருவேந்தன் நாகையில் பௌத்தப்பள்ளி ஒன்றுக்கு ஆனைமங்கலம் என்ற ஊரைப் பள்ளிச்சந்தமாகக் கொடையளித்தான் என்பதை லெய்டன் செப்பேடுகள் கூறுகின்றன. அவனது தஞ்சை பெரியகோயிலில் அமைந்துள்ள சிற்பங்களைக் காண்கையில் வைணவ, பௌத்த மதங்களுக்கும் அவன் அளித்துள்ள சிறப்பின் பெருமை விளங்கும். நித்தவிநோதனான இவன் கலைகளில் பேரார்வம் கொண்டவன். நானூறு தளிச்சேரி நாட்டிய பெண்டுகளை இக்கோயிலின் கலைச்சேவையில் ஈடுபடுத்தினான். கோயிலில் நாளும் திருமுறையோதவும், இசைக்கருவிகள் முழங்கவும் பலநிவந்தங்களை அளித்தான். முதலாம் இராஜராஜனின் 18 – ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இருகல்வெட்டுகள் திருமுக்கூடல் கோயிலில் காணப்படுகின்றன. இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது இவனது கல்வெட்டுகளே ஆகும். எனவே இவனது காலத்தில் தான் இக்கோயில் எழுப்பபட்டிருக்க வேண்டும். அதே போல் கட்டடக்கலையும் சோழர்காலக் கட்டட அமைதியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1012 - 1044)

இவன் 'கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்ற பட்டத்தோடு முடிதரித்த இப்பெருவேந்தன் இராஜராஜனின் தவப்புதல்வன் ஆவான். மதுராந்தகன் என்ற இயற்பெயர்கொண்ட இம்மன்னன் ஈடுஇணையற்ற மாவீரன். கடல் கடந்து சென்று

ஈழப்போர் புரிந்து சோழர்களின் கனவாகிய பாண்டியரின் முடியைக் கொணர்ந்தவன். கடற்போரில் சிறந்து விளங்கியவன். தன் தந்தை புரிந்த போர்கள் அனைத்திலும் துணைநின்று வெற்றி ஈட்டியவன். இவனது மெய்க்கீர்த்தி 'திருமன்னி வளர' என்று தொடங்கி மிக நீளமான அதிக வரிகளைக் கொண்டு இவன் புகழ் இயம்புகிறது. வடநாட்டின் மீது படையெடுத்து, கங்கைப்பகுதியை வென்று, அவ்வெற்றியின் நினைவாக 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற புதிய தலைநகரை நிர்மாணித்து, சோழகங்கம் என்ற புதிய ஏரியினை வெட்டுவித்து அவ்வூரில் தந்தை இராசராசனின் பெருவுடையார் கோயிலைப் போன்றே கங்கை கொண்ட சோழீச்சுரம்' என்னும் மாபெரும் கற்றளியை உருவாக்கினான். இராஜேந்திரன் தான் ஆட்சிக்கு வந்து சில ஆண்டுகளிலேயே தன் புதல்வன் முதலாம் இராசாதிராசனுக்கு பட்டம் சூட்டினான். இம்மன்னனின் 10 கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இவனது கல்வெட்டுகளே இங்கு காணப்படும் கல்வெட்டுகளில் அதிக எண்ணிக்கை கொண்டவை.

### வீரராசேந்திரன்

முதலாம் இராஜேந்திரனின் நான்கு மகன்களில் இளைய மகனாவான். முதல் அண்ணன் சிறுவயதில் இறந்துவிட ஏனைய இரு அண்ணன்கள் முறையே இராசாதிராசன், இரண்டாம் இராஜேந்திரன் ஆகியோரது ஆட்சிக்கு பின்னால் இவன் 7 – ஆண்டுகளே ஆட்சி செய்தான். இவனது காலத்தில் பல அரிய செயல்கள் நடைபெற்றன. சமயம், கலை, பண்பாடு, அரசியல் ஆகிய துறைகளில் பல அரிய நிகழ்வுகள் நடந்ததை இவனது கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. திருவொற்றியூர் கோயிலில் இம்மன்னனது கல்வெட்டுகள் பல உள்ளன. திருவெண்காட்டில் கிடைக்கும் கல்வெட்டொன்று கன்யாபூசைக்கு நிவந்தம் அளித்த செய்தியைக் கூறுகின்றது. இம்மன்னன் ஆட்சிக்காலத்தில் தான் வீரசோழியம் என்ற தமிழ் இலக்கணநூல் எழுதப்பெற்றது. இவன் காலத்திலும் நடைபெற்ற கொப்பத்துப் போரில் இவ்வரசனே வெற்றி வாகை சூடினான். இம்மன்னனின் மூன்று கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இவனது 5 – ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டே தமிழக வரலாற்றுக்குச் சிறப்பு சேர்க்கும் கல்வெட்டாகும். இவனது காலத்தில், இக்கோயிலில் வேதக் கல்லூரி,

மருத்துவமனை சிறப்புற இயங்கியது. அது பற்றி கல்வெட்டுப் பகுதியில் விரிவாகக் காண்போம்.

## முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070 - 1120)

முதலாம் இராஜேந்திரச் சோழனின் பேரனான குலோத்துங்கச் சோழனின் இயற்பெயர் 'இராஜேந்திரன்' ஆகும். அதிராஜேந்திரனுக்குப் பின் சோழ அரசியலில் ஏற்பட்டக் குழப்பத்தினாலும், கலகத்தினாலும் அதனை அடக்கும் பொருட்டும், நாட்டில் அமைதி ஏற்படவும் வழிகோலிட சோழநாட்டின் அரசபதவியை 'இராசகேசரி' என்ற பட்டத்துடன் ஏற்றான். இவன் தாய் கங்கை கொண்ட சோழமன்னனின் புதல்வியும், கீழைச்சாளுக்கிய மன்னன் இராசராச நரேந்திரனின் அரசியாருமான அம்மங்கை தேவியாராவார். தாய்வழி நிலத்தை ஆளப்பிறந்த இவன் பூச நட்சத்திரத்தன்று பிறந்தவன் என்பதை குண்டூர் மாவட்டம் பாபட்லாவிலுள்ள திருமால் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வேந்தன் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்துள்ளான். தமிழ்நாட்டிலும், மைசூர்ப் பகுதியிலும், தெலுங்கு நாட்டிலும் இவனது கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இம்மன்னனுக்கு பல மெய்க்கீர்த்திகள் உள்ளன. 'திருமன்னி விளங்கும்' மற்றும் 'புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப' என்று தொடங்கும் மெய்க்கீர்த்திகள் இவனின் நான்காம் ஆட்சியாண்டிலிருந்து கிடைக்கிறது. கலிங்கத்துப் பரணியின் நாயகன் இவனே ஆவான். குலோத்துங்கன் இரண்டு கலிங்கப்போர்களை நடத்தி வெற்றிகண்டான். 72 ஆண்டுகள் கலிங்கத்தை ஆண்டவன் அனந்தவர்ம சோழகங்கன். இவனை குலோத்துங்க சோழனின் படைத்தளபதி கருணாகரத் தொண்டைமான் வெற்றி கொண்ட நிகழ்வை விளக்குவதே கலிங்கத்துப்பரணி இலக்கியமாகும். மேலும் குலோத்துங்கன் மேலைச்சாளுக்கியர், பாண்டியரோடும் போர்களை நடத்தி வெற்றி பெற்றான். சீனா, கம்போடியா நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தான். இவன் தன் ஆட்சியில் நாட்டில் சுங்கவரியை நீக்கி, 'சுங்கம் தவிர்த்த சோழன்' என புகழப்பெற்றான். இவன் 52 ஆண்டுகள் ஆண்டான் என்பர். ஆனால் கிருஷ்ணகிரி மாவட்டம் கைலாவரம் நடுகல் இவனது 54 – ஆம்

ஆட்சியாண்டைக் குறிப்பிடுகின்றது. இக்கோயிலில் காணப்படும் இம்மன்னனின் ஒரே கல்வெட்டில் தனியூர் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் இருந்த 12 சேரிகளின் பெயர்களும் வழங்கப்பெற்றுள்ளது சிறப்பாகும்.

## விக்கிரமச் சோழன் (கி.பி. 1118 - 1136)

இம்மன்னன் முதலாம் குலோத்துங்கனின் நான்காம் மகன் ஆவான். தன் தந்தையின் வேங்கிநாட்டில் அரசப்பிரதிநிதியாய் இளமையில் இருந்தவன். கி.பி. 1120 – இல் பரகேசரி பட்டத்துடன் முடிசூட்டிக்கொண்டான். காஞ்சிபுரம் மாவட்டம் சிவன்கூடல் கோயிலில் இவன் பிறந்த ஆனித்திங்கள் உத்திரட்டாதி நாள் முதல் ஏழுநாட்கள் விழா நடத்த நிலம் அளிக்கப்பட்டச் செய்தியை அங்குள்ள கல்வெட்டைக் கொண்டு அவனது பிறந்த தினத்தை அறிய முடிகிறது. 'பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ', 'பூமாது புணரப் புவிமாது வளர' என்ற இரண்டு மெய்க்கீர்த்திகள் இவனுடையவை[19]. இம்மன்னின் ஆட்சியின் ஆறாம் ஆண்டில் கி.பி.1125 – இல் பெருவெள்ளத்திற்கு பின் ஏற்பட்டு, தொண்டை மற்றும் நடுநாடுகளில் பஞ்சம் ஏற்பட்டது அதேபோன்று, கி.பி.1130 – இல் இவனது 11 – ஆம் ஆட்சியாண்டில் சோழநாட்டிலும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது[20].

இவனது அவைப்புலவர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் ஆவார். அவர் பாடிய பிள்ளைத்தமிழிலும், விக்கிரமச் சோழனுல–ாவிலும், தக்கயாகபரணியிலும் இவன் பாடப்பெற்றான். தில்லையின் திருத்தேரை பொன்வேய்ந்து, முத்துவடங்களால் அலங்கரித்தவன். தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்துள்ள முதல் திருச்சுற்று மாளிகை 'விக்கிரமசோழன் திருமாளிகை' என்றழைக்கப்பட்டதை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கோயிலிலுள்ள நூற்றுக்கால் மண்டபம் இவன் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. தியாகசமுத்திரம், அகளங்கன் என்ற சிறப்புப்பெயர்களைக் கொண்டவன் இவன். தியாகசமுத்திர சதுர்வேதி மங்கலம் என்ற ஊரை திருவிடைமருதூர் கோயிலுக்கு இறையிலி தேவதானமாக அளித்தான் என்பதை அவ்வூர் கல்வெட்டொன்று கூறுகிறது. இம்மன்னன் கல்வெட்டொன்று இக்கோயிலில் உள்ளது.

## கோயில் கட்டப்பட்ட காலம்

இக்கோயில் இடம்பெற்றுள்ள கல்வெட்டுகளில் பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் கல்வெட்டே காலத்தால் முந்தையது. இக்கல்வெட்டு கோயில் சுவற்றில் இடம்பெறவில்லை, ஆனால் தனிக்கல்வெட்டாக கிடைக்கிறது. இக்கல்வெட்டில் திருமுக்கூடல் 'விஷ்ணு படாரர்க்கு' தானம் வழங்கிய செய்தி காணப்படுவதால் பல்லவர் காலத்தில் இங்கு கோயில் இருந்துள்ளது. அது இப்பொழுது உள்ள கோயில் அல்ல. ஏனெனில், இக்கோயிலில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது முதலாம் இராஜராஜனின் கல்வெட்டாகும். கோயில் கருவறை மற்றும் அர்த்தமண்டபம் போன்றவை சோழர்கால அமைதியில் காணப்படுகிறது. தற்போது கோயில் முதலாம் இராஜராஜனது ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது என்று அறியமுடிகிறது. பல்லவர் காலத்தில் இக்கோயில் செங்கல், சுதை கொண்டு கட்டப்பட்டதாக இருந்திருக்க வேண்டும். அச்சுவற்றிலேயே மன்னன் நிருபதுங்கவர்மனின் கல்வெட்டு பதித்து இருக்க வேண்டும்.

## திருமுக்கூடல் இறைவன் பெயர்

இக்கோயிலில் காணப்படும் காலத்தால் முந்தைய பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் 24 – ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 893) கல்வெட்டின் மூலம் இக்கோயில் இறைவன் 'விஷ்ணு படாரர்' என்றழைக்கப்பட்டுள்ளார். சோழர் காலத்தில் 'திருமுக்கூடல் ஆழ்வார்', 'திருமுக்கூடல் மகாவிஷ்ணு' என்று கல்வெட்டுகள் சுட்டுகின்றன. விஜயநகரர் மன்னன் வீரபுக்கண உடையார் (கி.பி. 1356 – 77) ஆட்சிக் காலத்தில் 'திருவேங்கடமுடையான்' என்றழைக்கப்பட்டு, கி.பி. 16 – 17 – ஆம் நூற்றாண்டில் செஞ்சி நாயக்க மன்னன் காலத்தில் திருவேங்கடத்து இறைவன் பெயரால் ஸ்ரீவெங்கடேசுவர சுவாமி' என்று அழைக்கப்பட்டுள்ளது. தற்போது 'வெங்கடேசுவர சுவாமி' என்றழைக்கப்பட்டு வரும் இறைவன் பெயர் கி.பி. 17 – ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு வழங்கப்பட்டு வருகிறது. பல்லவர் காலத்தில் 'விஷ்ணு படாரர்' என்றும் சோழர் காலத்தில் இவ்வூரின் பெயரால் 'திருமுக்கூடல் ஆழ்வார்', 'திருமுக்கூடல் மகாவிஷ்ணு' என்றழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தனியூர் ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதி மங்கலம்

இவ்வூர் 'ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர்க்கோட்டத்து, தனியூர் ஸ்ரீமதுராந்தச் சதுர்வேதிமங்கலத்து வடபிடாகை திருமுக்கூடல்' என்று சோழர் காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 'தனியூர் ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதி மங்கலம்' என்பது தற்போதைய மதுராந்தகம் என்ற ஊரே ஆகும். 'மதுராந்தகன்' என்பதற்கு மதுரைக்கு அந்தகன் (எமன்) போன்றவன் என்ற பொருளாகும். முதலாம் பராந்தகன், இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரச்சோழன், உத்தமச் சோழன், கண்டராதித்தன், முதலாம் இராஜேந்திரன், வீரராஜேந்திரன் ஆகியோர்களுக்கு 'மதுராந்தகன்' என்ற சிறப்பு பெயர் உண்டு. மேலுள்ள மன்னர்களில் காலத்தால் முந்தையவன் முதலாம் பராந்தகன் ஆவான். இவ்வூரிலுள்ள முதலாம் பராந்தகனின் 7 – ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 914) கல்வெட்டு, இவ்வூரினை 'மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம்' என்று கூறுகிறது. எனவே இவனது காலத்தில் தான் 'மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம்' என்று பெயரிட்டு பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளதை விளங்கலாம். (சிவானந்தம். இரா 'காஞ்சிபுரம் மாவட்டத் தொல்லியல் கையேடு' த.நா.அ. தொல்லியல் துறை, சென்னை – 2008. பக். 74).

அதுமட்டுமின்றி இவ்வூர் 'தனியூர் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் ' என்பதால் இவ்வூர் பிராமணர்களைக் கொண்ட சபையினரால் தன்னாட்சி நிர்வாகம் கொண்ட ஊராக இருந்துள்ளது. இவ்வூரின் முழுநிர்வாகத்தையும் அரசின் மேலாண்மை இன்றி சதுர்வேதிமங்கலத்துச் சபையாரே நிர்வகிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டதாகும்.

தமிழகத்தில் பல்வேறு 'தனியூர் சதுர்வேதி மங்கலங்கள் ' இருந்துள்ளன. அவற்றில் சில தனியூர் என்றழைக்கப்பட்டு, சிறப்பு வாய்ந்தவையாக இருந்தன. இவ்வூருக்கு அருகிலிருக்கும் உத்திரமேரூர், பல்லவர் காலத்திலேயே 'தன்கூறு உத்திரமேரூர்' என்றழைக்கப்பட்டுள்ளது. தன்கூறு என்பது தனியூர் என்ற பொருள் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த உத்திரமேரூரில் தான் முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலத்தில் சதுர்வேதிமங்கலத்து உள்ளாட்சி நிர்வாகத்திற்கு 'குடவோலை' வழியாக தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வூர் பல குடும்புகளாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு வாரியங்களுக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தேர்தலில் நிற்பதற்குத் தகுதியுடையோர், தகுதியற்றோரின் தகுதிகளைப் பற்றி விரிவாக விளக்குகின்றது. இதுபோன்று சோழர் காலத்தில் தனியூர் பிரம்மதேயம் வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம் (உடையார்குடி), தனியூர் பிரம்மதேயம் இராஜராஜச் சதுர்வேதிமங்கலம் (எண்ணாயிரம்), தனியூர் பிரம்மதேயம் பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்), தனியூர் பிரம்மதேயம் திரிபுவனமாதவிச் சதுர்வேதிமங்கலம் (திரிபுவனை), தனியூர் பிரம்மதேயம் முடிகொண்ட சோழச் சதுர்வேதிமங்கலம் (பெண்ணாகடம்), தனியூர் பிரம்மதேயம் ஜனநாதச் சதுர்வேதிமங்கலம் (விழுப்புரம்), தனியூர் பிரம்மதேயம் திரிபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலம் (திருவக்கரை), ஆமூர் கோட்டத்து தனியூர் ஸ்ரீவானவன் மகாதேவிச் சதுர்வேதி மங்கலம், போன்ற சிறப்புப் பெற்ற பல தனியூர் பிரம்மதேயங்கள் அமைந்திருந்தன. இவற்றில் 'தனியூர் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம்' 'தனியூர் பிரம்மதேயம் வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம்' ஆகியவை முதலாம் பராந்தகன் பெயரில், அம்மன்னனால் ஏற்படுத்தப்பட்டவை. அதுபோன்றே அவ்வூர்களில் அமைந்துள்ள ஏரிகளும் அவனால் ஏற்படுத்தப்பட்டு, அன்றும் இன்றும் தமிழகத்தில் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கின்றன.

## ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து வடபிடாகை திருமுக்கூடல்

திருமுக்கூடல், கல்வெட்டுகளில் இவ்வூர் 'தனியூர் ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து வடபிடாகை திருமுக்கூடல்' என்றே வழங்கப்பட்டுள்ளது. பிடாகை என்பது உட்கிடை கிராமம் ஆகும். வடபிடாகை என்பதால் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்தின் வடபகுதியில் இடம் பெற்றிருந்த உட்கிடை கிராமம் எனலாம். மாத்தூர் (புலிப்பரக்கோயில்), பழையனூர் ஆகிய ஊர்களும் மதுராந்தகத்தின் வடபிடாகையாக இருந்துள்ளதை அவ்வவ்வூர் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. அவ்வூர்கள் தற்போது செங்கல்பட்டு அருகே அமைந்துள்ளன.

அதுபோன்றே, தென்பிடாகை ஊராக 'பெரும்பேறூர்' (தற்போது பெரும்பேர்) அமைந்திருந்தது. இதன் வாயிலாக மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு வடக்கே செங்கல்பட்டு முதல் தெற்கே பெரும்பேர் வரை நீண்டிருந்ததை விளங்க முடிகிறது.

இந்நிர்வாகத்தின் கோலோச்சு மிகப்பெரியதாக அமைந்திருந்தது வியப்புக் குரியதாக உள்ளது.

## பெருங்குறி சபை

சபையும், மகாசபையும் தமிழில் குறி, பெருங்குறி என்ற பெயர்களால் வழங்கி வந்தன. சில இடங்களில் பெருங்குறி மகாசபை என்ற பெயராலும் வழங்கி வந்தன என கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தனது 'சோழர்கள்' எனும் நூலில் தெரிவித்துள்ளார். அவற்றின் உறுப்பினர்கள் 'பெருமக்கள்' என்றழைக்கப்பட்டனர். வழக்கமாக கோயில்களிலும் மண்டபங்களிலும் தான் சபை கூடியது. சில ஊர்களில் சபை நிரந்தரமாக ஒரே இடத்தில் கூடியது. அந்த இடம் பிரம்மஸ்தானம் என்றழைக்கப்பட்டது. இவ்வூர் 12 பிராமணச் சேரிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இக்சேரிகளின் வாயிலாக 'பெருங்குறி பெருமக்கள்' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## பிரம்மஸ்தானம் (சபை மண்டபம்)

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து அவ்வூர் பிரம்மஸ்தானத்தில் செம்பியன் மாதேவி பெருமண்டபத்தில் பொதுமக்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் கூடியிருந்தனர். 'பிரம்மஸ்தானம்' என்பது ஊர்சபை கூடும் பொதுவிடமாகும். இங்கு முதலாம் இராஜராஜன் தனது பெரிய பாட்டியான 'செம்பியன் மாதேவி' பெயரில் இம்மண்டபம் கட்டியுள்ளான். இம்மண்டபத்திலேயே அனைவரும் கூடியிருந்தனர். இக்கல்வெட்டு இம்மன்னன் ஆட்சி நிறைவடையும் ஆண்டிற்கு முன்னுள்ள ஆண்டாகும் அதாவது 28 – ஆம் ஆட்சியாண்டாகும் (கி.பி. 1013). எனவே இம்மன்னனின் ஆட்சித் தொடக்கமான கி.பி. 985 – கி.பி. 1013 – க்கும் இடைப்பட்ட காலத்தில் இம்மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது என்பது முடிவு.

## சேரி

சேரி என்பது சேர்ந்து இருந்தல் என்ற பொருளில் குடியிருப்புகளின் பெயராக இருந்துள்ளது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சேரிகள் பற்றிய நூற்றுக்கு மேற்பட்ட குறிப்புகள் காணப்படுகின்றன. ஒரு உறவு – ஒரு தொழில் சார்ந்த மக்கள் ஒன்று கூடி வாழ்ந்த இடமே சேரி எனப்பட்டது. (ராசகோபால், சு. 'பண்டைத் தமிழகச் சேரிகள்').

இதனை 'தமர் தமர் அறியாச் சேரியும் உடைத்தே' என்ற நற்றினை வரிகளால் அறியலாம். கல்வெட்டுகளில் பறைச்சேரி, கம்மாளச் சேரி, ஈழச்சேரி, தலைவாய்ச்சேரி, வண்ணாரச் சேரி, தளிச்சேரி, அறுவை வாணியாச்சேரி என்று தொழில் சார்ந்த மக்கள் வாழ்ந்த இடங்களே சேரி என்ற பெயரில் அழைக்கப்பட்டன. அதுபோல் பிராமணர்களுக்குத் தானமாக அளிக்கப்பட்ட சதுர்வேதிமங்கலம் போன்ற ஊர்களிலும் பல பிராமணச் சேரிகள் இருந்துள்ளன. அவை அரசர்கள், அரச குலத்தவர்கள், தெய்வங்களின் பெயர்களில் இருந்தன. உத்திரமேரூர், மன்னார்கோயில், திருபுவனி, திருக்கழித்திட்டை ஆகிய ஊர்களில் 12 சேரிகள் மன்னர்களின் பெயர்களில் அமைந்திருந்தன. (ராசகோபால், சு. 'பண்டைத் தமிழகச் சேரிகள்'). அதுபோல் தனியூர் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்திலும் 12 சேரிகள் இருந்தன. முதலாம் இராசராசனின் 28 – ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் 10 சேரிகள் மட்டும் காணப்படுகின்றன. (தெ.இ.கல். 30/101) முதலாம் இராஜேந்திரனின் 7 – ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'திருவேங்கடச்சேரி' என்ற ஒரு சேரி காணப்படுகிறது. எஞ்சிய ஒரு சேரியின் பெயர் கண்டறிய முடியவில்லை.

ஆனால் முதலாம் குலோத்துங்களின் 5 – ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (கி.பி. 1079) 12 சேரிகளின் பெயர்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. முதலாம் இராசராசனின் கல்வெட்டில் உள்ள சேரிகளும், முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டில் குறிப்பிடபட்டுள்ள சேரிகளும் இங்கு கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

## மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்தில் இருந்த பிராமணச் சேரிகள்

### முதலாம் இராசராசன் கல்வெட்டிலுள்ள சேரிகள்

1. ஸ்ரீ மாதவச் சேரி
2. ஸ்ரீ கோவிந்தச் சேரி
3. ஸ்ரீ தாமோதரச் சேரி

4. ஸ்ரீ மதுசூதனச் சேரி
5. ஸ்ரீ நாரயணச் சேரி
6. ஸ்ரீ கேசவச் சேரி
7. ஸ்ரீ விஷ்ணுச் சேரி
8. திருவிக்கிரமச் சேரி
9. ஸ்ரீ ரிஷிகேசவச் சேரி
10. ஸ்ரீ பத்பநாபச் சேரி
11. திருவேங்கடச் சேரி (முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டு வாயிலாக).

முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டிலுள்ள சேரிகள்

1. ஸ்ரீ மதுராந்தகச் சேரி
2. ஸ்ரீ பராந்தகச் சேரி
3. இருமுடி சோழச் சேரி
4. சிங்காளந்தகச் சேரி
5. ஸ்ரீ வீரசோழச் சேரி
6. ஸ்ரீ கோதண்டராமச் சேரி
7. ஸ்ரீ பரகேசரிச் சேரி
8. ஸ்ரீ ராஜகேசரிச் சேரி
9. ஸ்ரீ சூரசூளாமணிச் சேரி
10. ஸ்ரீ மாநகுலாசனச் சேரி
11. ஸ்ரீ வீரசிகாமிர சேரி
12. ஸ்ரீ திரிபுவனமாதேவிச் சேரி

இப்பட்டியலை நோக்கும் போது முதலாம் இராசராசன் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ள சேரிகள் அனைத்தும் திருமால் தொடர்பான பெயர்களால் அமைக்கப்பட்டுள்ளதை விளங்கலாம். முதலாம் குலோத்துங்கனின் 5 – வது ஆட்சியாண்டு கல்வெட்டில் 12 சேரிகள் காணப்படுகின்றன. இச்சேரிகள் அனைத்தும் சோழ மன்னர்களின் சிறப்புப் பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளன.

எனவே முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் இப்பெயர்

மாற்றம் பெற்றதா என்று ஆய்வு செய்யப்பட்டது. இவனது காலத்தில் நடைபெறவில்லை. இப்பெயர் மாற்றம் வீரராஜேந்திரன் இரண்டாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1065) நடைபெற்றிருக்கவேண்டும். ஏனெனில் இவனது கல்வெட்டில் திருவிந்தளூர் நாட்டு மருதூர் பிராமணன் வார்க்குரசோலை பூவஸ்வாசி என்ற பிராமணனின் மனைவி தான்தோன்றி என்பவள் திருமுக்கூடல் ஆழ்வார்க்குச் சந்தி விளக்கு இரண்டு வைத்து, இதனை பரகேசரிச் சேரி கந்தாடை ஸ்ரீவாசுதேவ கிரமாவித்தன் என்பான் கண்காணிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இதில் 'ஸ்ரீபரகேசரிச் சேரி' பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

முதலாம் இராஜராஜனின் கல்வெட்டில் உள்ள சேரிகள் அனைத்தும் திருமாலின் பெயர் தொடர்புடைய பெயரர்களாக அமைந்துள்ளன. முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டில் 12 சேரிகளின் பட்டியல் சோழ மன்னர்களின் சிறப்புபெயர்களில் அமைந்திருந்ததும் கிடைக்கப்பெற்றதும், வீரராஜேந்திரனின் 2 – வது ஆட்சியாண்டில் 'ஸ்ரீபரகேசரிச் சேரி' என்ற மன்னனின் பட்டப்பெயருடன் கூடிய சேரி கிடைப்பதின் வாயிலாக வீரராஜேந்திரன் காலத்தில் தான் அச்சேரிகளுக்கு மன்னன்களின் சிறப்புப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

## கணக்கன்

ஒவ்வொரு சேரிக்கும் தனித்தனியே மத்யஸ்தன் என்னும் கணக்கன் நியமிக்கப்பட்டுள்ளனர் 1. அதுபோல் ஒவ்வொரு வருடம் 'சம்வத்சர வாரியம்' செய்யும் சபைக்கென்று தனியொரு கணக்கன் அமர்த்தப்பட்டனர். ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொருச் சேரியிலிருந்து இவர்கள் அமர்த்தப்பட்டிருக்கலாம் என்பதனை 'இவ்வாண்டு சம்வத்சரவாரிய' கணக்கன் ஸ்ரீமாதவச்சேரி மத்தியஸ்தன் இராமன் திருவீராமீசுவரன் ஆன அலங்கார ஆதித்தன்' என்ற கல்வெட்டுக் குறிப்பு வாயிலாக அறியலாம்.

## கணக்கன் பட்டியல்

1. ஸ்ரீ மாதவச்சேரி மத்தியஸ்தன் இராமன் திருவிராமீசுவரன் ஆன அலங்கார ஆதித்தன்
2. ஸ்ரீ நாராயணச் சேரி மத்தியஸ்தன் மூவாயிர நம்பங்காடன் ஏழாயிரவன்

3. ஸ்ரீ கோவிந்தச் சேரி மத்தியஸ்தன் ஆதித்தன் பெருமாள் ஐயாயிரத்திருநூற்றுவன்

4. ஸ்ரீ விஷ்ணுச் சேரி மத்தியஸ்தன் சுற்றி திருவகத்தி

5. ஸ்ரீ மதுசூதனச் சேரி மத்தியஸ்தன் காடன் பொன்விண்ணன்

6. திருவிக்கிரமச் சேரி மத்திஸ்தன் பிரம்மபிரியன் ஆன கற்பகம்

7. ஸ்ரீரிஷிகேசவச் சேரி மத்தியஸ்தன் தாமோதரன் சுப்பிரமணியன் (எ) பிரம்மபிரியன்

8. ஸ்ரீ பத்பநாபச்சேரி மத்தியஸ்தன் சோமாசி தேவன்

9. கோயில் கணக்கன் திருவிக்கிரமன் வைகுந்தன்

10. கடிகை மத்தியஸ்தன் வேங்கடவன் பொன்மலையான்

## கடிகை கணக்கன்

''ஊற்றுக்காட்டுக் கோட்டத்து சீயபுரநாட்டு சீயபுரமான ஸ்ரீபராந்தகச் சதுர்வேதி மங்கலத்து கடிகை மத்யஸ்தன் வேங்கடவன் பொன்மலையான்'' என்று குறிப்பிட்டதிலிருந்து, இவன் கணக்கன் என அறியலாம். கடிகை என்பது கல்வி நிறுவனம் என்பதைக் குறிக்கும்.

## பழைய சீவரம்

பல்லவர் காலத்தில் இவ்வூர் சீயபுரம் என்றழைக்கப்பட்டு ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பிரிவில் இருந்துள்ளது. சீயபுரம் ஊரார் வசம் அரிகண்டபெருமாள் என்பவர் 30 கழஞ்சு பொன் அளித்து, இதன் வட்டியிலிருந்து வரும் பொன்னினைக் கொண்டு விளக்கெரிக்கச் செய்துள்ளார். எனவே இவ்வூர் அப்போது வெள்ளான் வகையைச் சார்ந்த வேளாண்மைச் செய்தவர்களுக்குரிய ஊராக இருந்துள்ளது எனலாம். பின்பு 1 முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டு சீயபுரமான ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலம் என்றழைக்கிறது. 2 எனவே முதலாம் பராந்தகனது பெயரில் 'ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலம்' என்று பெயரிடப்பட்டு பிராமணர்களுக்குரிய ஊராக மாற்றப்பட்டுள்ளது. மேலும் இவ்வூர் நாட்டுப் பிரிவின் தலைநகராகவும் இருந்துள்ளதை 'சீயபுரநாட்டு சீயபுரமான ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலம்' என்ற சொற்றொடரால் அறியமுடிகிறது.

## நிலங்கள்

இவ்வூரில் இருந்த நிலங்கள் நன்செய், புன்செய் வகைகளாக இருந்துள்ளன. அக்காலத்தில் நிலங்கள் மீது வரி விதிக்கப்படுவதற்கு ஏதுவாக நிலங்களின் தரங்கள் பிரிக்கப்பட்டன. நிலத்தின் தரத்தினை வைத்தே வரிகள் பெறப்பட்டன. இதனை "எங்களூர் ஏரி எதிர்வாயில் ஊர்ப் பொதுவாய் தரம்பெற்றுதும் தரம் பெறாதும், காடும் களமும், உடையும் உடைப்பு கலுமணலாய் கிடந்த நிலம்'' என்ற கல்வெட்டுக் குறிப்பில் அறியலாம் (30/103)

நிலங்கள் விற்கும் போதும் வாங்கும் போதும் அந்நிலத்திற்கான நான்கெல்லைகளும் குறிப்பிடப்படும், அவ்வாறு இவ்வூர் கல்வெட்டொன்றின் நிலத்தின் எல்லைகள் குறிப்பிடும் போது நிலத்திற்கு பெயர் இடும் வழக்கம் இருந்துள்ளதை அறிகிறோம். அந்நிலத்தின் பெயர்களாவன : காரனப்பான் குழி, வண்ணான் ஒலிக்கும் குழி, மாத்தூழான் நந்திக்குடி தாங்கி காணி, நந்திபெருமான் செறு, காரடி நங்கையான் செறு, புதுப்புலம், ஊர்க்கிழான் காணி, மூங்கில் குண்டு, காஞ்சிப்பள்ளம், முங்கை விளாகம், மணல்மேடு ஆகியன. இந்நிலங்கள் உரிமையாளர்களின் பெயராலும் மரங்களின் பெயர்களால் வழங்கப்பட்டுள்ளதை உணர்கிறோம்.

## நிலங்கள் தரம் பிரித்து, வரிவிதிப்பு

முதலாம் குலோத்துங்கன் 5 – ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1075.) திருமுக்கூடலை அடுத்துள்ள கூடலூர் என்னும் ஊரில் ஏற்கனவே மடப்புறம், திருநந்தவனப்புறம், மற்றும் இறையிலியாய் உள்ள வரிநீக்கிய நிலங்கள் தவிர்த்து ஏனைய நிலத்தில் அதுவும் மூன்றாம் தரம் கொண்ட நிலங்களின் இறை இழித்து (வரி நீக்கம்), அந்நிலத்தினை கோயிலின் பல்வேறு நிவந்தங்களுக்கு அளித்திட முதலாம் குலோத்துங்களின் படைத்தளபதி 'சேனாபதி வீரராஜேந்திரத் தன்மபாலர்' என்பாரிடமிருந்து தனியூர் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து பெருங்குடிச் சபையார் 500 காசுகள் பெற்றுக் கொண்டு வரிநீக்கி கோயிலுக்கு அளித்துள்ளச் செய்தியை தருவிக்கிறது. இந்த 500 காசுகளை மூலதனமாக கொண்டு, அரசிற்கு செலுத்த வேண்டிய வரிகளை இவர்களே செலுத்துவதாக உறுதியளித்துள்ளனர். இக்கல்வெட்டில் மதுராந்தகச்

சதுர்வேதிமங்கலத்திலுள்ள 12 பிராமணச்சேரிகளின் பெயர்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. (30/96 – 173/1915).

## நிலவரி - வருவாய்ச் சீர்திருத்தம்

அரசின் வரிவருவாயை நிர்வகிக்கும் அதிகாரி (புரவுவரி திணைக்களத்தார்) மற்றும் அரிசிற்கு வரும் வரியினை பொத்தகத்தில் எழுதும் அதிகாரிகளுக்கும் இக்கோயிலிலுள்ள வைகானசர்கள் (வைணவக் கோயிலில் பூசை செய்பவர்கள்) இருதரப்பினர்க்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையாகும். இக்கோயில் வைகானசர்கள் திருச்செந்நடை, அர்ச்சனை போன்றவற்றிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களிலிருந்து 2427 கலம், 1 தூணி, பதக்கு நெல் பெற்று வந்தனர். மதுராந்தச் சதுர்வேதிமங்கலத்தின் நடுவில் செம்பியன் மாதேவி மண்டபத்தில் கூடிய அதிகாரிகள் இவ்வைகானசர்களிடம் கேட்ட கணக்குப்படி தற்போது இந்நிலங்களின் வாயிலாக உபரியாக 120 கலம் வருவது தெரியவந்தது. எனவே இந்த 120 கலம் நெல்லினைக் கொண்டு, இக்கோயிலில் திருப்பதியம் பாடுவோர் இருவர்க்கு தலா பதக்கு நெல்லாக நாளொன்றுக்கு தூணி நெல் வீதம் ஆண்டொன்றுக்கு 120 கலம் நெல் தொடர்ந்து அளித்திட உத்திரவிட்டுள்ளனர். மேலும், இக்கோயில் பண்டாரத்தில் துணிகளுக்கு மூலதனமாக 4 கழஞ்சு பொன்னினை ஒப்படைக்கவும் வழிவகைச் செய்துள்ளனர். இப்படி இவ்வாறு செய்யத்தவறினால் வைகானசர்களிடமிருந்து 25 கழஞ்சுப் பொன் தண்டனையைப் பெற்று கோயிலுக்கு நிவந்தமாக அளிக்கப்படும் என்று நிபந்தனையையும் அதிகாரி உவற்குடி கிழவர் தெரிவித்துள்ளார். (தெ.இ.கல். 30/106 – இ.க.ஆ. 183/1915).

## நிலதானம்

மதுராந்தகம்சதுர்வேதிமங்கலத்து பெருங்குறி சபையார் இவ்வூர் வடபிடாகையில் கூடலூர் என்னும் ஊரில் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட நிலத்தினை அப்பிராமணர்கள் வசமிருந்து தூணி அளவு நிலம் திருமுக்கூடல் ஆழ்வார் பெயரில் வாங்கியுள்ளனர். திருமுக்கூடல் கோயில் பண்டாரத்திலிருந்து 100 கழஞ்சு பொன்னினை மூலதனமாகப் பெற்று ; இதன் வட்டியிலிருந்து அரசிற்கு செலுத்த

வேண்டிய வரியை செலுத்துவதற்கு இந்நிலத்திற்கு இறை நீக்கி வழங்கியுள்ளனர். இந்நிலத்தின் எல்லைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. (தெ.இ.கல். 30/101 – இ.க.ஆ. 178/1915.)

## ஸ்ரீஇராஜேந்திர சோழன் திருநந்தவனம்

ஜயங்கொண்ட சோழ மண்டலத்துத் தனியூர் ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து வடபிடாகைத் திருமுக்கூடல் மகாவிஷ்ணுக் கோயிலின் தெற்குப் பகுதியில் 'ஸ்ரீராஜேந்திரசோழன்' என்னும் திருநந்தவனம் முதலாம் இராஜேந்திரனின் 7 – வது ஆட்சி ஆண்டு 229 – ஆம் நாளில் (கி.பி. 1019) அமைக்கப்பட்டுள்ளது. இதனின் எல்லைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கூடலூர் ஊரார் 'பிடாகை இறையாக' கொடுத்துவந்த நெல்லாவது, இத்தேவர்க்கு அளிக்கப்பட்ட பாடகம், முகுந்தீசுவரமுடையார் கோயிலுக்கு அளிக்கப்பட்ட பாடகம் நீக்கி இதர நீர்நிலங்களின் வாயிலாக பாடகம் ஒன்றுக்கு மதுராந்தான் மரக்காலால் கலம் தூணி பதக்கு அளவாக மொத்த பாடகத்திற்கும்மான நெல்லினை இக்கோயில் வைகானசர்களிடம் கொடுத்திட பெருங்குறி சபையார் அறிவுறுத்தியுள்ளனர். இக்கோயில் வைகானசர்கள் இந்நெல்லினை பெற்றுக் கொண்டு திருநந்தவனத்திற்கு நீரிறைக்க ஏத்தம், பாத்தி, வேலி அமைத்து பாதுகாக்கவும், இந்த பணிகளுக்கு எட்டு பேர்களை நியமித்து, அவர்களுக்கு தினமும் 'குறுணி இருநாழி நெல்' கொடுத்து அப்பணியாளர்களை பணிசெய்ய வைக்க வேண்டும். 'கலங்கொள்ளிக் கூடை' என்னும் கூடையால் 7000 கூடை எருவிட வேண்டும். கூடலூர் புலம், கொல்லை நிலங்களில் 23 கட்டு வைக்கோல்கள் தோட்டத்திற்கு பயன்படுத்திக்கொள்ளக் கூறப்பட்டுள்ளது. கச்சிப்பேட்டுக்கும், ஊர்க்கும் அளிக்கப்படும் விநியோகங்களுக்கு வைக்கோல் அளக்க வேண்டாம் எனவும் கூறியுள்ளனர். இத்தோட்டத்தின் கீழ் பயிர்செய்யும் பயிர்களை உழைப்பிற்காக வைகானசர்கள் பெற்றிட வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. இத்திருநந்தவனத்துக்கு கூடலூர் மேலை ஏரி நீரினை பாய்ச்சும் போது, நந்தவனத்திற்கு பாய்ச்சிய பின்னர் ஏனைய நிலங்களுக்கு வரிசைக்கிரமமாக நீர் பாயச்சிக் கொள்ள நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது, இக்கூடலூர் ஊரார் ஆள் அமஞ்சி, வெட்டி, சேவகம், உள்ளிட்ட 'பிடாகை இறை' வரிகள் செலுத்த வேண்டாம் என விலக்கமளித்துள்ளனர். (தெ.இ.கல். 30/95 – இ.க.ஆ. 173/1915).

## திருநந்தாவிளக்கு கொடைகள்

காடுபட்டி முத்தரையர் மகன் அரிகண்ட பெருமானார் என்பவரிடமிருந்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து சீயபுரம் ஊர் சபையார், திருமுக்கூடல் இறைவன் 'விஷ்ணு படாரர்'க்கு நந்தாவிளக்கெரிக்க 30 கழஞ்சு பொன் பெற்றுள்ளனர். இவன் அளித்த 30 கழஞ்சு பொன் வழியாக ஒரு கழஞ்சிற்கு ஆண்டொன்றுக்கு பொலியூட்டாக (வட்டியாக) 3 மஞ்சாடி வீதம் 30 கழஞ்சுக்கு 4½ கழஞ்சு பொன் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வட்டி விகிதம் ஏறினாலும் இறங்கினாலும், இந்த வட்டியால் வந்த 4½ கழஞ்சு பொன்னால் கழஞ்சு ஒன்றுக்கு 40 நாழி எண்ணை வீதம் 4½ கழஞ்சு பொன்னிற்கு 180 நாழி எண்ணை வழங்கி ஆண்டு முழுவதும் இரவு பகல் எல்லாம் இவ்விளக்கெரிக்கச் சம்மதித்துள்ளனர் சீயபுரம் ஊரார். (தெ.இ.கல். 30/102 – இ.க.ஆ. 179/1915.)

## இராஜேந்திர சோழனின் அதிகாரி மனைவி அளித்த நந்தாவிளக்கு

முதலாம் இராசேந்திர சோழனின் பெருந்தனத்து (உயர் அதிகாரி) அரையன் இராஜஇராஜன் வானவன் பிரம்மாதிராஜர் என்பவனின் மூத்த அரசி (மூத்த மனைவி) மண்டை நங்கையார் என்பாள் திருமுக்கூடல் ஆழ்வார்க்கு திருநந்தாவிளக்கு ஒன்று எரிக்க நீர்க்குன்றத்து நிலைமைக் கூடலூர் கழனியோர் (நிலவுரிமை பெற்றவர்), ஊர் சபையார் ஆகியோர் வசம் 90 ஆடுகள் அளித்துள்ளாள். இவ்வாவணத்தை எழுதியவன் இக்கோயில் கரணத்தான் (கணக்கன்) திருவிக்கிரமன் வைகுந்தன் என்பான் ஆவான். (தெ.இ.கல். 30/97 – இ.க.ஆ. 174/1915).

## ஊர்தலைவன் அளித்த நந்தாவிளக்கு

ஆமூர் கோட்டத்துத் தனியூர் ஸ்ரீவானவன் மகாதேவிச் சதுர்வேதி மங்கலத்து வடபிடாகை ஊர் காமவூர்க் கிளிஞுலூர் ஊர்த்தலைவன் திகையடக்கி கண்டன் என்பான் 90 ஆடுகள் கொடையளித்து, ஒரு திருநந்தாவிளக்கு எரிக்க தினம் உழக்கு நெய் வழங்கிட முதலாம் இராஜேந்திரனின் 9 – ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1021) வழிவகைச் செய்துள்ளான். (தெ.இ.கல். 30/1915 – இ.க.ஆ. 170/1915).

## சோழ நாட்டினன் விளக்கு தானம்

முதலாம் இராஜேந்திரன் – 11 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1023.) சோழநாட்டு வடகரை ராஜேந்திரசிங்க வளநாட்டு மண்ணி நாட்டு பிரமதேயம் வேம்பற்றூர் என்கிற அமநி நாராயணச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த வெண்காடன் உமையான் குழலி என்பவன் திருமுக்கூடல் மகாவிஷ்ணுவுக்கு திருநந்தா விளக்கு ஒன்று வைப்பதற்கு 96 ஆடுகள் கொடையளித்துள்ளான். இவ்வாடுகள் வழியாக தினம் ஓர் உழக்கு நெய் கொடுத்திட ஏற்பாடு செய்துள்ளான். (தெ.இ.கல். 30/91 – இ.க.ஆ. 169/1915).

## பிராமணப்பெண் அளித்த விளக்கு தானம்

சோழ மண்டலத்து வடகரை திருவிந்தளூர் நாட்டு மருதூர் என்னும் ஊரைச் சேர்ந்த பிராமணன் வார்க்குரசோலை பூவஸ்வாசி என்பவனின் மனைவி தான்தோன்றி என்பவள் திருமுக்கூடல் ஆழ்வார்க்கு இரண்டு சந்திவிளக்கு எரிப்பதற்காக 23 ஆடுகள் தானமளித்துள்ளாள். இவ்விளக்கெரிக்கும் பணியினை பரகேசரி சேரி கந்தாடை ஸ்ரீவாசுதேவக் கிரமவத்தன் என்பவன் கண்காணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. (தெ.இ.கல். 30/107 – இ.க.ஆ. 184/1915).

## இறைவனுக்கு அமுதுபடி

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து தனியூர் ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து சபையார் 'திருமுக்கூடல் ஆழ்வார்' பெயரில் வாங்கிய நிலம் ஒன்றினையும், இக்கோயில் பண்டாரத்தில் இருந்து பெற்ற 30 பொன்னினையும், இக்கோயில் ஆழ்வார் உபாசகர் வசம் ஒப்படைத்துள்ளார். நிலம் மற்றும் 30 பொன்னின் வட்டியைக் கொண்டு இறைவன் வழிபாட்டிற்கு பெருங்குறி சபையார் தெரிவித்துள்ளவாறு உணவு படைக்க இவரை நியமித்துள்ளனர். நாள் ஒன்றுக்கு 1 கலம், 1 குறுணி அளவு நெல்லாக, 360 நாட்களுக்கு 412 கலம் வழங்கிட ஏற்பாடு செய்துள்ளனர். (தெ.இ.கல். 30/94.)

இந்நெல்லினைக் கொண்டு பூரிக்குத்தல் அரிசி 3 குறுணி, பருப்பு ஓர் ஆழாக்கு, மூன்று வகை காய்கறிகள், பொறிக்கறி, தயிர், தாம்பூலத்திற்கு வெற்றிலை ஓர் அடுக்கு மற்றும் 4 பாக்கு, விறகு ஒரு

கட்டு ஆக உணவு செய்வதற்குத் தேவையான இப்பொருட்கள் தினமும் வழங்கிட சம்மதம் அளித்து ஒப்பந்தம் செய்துள்ளனர்.

## பெருந்திருவமுது

இறைவனுக்கு உணவு படைக்க பூரிக்குத்தலரிசி, காய்கறி, புளி, நெய், தயிர் போன்ற பொருட்களை அளித்துள்ளனர். இப்பொருட்களைக் கொண்டு புளிசாதம், தயிர்சாதம் மற்றும் காய்கறிப் பொறியல் செய்து படைத்திருக்கின்றனர் என அறியமுடிகிறது. (தெ.இ.க. 30/99)

## வரிகள்

இக்கோயில் கல்வெட்டுகளில் காணப்படும் வரிகளாவன: குமரக்கச்சாணம், வண்ணாரப்பாறை, மீன்பாட்டம், கட்டாரம் பாட்டம், கீழிறைப் பாட்டம், வேலிக்காசு, திங்கள் மோரம், தறிப்புடவை, வலங்கையிடங்கை மகண்மை, தசபந்தம், மாடைக்கூலி, வீரசேவை.

## பொன்

பொன் கழஞ்சு, மஞ்சாடி, என்னும் அளவுகளால் சுட்டப்பட்டுள்ளன. சோழர் காலத்தில் 'துளை நிறைக் கழஞ்சு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது 'காசு நிறைக் கல்' என்னும் எடையில் எடையிடப்பட்டுள்ளது.

## பொன் நிறுத்தல்

பொன்னினை எடை போடுவதற்கு 'காசு நிறைக்கல்' என்னும் எடைக்கல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பொன் மா, மஞ்சாடி, கழஞ்சு, முதலிய அளவுகளால் குறிப்பிடப்பட்டுள்ளது. (தெ.இ.அ. 30/99)

## பொன் நிறுத்தல் அளவை

பொன்னினை மஞ்சாடி, கழஞ்சு என்னும் அளவையால் பல்லவர் காலத்தில் நிறுத்தல் செய்யப்பட்டுள்ளது. காடுபட்டி முத்தரையர் மகன் அரிகண்ட பெருமானார் என்பவர் திருமுக்கூடல் விஷ்ணு படார்க்கு ஒரு நந்தா விளக்கு எரிக்க 30 கழஞ்சு பொன்னினை சீயபுரம் சபையாரிடம் மூலதனமாக கொடுத்துள்ளார். ஒரு கழஞ்சு பொன்னிற்கு பொலியூட்டாக (வட்டியாக) 3 மஞ்சாடி வீதம், 30 கழஞ்சுக்கு 4½ கழஞ்சுப் பொன்னினை வட்டியாகக் கொண்டு இவ்விளக்கினை எரிப்பதற்கு வழிவகைச் செய்துள்ளான்.

எனவே 1 கழஞ்சுக்கு வட்டி = 3 மஞ்சாடி

30 கழஞ்சுக்கு = 3 R 30 = 90 மஞ்சாடி

ஆண்டுக்கு 4½ கழஞ்சு அளிக்க வேண்டும் என்பதால்

4 ½ கழஞ்சு = 90 மஞ்சாடி எனில்

1 கழஞ்சு = 20 மஞ்சாடி

எனவே 20 மஞ்சாடிகள் கொண்டது 1 கழஞ்சு ஆகும்.

## வட்டி வீதம்

பல்லவர் காலக் கல்வெட்டில், 30 கழஞ்சுக்கு ஆண்டு வட்டியாக 4 ½ கழஞ்சு வசூலிக்கப்பட்டுள்ளது. இதனைக் கணக்கீட்டில் ஆண்டொன்றுக்கு 15 சதவீதம் வட்டியாகும். எனவே பல்லவர் காலத்தில் மாதமொன்றுக்கு 1.25 சதவீதம் வட்டி வாங்கப்பட்டுள்ளதை அறிகிறோம்.

## மதுராந்தகன் மரக்கால்

இறைவன் திருமாசித் திருநாளில் தீர்த்தமாடிய பின்னர் செய்யும் வழிபாட்டின் போது அமுது படைக்க 'மதுராந்தன் மரக்கால்' என்னும் மரக்காலில் அளக்கும் நெல்லிற்கு இணையாக நான்கு காடி அரிசி, மற்றும் காய்கறி, புளி, நெய், தயிர், வெற்றிலை, பாக்கு, விறகு ஆகிய இப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்அமுது செய்ய உபயோகபடுத்தப்படும் மண் பாத்திரங்கள் செய்யும் குசவனுக்கு கூலியாக குறுணி அளவு நெல் கொடுக்கப்பட்டுள்ளது. (தெ.இ.கல். 30/99 – இ.க.ஆ. 176/1915.)

## மதுராந்தகன் நாழி

பால், வெண்ணை ஆகிய இவ்விரண்டும் 'மதுராந்தக நாழி' என்னும் அளவையில் அளந்து கோயிலிலே வந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## திருவிழாக்கள்

திருமுக்கூடல் ஆழ்வார்க்கு திருவிழா நடைபெறுவதற்காக விடப்பட்ட நிலங்கள் 'திருவிழாச் சதுரம்' என்றழைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அரும்புலியூர் அருகிலிருந்த பிணாயூர் என்னும் ஊரின் விளைநிலத்தில் 'எட்டுப் பாடகம்' நிலத்தினை இவ்வூரார் உழுது, புரட்டாசி திருநாளுக்குக் 120 காடி நெல் குடுத்து வந்துள்ளனர். மேலும் வாத்தியங்கள் வாசிப்பதில் வல்லவனான ராஜராஜன்(ராஜராஜ வாத்திய மாராயன்) என்பவனுக்கு அளிக்கப்பட்ட நிலத்திலிருந்து ஐப்பசி திருநாளுக்கு 150 காடி நெல் வழங்கி வந்துள்ளான். இதுபோன்று வைப்பூர் அதிகாரிகள் பெற்றிருந்த நிலத்திலிருந்து 120 காடி நெல் அளித்துள்ளனர். இவ்வாறு இந்த மூன்றின் வழியாக வந்த 390 காடி நெல்லினை கோயில் நிர்வாகத்தினிடம் ஒப்படைத்துள்ளனர். இதில் புரட்டாசித் திருநாளுக்கு வழங்கின 120 காடி நெல்லும், ஐப்பசி திருநாளுக்குப் பெற்றுவந்த 150 காடி நெல்லும் உரிய அதே திருவிழாக்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீதமிருந்த அதாவது வைப்பூர் வழியாக 'திருவிழாச் சதுர' நிலத்திலிருந்து பெறப்பட்ட 120 காடி நெல்லினையே மேற்சொன்ன 'அமாவசை' திருநாளன்று நடைபெறும் வழிபாட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. (தெ.இ.கல். 30/99 – இ.க.ஆ. 175/1915)

## திருமாசி திருநாள்

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துத் தனியூர் ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து திருமுக்கூடல் ஆழ்வார் கோயில் உபாசகர்கள், இவ்வூர் 'ஆளுங்கணம்' என்ற சதுர்வேதி மங்கலத்து நிர்வாகசபை உறுப்பினர் ஸ்ரீவிஷ்ணுச்சேரியைச் சேர்ந்த பிணுக்கிப்புறத்து நாராயண கிரமவித்தன் என்பவனிடமிருந்து 3 கழஞ்சுப் பொன் பெற்றுக்கொண்டு, மாசி மகத்தின் போது இறைவன் தீர்த்தமாடிய பின்னர் அமுதுபடி செய்ய ஒப்புக்கொண்ட உடன்படிக்கையாகும்.

## அமாவாசை திருநாள்

திருமுக்கூடல் ஆழ்வார், ஒவ்வோர் அமாவாசைத் தினத்தன்றும் தீர்த்தமாடி (திருமஞ்சனம்) எழுந்தருளும் போது அமுது செய்ய 4 நாழி அரிசியும்; கருடதேவர், சேனாபதியார், சக்கரத்தேவர் ஆகிய இறை தேவர்களுக்கும் உணவு படைக்க தலா இரு நாழி அரிசியும்; ஸ்ரீபலி,

அஞ்சணம் இவற்றிற்கு முறையே 2 நாழி, குறுணி அரிசியும்; கறியமுது, தயிர், பதினாறு பாக்கு, 80 எண்ணிக்கை வெற்றிலை ஆகியவற்றிற்கும், திருப்பள்ளிச் சீவிகை தூக்குபவர் நான்கு பேர்களுக்கு நான்கு நாழி நெல்லும்; திருவிளக்கெண்ணைக்கு நாழி நெல்லும்; கலசத்தின் கீழ் வைக்க பதக்கு நெல்லும்; கலசத்தில் சுற்றும் நூலுக்காக 4 நாழி நெல்லும்; நெய்யிற்காக நான்கு காடி குட்டை நெல்லும்; பாலிற்காக குறுணி ஒரு நாழி நெல்லும், முளிமஞ்சள் (காய்ந்த மஞ்சள்) கொடுக்க 2 நாழி நெல்லும் ஆக இவற்றிற்காக மாதம் ஒன்றுக்கு 14 காடி வீதம் ஆண்டொன்றுக்கு 12 அமாவாசைக்கும் 120 காடி நெல் அளிக்க அதிகாரிகள் செம்பங்குடையன் மற்றும் வைப்பூர் ஊர்த்தலைவன் ஆகியோர் வழிவகைச் செய்துள்ளனர்.

## வெண்ணைக்கூத்தர் வழிபாடு

திருமுக்கூடல் கோயிலில் அமைந்துள்ள வெண்ணைக் கூத்தர்க்கு (கிருஷ்ணன்) பால் அமுது அளிக்க 90 ஆடுகளும், வெண்ணைக்காக 23 ஆடுகளும் அங்காரமங்கலம் என்ற ஊரைச் சேர்ந்த நாகன் சூரியன் என்பவன் தானமளித்துள்ளான். இந்த 113 ஆடுகளையும் பெற்றுக் கொண்ட திருமுக்கூடல் மற்றும் கூடலூர் ஊரார்கள், பால் மற்றும் வெண்ணை அளிக்கச் சம்மதித்துள்ளனர். தினமும் உச்சிக் கால வழிபாட்டின் போது 14 நாழி பாலும், சிறுகாலை (அதிகாலை) வழிபாட்டின் போது வெண்ணை ஓர் ஆழாக்கும் வழங்கிட வழிவகைச் செய்துள்ளான்.

## உடன்படிக்கைகள்

இவ்வூர்க் கல்வெட்டில் கைத்தீட்டு, புணைகைத்தீட்டு, முதலான உடன்படிக்கைகள் காணப்படுகின்றன. இரு பிரிவினர் இடையே சம்மதத்துடன் ஏற்படும் உடன்படிக்கை ஆவணம் கைத்தீட்டு எனப்படும். பினை என்பது ஒருவர் அல்லது ஒரு பொருளுக்கு மாற்றாக மற்றொருவர் அல்லது மற்ற பொருளை ஈடுகட்டி வைப்பதாகும். பிணை என்பது இவ்வூர்க் கல்வெட்டு 'புணை' என்று வழங்குகிறது. முதலாம் இராஜேந்திரன் 11 – ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1023) 'அங்கார மங்கலம்' ஊரைச் சேர்ந்த நாகன் சூரியன் என்பவன் திருமுக்கூடல் மற்றும் கூடலூர் ஊரார் இக்கோயில் வெண்ணைக்கூத்தர்க்கு பால், வெண்ணை வைப்பதற்குப் பிணையாக 113 ஆடுகள் அளித்துள்ளான்.

பால், வெண்ணை இவற்றினை வழங்கிட ஆடுகள் வழங்கிய இவ்வுடன்படிக்கை 'புணை கைத்தீட்டு' என்று வழங்குகிறது. (தெ.இ.க. 30/90)

## வீரராஜேந்திரன் கால வேதக் கல்லூரி, ஆதுலர் சாலை

பரகேசரி இரண்டாம் இராசேந்திர சோழனுக்குப் பின்னர் கி.பி. 1063 – இல் அவன் தம்பியான வீரராசேந்திரன் என்பான் முடிபுனைந்து சோழப்பேரரசரானான். வீரராஜேந்திர சோழன் இராசகேசரி என்னும் பட்டத்தைப் புனைந்து கொண்டான் என்பதை "மேவரு மனுநெறி விளக்கிய கோ இராசாகேசரி வர்மர்ரான உடையவர் ஸ்ரீ வீரராஜேந்திரதேவர்'' என அவனது மெய்க்கீர்த்தி விளக்குகிறது.

சோழர்களின் மத்திய கால ஆட்சியில் திருமுக்கூடல் கோயிலில் இவனது சிறப்பு வாய்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது. அது அவனது 5 – வது ஆட்சியாண்டின் 348 – வது நாளில் அமைக்கப்பட்ட மிகப்பெரியக் கல்வெட்டாகும்.

அக்கல்வெட்டு 55 வரிகளைக் கொண்டு, இரண்டு பிரிவாகச் செதுக்கப்பட்டுள்ளது. முதல் பிரிவில் உள்ள வாசகங்கள் நீண்ட வரிகளில் 16.76 மீட்டர் அதாவது 55 அடி சுவர் முழுவதும் சுமார் 50.20 சதுர மீட்டரில் (540 சதுர அடி) கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு வீரராஜேந்திரன் ஆட்சியின் பல்வேறு நிலைகளையும், அரசியல் சம்பவங்களையும் முதன்மைப்படுத்திக் காட்டுகிறது.

இக்கல்வெட்டு கோயில் நிர்வாகம், வேதக் கல்லூரிகள், அதனோடு தொடர்புடைய உணவு விடுதி, மாணவர் தங்கும் விடுதி, மருத்துவமனை (ஆதுலர் சாலை) ஒரே கட்டடத்தில் தனித்தனியாக இடம் ஒதுக்கி அமைந்திருந்ததைக் காட்டுகிறது.

கங்கை கொண்ட சோழபுரத்து சோழ கேரளன் என்னும் திருமாளிகையில் 'ராஜேந்திர சோழ மாவலி வாணராஜன்' என்ற இருக்கையில் அமர்ந்து இவ்வாணையை வழங்கியுள்ளான்.

## வீரராஜேந்திரன் தானம் வழங்கிய முறை, உடன் இருந்த அதிகாரிகள்

முதலில் அரசரின் ஆணை "திருமந்திர வோலை'' என்பவரால் எழுதப்படுகிறது; பிறகு "திருமந்திர வோலை நாயகம்'' என்ற மூன்று அதிகாரிகளால் ஒப்பிடுட்டபின் அரசாங்க ஏடுகளில் வரையப்படுகிறது. "புகுந்த'', "விடையில் அதிகாரி'' போன்ற வேறு மூன்று அதிகாரிகள் இதை 'வரி'யில் பதிவு செய்கிறார்கள்; பிறகு உடன் கூட்டத்தைச் சேர்ந்த ஆறு அதிகாரிகள், 'விடையில்' சேர்ந்த இருபத்தெட்டு அதிகாரிகளும் "நடுவிருக்கும்'' சேர்ந்த நான்கு அதிகாரிகளும் இதை நிறைவேற்றுகிறார்கள். "புரவுவரித் திணைக் கள''த்தைச் சேர்ந்த ஒன்பது கண்காணிப்போர், "முகவெட்டி அதிகாரிகள்'', மூன்று "வரியிலிடு அதிகாரிகள்'' இரண்டு "வரிப் பொத்தகக் கணக்கர்கள்'' ஒரு "பட்டோலை அதிகாரி'' இவர்கள் எல்லோரும் சாட்சிக் கையொப்பம் இடுகின்றனர். அவ்வதிகாரிகளின் பட்டியல் இதோ.

### திருமந்திர ஓலை

சத்திரிவிய சிகாமணி வளநாட்டுப பனையூர் நாட்டு நேர்வாயில் நேர்வாயில் உடையான் தாழி பனங்காடு உடையாளர் ஆன வானவன் வல்லவரையன் ஆள்அமஞ்சி உட்பட அனைத்து வரிகளும் திருமுக்கூடல் ஸ்ரீவெங்கடேசுவர சுவாமிக்கு மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

### திருமந்திர ஓலை நாயகம்

பாண்டியனான ராஜராஜ பிரம்மராயர் வீரராஜேந்திர காங்கையராஜன்

### புகுந்த கேள்வி

வில்லவராஜர்
கலிங்கத்தரையர்

### விடையில்

ராஜேந்திரவயிராகச் சோழர்
பாண்டியார்

### கூட்டத்து அதிகாரிகள்

வீரராஜேந்திர பிரம்மாதிராஜர்
சோழ பிரம்மாராயர்
செம்பியன் சித்தியர்
அதிசய சோழ மூவேந்த வேளார்
ஜயங்கொண்ட சோழ விழுப்பரையன்
உத்தம சோழப் பல்லவராயன்

### விடையிலதிகாரிகள்

காடவராஜர்
காவேரி வல்லப மூவேந்த வேளார்
ஈலாடத்தரையர்
சோழ மூவேந்த வேளார்
வீரராஜேந்திர மழவராஜர்
வளவன் மூவேந்தவேளான்
ராஜ உத்தம மூவேந்த வேளார்
ராஜராஜக் கடிகைராஜர்
ஜயங்கொண்ட சோழ மூவேந்த வேளார்
ராஜேந்திர சோழ அணுக்கப் பல்லவராயர்
ஜயங்கொண்ட சோழ வயநாட்டரையர்
ஜயங்கொண்ட சேனைமுக மூவேந்த வேளார்
சோழ விழுப்பறையர்
ஜயசிங்க குலகால விழுப்பரையர்
வீரராஜேந்திரத் திருவிந்தளூர் நாட்டு மூவேந்த வேளார்
ராஜராஜ விழுப்பரைய வீரராஜேந்திர வரகுணராஜர்
க்ஷத்திரசிங்க மூவேந்த வேளார்
உத்தம சோழ மூவேந்த வேளார்
பரர்மன்னு குலதீப மூவேந்த வேளார்
வீரசோழப்பல்லவரையர்
முடிகொண்ட சோழ மூவேந்த வேளார்

புரவுவரித் திணைக்களம்

சளுக்கி குலகால மூவேந் வேளான்
வானவன் விழுப்பரையன்
வளவராஜ மூவேந்த வேளான்
அவனி நாராயண மூவேந்த வேளான்
சிங்களாந்தக மூவேந்த வேளான்

வரிப்பொந்தகம்

பாலையூர் கிழவன்

முக வெட்டி

ஜயங்கொண்டசோழத் தாமனூர் நாட்டு விழுப்பரையன்
ஆதமங்கலமுடையான் அதிராஜேந்திரப் பல்லவாரயன்
கூந்தல் கிழான் தெரிப்பு ஈங்குடையான்
மாத்தூருடையான் வளவசூளாமணி மூவேந்த வேளான்
வளவராதித்த மூவேந்த வேளார்
கங்கைகொண்ட சோழப் பல்லவரையன்

நடுவிருக்கும்

உறுப்புட்டூர் யஞ்ஞபட்டர்
சாவ்யண சிவலாஜ்ஜாதி பட்டர்
கறிபுரத்துச் சோழ தேவ பட்டர்
கறிபுரத்து அனந்த நாராயண பட்டர்

புரவுவர் திணைக் களத்துக் கண்காணி

குலைய திவாகர மூவேந்த வேளார்
அரிந்தமன் புரங்கரம்பை நாட்டு மூவேந்த வேளான்
ராஜராஜக் சென்னிநாடு கிழவன்
வீரசிங்க மூவேந்த வீரக வேளான்
அழகிய சோழ விழுப்பரையன்

தரவு சாத்து

சோழ திவாகர மூவேந்த வேளான்
புலி கிழான்

வரியிலிடு

அவனி பால மூவேந்த வேளான்
செம்பியன் மீதேலை வேளான்

வரிப்பொத்தகக் கணக்கு

செங்காத்தி மங்கலமுடையார்
வளவன் விழுப்பரையன்

பட்டோலை

சிறுபாக்கிழான்
மணற்பாக்கிழான்

கேள்வி வரியில் இடுவித்த புரவுவரி திணைக்களம்

சளுக்கி குலகால மூவேந்த வேளான்
சிங்காளந்த மூவேந்த வேளான்
கூந்தல் கிழான்

வாசித்த வரிப்பொந்தக்கணக்கு

செங்காத்தி மங்கலமுடையார்

வரியிலிட்டான்

சோழமண்டலத்துப் புரவுவரி திணைக்கலத்து கணக்குச் சோழ மாணிக்க மூவேந்த வேளான்

பட்டோலை எழுதினான்

வீரசோழ நென்மலி நாட்டு மூவேந்த வேளான்

ஆணையின் சுருக்கம்

1. வயலக்காவூர் இக்கோயிலுக்குத் தர்ம சாலை மூலமாக உணவு வழங்க வாயிலிட்டப் பொன் 75 கழஞ்சு ஆகும்.

2. பரகேசரிவர்மன் இராசராசேந்திரன் சோழ தேவர் காலத்தில் சாலா போகமாக நிலம் கொடுக்கப்பட்டது.

3. இவ்வூர் அடங்கங்களில் வந்த பாட்டம் மற்றும் முன்பு தேவர் தேவதானத்திலிருந்து வந்த பொன் 72 கழஞ்சு 9 மஞ்சாடி கழஞ்சு ஒன்றுக்கு இராஜகேசரி என்னும் அளவையால் 16 கலம் எனக் கணக்கிட்டு 2350 கலம், 1 படிக்கு, 3 நாழி, 1 ஆழாக்கு, 3 செவிடு ஆகும்.

ஒரு கலம் 'இராஜகேசரி மரக்கால்' அளவை என்பது அருண்மொழித் தேவன் கணக்கின்படி மரக்கால் 1 கலம், தூணி மற்றும் 4 நாழியாகும்.

எனவே இதன்படி ஆண்டுக்கு 3243 கலம் 2 தூணி, 1 மதக்கு, 2 நாழி, 1 உழக்கு, 3 செவிடு நெல்லும், 210 பொன்னும் வருவாய் ஆக்கப்பட்டுள்ளது.

## கோயிலுக்கான தானம்

1. காலை, பகல், இரவு மூன்று உணவு வழங்க 601 கலம் நெல் அக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. சந்தனக் கலவை, கற்பூரம், குங்குமம், விளக்குகள், இவைகளுக்காக "65 5/8'' காசுகள் கொடுக்கப்பட்டன.

3. ஐப்பசி, மாசி, கார்த்திகை, மாதங்களிலும், கண்ணன் பிறந்த நாளான ஜெயந்தி அஷ்டமி நாளிலும் விழாக் கொண்டாட 28 கலம் நெல் வழங்கப்பட்டது.

4. கோயில்களில் உள்ள உருவச்சிலைகளுக்குத் துணி வாங்க 6 கலம், 5 குறுணி, 2 நாழி நெல் வழங்கப்பட்டது.

5. வெண்ணெய்க் கூத்தராகிய கண்ணனுக்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவோணம் நாளில் விழா கொண்டாடுவதற்கு 5 கலம் நெல் வழங்கப்பட்டது.

6. பல்வேறு வைணவ விழாக்களின் போது உணவுக்காக 88 கலம் 11 குறுணி 4 நாழி நெல் வழங்கப்பட்டது.

7. ஆண்டுதோறும் திருச்சுற்று மாளிகையைப் பழுது பார்க்க 40 கலம் நெல் வழங்கப்பட்டது.

8. பல்வேறு உதவியாளருக்குத் துணி வாங்குவதற்கு 13 காசுகள் வழங்கப்பட்டது.

9. விழாக் காலத்தை அறிவிக்கும் சோதிடர், திருவாய் மொழி ஓதுபவர், பூந்தோட்டம் பயிரிடுபவர், கணக்கர், நீர் வழங்குனர், துணிகளைத் தூய்மை செய்பவர்களுக்கு – 382 கலம், 6 குறுணி 4 நாழி நெல் வழங்கப்பட்டது.

10. வீரராஜேந்திரனின் பிறந்த நாளன ஆவணி மாதம் கொண்டாட 5 கலம், 5 குறுணி 2 நாழி நெல் வழங்கப்பட்டுள்ளது.

## வேதக்கல்லூரிக்கு வழங்கப்பட்டவை

1. ரிக் வேதம் போதிக்கும் ஆசிரியருக்கு ஊதியமாக ஆண்டுக்கு 60 கலம் நெல், 4 காசுகள் வழங்கப்பட்டன.

2. யஜூர் வேதம் போதிக்கும் ஆசிரியருக்கு அதே அளவு ஆண்டு தோறும் வழங்கப்பட்டது.

3. வியாகரணம், ரூபவத்ரா போதப்பவர்களுக்கு ஆண்டு 120 கலம் நெல்லும் 10 காசுகளும் வழங்கப்பட்டன.

## மாணவர்கள் தங்கும் விடுதி

மாணவர் தங்கும் விடுதி கல்லூரியுடன் சேர்ந்தே இருந்தது. அறுபது பேர் தங்குவதற்குரிய இடத்தில், பத்து மாணாக்கர் ரிக்வேதமும், பத்து மாணாக்கர் யஜீர் வேதமும், இருபது மாணாக்கர் வியாகர்ணம், ரூபவத்ராவும், பத்து மாணாக்கர் மகாபஞ்சரத்ராவும் படித்துள்ளனர். மேலும் மூன்று சிவபிராமணர், சிவ ஆகமமும், ஐந்து வைகானசர் வைகானசமும் மேலும் இருவர் பொதுப்படிப்பும் படித்துள்ளனர் என்று கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறியமுடிகிறது.

## வைகாநசம்

வைகாநசம் என்பது பகுப்பு (அல்லது) பிரிவு என்பது பொருள், இந்த வைகாநச சூத்திரம் என்பது, வேதங்கள் நான்கு பிரிவாகப் பிரிவதற்கு முன் சூத்திரமானது. வைகனஸர் செய்த சூத்திரத்தை பின்பற்றுவோர் வைகாநசர் ஆவார். இந்த ரிஷியின் சீடர்கள் மரீசி, அத்ரி, பிருகு, காசியபர் ஆகியோராவார். இந்நால்வரும் சேர்ந்து நான்கு இலட்சம் கிரந்தங்கள் செய்தனர். இவைகளுக்கு வைகாநசம் என்று பெயர்.''

இங்கு படிக்கும் மாணவர்களுக்குத் தங்கும் வசதிகள், படுத்து உறங்குவதற்குப் பாய், இரவில் படிப்பதற்கு விளக்கு எரிய எண்ணெய், ஆண்டு 51 சனிக்கிழமைகளில் எண்ணெய் நீராடலுக்கு வழங்கப்பட்டச் செய்திகளும், சமையற்காரர்களுக்கு கூலி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், உணவு வழங்க ஆக மொத்த செலவுக்காக ஆண்டுக்கு 1642 கலம் நெல் 37 5/8 காசு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவைகளின் மூலமாகச் சோழர் ஆட்சிக் காலத்தில் வேதம் மற்றும் சாத்திரங்கள் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கிய சலுகை தெளிவாகத் தெரிகிறது.

## ஆதுலர் சாலை (எ) மருத்துவச் சாலை

சங்க காலத்திலிருந்து கி.பி. 13 – ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை சோழர்கள் தென்னிந்தியப் பகுதியை மட்டுமன்றி வட இந்தியப் பகுதியிலும், கடல் கடந்தும் தங்களது வலிமையை நிலைநாட்டி ஈடு இணையற்ற அரசர்களாயினர்.

அவர் காலத்தில் ஆதுலர் சாலைகள் அமைத்தது பற்றியும் அவற்றுக்கு வழங்கிய கொடை பற்றியும் அவர்களின் கல்வெட்டுகளால் தெரியவருகிறது. சோழர் கால இலக்கியங்களான கம்பராமாயணம், சீவக சிந்தாமணி போன்றவை, அக்காலப் பிணிகள், மருந்துகள் மற்றும் மருத்துவர்களைப் பற்றிய சில குறிப்புகளைத் தருகின்றன.

இருப்பினும் சோழர்கால மருத்துவத்தைப் பற்றி அறிவதற்கு சில கல்வெட்டுகளே பெருந்துணைபுரிகின்றன.

1. திருமுக்கூடல்
2. திருப்புகலூர்
3. திருவாவடுதுறை
4. கீரகளூர்
5. கூகூர்
6. கடத்தூர் ஆகிய இடங்களில் காணப்படும் சோழர் காலத்திய கல்வெட்டுகள் அக்கால மருத்துவத்தைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

## வீரசோழன் ஆதுலர் சாலை (மருத்துவமனை)

இக்கோயிலின் "வீரசோழன்'' என்னும் பெயரில் மருத்துவமனை இருந்தது. அம்மருத்துவமனையில் 15 படுக்கைகள் இருந்தன.

## மருத்துவர்

அம்மருத்துவமனையில் நாடி பார்த்து மருந்து கொடுப்பவர் ஒருவர் இருந்தார். அவரின் பெயர் ஆலம்பாக்கத்து சவர்ணன் கோதண்டராமன் அசுவத்தாம பட்டர் என்பதாகும். இவருக்கு தினமும் 3 குறுணி நெல், 4 காசுகள் ஊதியமாக வழங்கப்பட்டது.

## அறுவை சிகிச்சை செய்பவர்

அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் "சல்லியக்கிரியை பண்ணுவான்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். அவருக்கு ஊதியமாக தினம் ஒரு குறுணி நெல்லும் 2 காசுகளும் வழங்கப்பட்டன.

## நீர் கொண்டு வருபவர்

அம்மருத்துவச்சாலைக்கு தண்ணீர் கொண்டு வருவதற்காக ஒரு பணியாள் இருந்ததையும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவனுக்கு 15 கலம் நெல் மட்டும் ஆண்டு ஊதியமாக வழங்கப்பட்டது.

## மருந்து கொண்டு வருபவர்

மருந்து தயாரிக்கும் மூலிகைச் செடிகளைப் பறித்துக் கொண்டு வருவதற்காக இருவர் பணிபுரிந்தனர். இவர்கள் மூலிகைச் செடிகளைக் கொண்டு வருவதோடு அடுப்பு எரிக்க விறகும் கொண்டு வந்தனர். இவை தவிர மருந்து தயாரிக்கும் பணியைச் செய்தனர். இவர்களுக்கு ஆள் ஒருவருக்கு தினம் குறுணி நெல்லும் ஒரு காசும் ஊதியமாக வழங்கினர்.

## மருத்துவப்பணி மகளிர்

மருத்துவப் பணி மகளிர் இருவர் இருந்தனர். இவர்களை 'மருந்துஅடும்பெண்கள்' எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஒவ்வொருவருக்கும் தினம் 4 நாழி நெல்லும், ½ காசும் ஊதியமாக வழங்கினர்.

## நாவிதன்

அறுவைத் தொழில் செய்யும் நாவிதன் ஒருவன் இச்சாலையில் பணிபுரிந்துள்ளான். நாவிதர்கள் சவரத் தொழிலையும், மருத்துவத் தொழிலையும் செய்தனர். இவர்கள் கத்தியைக் கையாள்வதில் திறமை

பெற்றவர்கள். ஆதலின் நரம்பு, உடல் உறுப்புகள் பாதிக்கா வண்ணம் சிறு அறுவைச் சிகிச்சை செய்தனர். இவர்களும் "மருத்துவர்" என அழைக்கப்பட்டனர். பிள்ளைப் பேற்றுத் துறையில் நாவிதர் மனைவிமார் ஈடுபட்டதால், இவர்கள் மருத்துவச்சி என அழைக்கப்பட்டனர். இந்நாவிதனுக்கு நாள் ஒன்றுக்கு 4 நாழி நெல் மட்டும் ஊதியமாகக் கொடுக்கப்பட்டது.

## நோயாளிகள்

நோயாளிகளை "வியாதிப்பட்டுக்கிடப்பார்" எனக்குறிப்பிட்டனர். ஒரு நோயாளிக்கு ஒரு வேளைக்கு 1 நாழி அரிசி வழங்கப்பட்டது.

இச்சாலைக்கு விளக்கு எரிக்க 2¼ காசும், விளக்கு ஒன்றுக்கு ஆழாக்கு எண்ணெயும் வழங்கப்பட்டிருந்ததை இந்தக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

## சாலையில் இருந்த மருந்து வகைகள்

இவ்வாதுலர் சாலையில் ஓராண்டிற்குத் தேவையான பலவகை மருந்துகள் இருப்பில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

## மருந்தின் பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. | பிராமியம் கடும்பூரி | – 1 எண்ணிக்கை |
| 2. | வாசா ஹரீதகி | – 2 படி |
| 3. | தஸ – மூலா – ஹரீதகி | – 1 படி |
| 4. | பல்லாதக – ஹரீதகி | – 1 படி |
| 5. | கண்டீரம் | – 1 படி |
| 6. | பலாகேரண்ட தைலம் | – 1 தூணி |
| 7. | லசுநாக ஏரண்ட தைலம் | – 1 தூணி |
| 8. | பஞ்சக தைலம் | – 1 தூணி |
| 9. | உத்தம கர்ணாதி தைலம் | – 1 தூணி |
| 10. | பில்வாதி கிருதம் | – 1 பதக்கு |
| 11. | மண்டுகர வடகம் | – 2000 எண்ணிக்கை |
| 12. | திராவத்தி | – 1 நாழி |
| 13. | விமலை | – 2000 எண்ணிக்கை |

14. சுனேற்றி – 2000 எண்ணிக்கை
15. தம்ராதி – 2000 எண்ணிக்கை
16. வஜ்ரகல்பம் – 1 தூணி 1 பதக்கு
17. கல்யாண லவணம் – 1 தூணி 1 பதக்கு

மேலும் இம்மருந்துகளைப் பத்திரப்படுத்திப் பாதுகாக்க 40 காசுகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு மதுராந்தக சதுர்வேதிமங்கல மகாசபை உறுப்பினர்களால் நிர்வாகம் சீரிய முறையில் நடந்துள்ளதை அறிய முடிகிறது.

கோயில் நலனுக்காகக் கொடையாக வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு மாணவர்கள் தங்கும் விடுதி கல்வி நிலையங்கள் மருத்துவமனை, போன்றவற்றை சிறந்த முறையில் பேணிக்காத்தனா் எனத் தெளிவாகிறது.

## கோயிலுக்கு வழங்கப்பட்ட மானியங்கள்

### 1. நடன சாலை மானியம்

இத்திருக்கோயிலில் நடன சாலை ஒன்று இருந்ததாகவும் அதற்குத் தனியே நிவந்தங்கள் (மானியங்கள்) விடப்பட்டிருந்தாகவும் அறிய வேண்டியுள்ளது.

### 2. தேவரடியாள் மானியம்

திருவிழாவின் போது நடனமாடும் நங்கைக்கு அளிக்கப்பட்டது.

### 3. நட்டுவானார் மானியம்

நடன சாலையில் நாட்டியம் கற்று கொடுத்து வந்த நட்டுவனார்க்கு விடப்பட்ட மானியமாகும்.

### 4. மத்தள மானியம்

நடனம் ஆடுகையில் மத்தளம் வாசிப்பவனுக்கு வழங்கப்பட்ட மானியமாகும்.

5. டமாரமானியம்

இது திருவிழாவின் போது முரசு முழங்கும் ஒருவனுக்கு விடப்பட்ட மானியமாகும்.

இவையெல்லாமல்

பண்டார மானியம்

பஞ்சாங்க மானியம்

குயவன் மானியம்

வாத்திய மானியம்

அர்ச்சகர் மானியம் மற்றும்

வில்லியனுக்கும் மானியம் உண்டென்பது கல்வெட்டுச் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் வாத்திய மானியம் என்பது கோயிலின் பூசையின் போது மேள வாத்தியத்தை வாசிப்பவருக்கு வழங்கப்பட்ட மானியமாகும். இந்த மானியத்தைப் பெற்று தொன்று தொட்டுப் பயிரிட்டு உண்டு பரம்பரையாய் திருத்தொண்டு செய்து வருபவரை இன்றும் இங்குக் காணமுடிகிறது.

## திருமுக்கூடல் கல்வெட்டுகளில் ஊர்ப் பெயர்கள்

1. சீயபுரமான ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதிமங்கலம்
2. கூடலூர் நீர்க்குன்றத்து நிலைமைக் கூடலூர்
3. அரும்புலியூர்
4. பிணாயூர்
5. வைப்பூர்
6. காமவூர்
7. கிளிஞலூர்
8. அக்கார மங்கலம்
9. களத்தூர்
10. ஆமூர்
11. வேம்பற்றூர் ஆன அமநி நாராயணச் சதுர்வேதிமங்கலம்
12. உவற்குடி

14. மாத்தூர்
15. குன்றத்தூர்
16. சாத்துவாய்
17. ஆற்றூர்

ஆட்பெயர்கள்

1. அரிகண்ட பெருமான்
2. காஞ்சை வாமன கிராமவித்தன்
3. வைகானசன் காசியப நரசிங்க பட்டன்
4. காசியபன் வாமன கிரமவித்தன்
5. பட்டய கிரமவித்தன்
6. காராம்பிச் சேட்டு இளைய தோணய கிரமவித்தன்
7. வங்கிபுறத்து பத்பநாப கிரமவித்தன்
8. வெள்ளாளன் தாமன் மடத்தான் திருமால்
9. கீழ்க்காவில் சங்கர நாராயண கிரமவித்தன்
10. வைகானசன் பாரத்வாசி பத்மநாபன்
11. காஞ்சிக்குறி மாதவ கிரமவித்தன்
12. ஸ்ரீ பத்பநாபச் சேரி மத்தியஸ்தன் சோமாசி தேவன்
13. ஸ்ரீ விஷ்ணுச் சேரி பிணுக்கிபுறத்து நாராயண கிரமவித்தன்
14. வெள்ளாளன் நடையாடி மணிநாகன்
15. திகையடக்கி கண்டன்
16. நாகன் சூரியன்
17. வேங்கடவன் பொன்மலையன்
18. வெண்காடன் உமையான் குழலி
19. ஸ்ரீ பரகேசரிச் சேரி கந்தாடை ஸ்ரீ வாசுதேவக்கிரமவித்தன்
20. வைகானசன் காசியப நரசிங்க பட்டன்
21. பாரத்வாசி குமாரசுவாமி
22. பார்கவ நீலபட்டன்
23. பாரத்வாசி கேசவன்
24. இராயூர் சோட்டை தாமோதரபட்டர்

25. ஆலக்கொன்றை திருவரங்கக் கிரமவித்தன்
26. இழக்கன்திறத்து போறேவ பட்டர் மகன் அருளாள பட்டர்
27. காஞ்சிக்குறி பவநந்திக் கிரமவித்தன்
28. பிப்பிரை நாராயணபட்ட ஸர்வகிருது வாஜபேய்யாஜியார்
29. பிரயாகைச் சிவக்குமார பட்டர்
30. வற்றலூர் நாராயண பட்டர்
31. மயிந்தக்குறி ஸ்வாமி குமார வஸந்தயாசியார்
32. வற்றலூர்த் துர்கை பட்டர்
33. நின்றை சோலைப் பிரான் பட்டர்
34. வங்கிப்புறத்துக் குன்றைய சகஸ்ரர்
35. புதுப்பட்டனத்துத் தணியமலை பட்டர்
36. சடையன் அமரர்கள் சந்தரன் பிரம்ம பிரியன்
37. பூதி விருஷ்ண சோமயாஜி
38. தட்சணாமூர்த்தி
39. அனந்த நாராயணன்
40. உதயதிவாகர ஸர்வ ஆதித்யன்
41. மகசிறை ஸ்ரீ வாசுதேவன்
42. கொரோவி சர்வ்வ தேவன்
43. அரணைபுறம் ஸ்ரீவரதன்
44. சூற்றி சோமாசி
45. பேவண்ணன் ஆடவலான்
46. கொற்றமான் ஆடவலான் குன்றேரன்
47. திருப்பாலையூர் கிழவன் திருநாராயணன்
48. திருப்பாலையூர் கிழவன் சொற்துணை அழகியான்
49. திருப்பாலையூர் கிழவன் வேளான் தேவன்
50. வெள்ளி அணி தாங்கி விக்கிரம கேசரி
51. மாத்தூழான் நந்தி குடிதாங்கி
52. குன்றத்தூழான் மஞ்சன் செந்தாமரைக் கண்ணன்
53. குன்றத்தூழான் மஞ்சன் மண்டகவன்

54. இளையாதன் வேட்டன் ஏறு சேவக திருவெண்காடுடையான்
55. நாழான் செப்பி அபனிமயமான்
56. கிடங்கன் வெள்ளி மாதேவன்
57. அரும்பாக் கிழான் திருப்பேரி மாதவன்
58. சாத்துவாய் வாமனன் கோவீற்று ஏறுருடையான்
59. நன்னாறன் பொந்நடைச் செல்வன்

## குயவன்

கோயிலுக்குத் தேவையான மட்பாத்திரம் செய்யும் குயவனுக்கு கூலியாக நெல் கொடுக்கப்பட்டுள்ளது. மாசிமாதத் திருநாள் விழாவின் உணவு செய்யத் தேவையான மட்பாத்திரம் செய்ய குறுணி நெல் கூலியாக அளித்துள்ளனர்.

## வழிகள்

நகரி ஏறப்போன பெருவழி, வேப்பஞ்சேரி போனவழி, திருவேங்கடச் சேரி போனவழி ஆகிய சாலைகளின் எவ்வூருக்குச் செல்கிறதோ அவ்வூரின் பெயரால் அழைக்கப்பட்டுள்ளது.

## மன்னன் நலன்வேண்டி கொடை

விஜயநகர மன்னன் வீரபுக்கண உடையார் மற்றும் அவரது உறவினர்களின் நலனுக்காக, திருமுக்கூடல் ஊர் திருவிடையாட்ட நிலத்திலிருந்து சோடி, சூலவரிகள் மூலம் பெறப்பட்ட 300 பணம் கோயில் வழிபாட்டிற்குத் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கோயில் இறைவன் 'திருவேங்கடம் உடையான்' என்று அழைக்கப்பட்டுள்ளார். (30/110 – இ.க.ஆ. 188/195).

## விஜயநகர அரசு அதிகாரி ஆணை

விஜயநகர மன்னன் விருப்பண்ண உடையார் மகன் பூபண உடையார் ஆட்சிக் காலத்திலிருந்த அரசு அதிகாரி ஸ்ரீமது மங்கப்ப உடையார் அவர்கள் பெம்மரசர் அத்தானை ஔபளநாதர் என்பவருக்கு அனுப்பிய உத்தரவு ஓலை 'வடபிடாகை பற்று திருமுக்கூடல்' என்ற குறிப்பு மட்டும் காணப்படுகிறது. (30/100 – இ.க.ஆ. 177/1915).

## செஞ்சி நாயக்கர் வெங்கடப்ப நாயக்கர் அதிகாரி கொடை

செஞ்சி வெங்கடப்ப நாயக்கர் காலத்தில் தொத்த அரசர் கட்டளையிட்டவாறு இப்பகுதி அதிகாரி ராமப்பயர் என்பவரால் திருமுக்கூடல் கிராமத்தில், பெறப்பட்ட இடைதுறை, ஆள்அமஞ்சி உட்பட அனைத்து வரிகளும் திருமுக்கூடல் ஸ்ரீவெங்கடேசுவர சுவாமிக்கு மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

## ஆத்தூர் விண்ணகராழவார் கோயிலுக்கான கொடை

ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்து பாலையூர் என்கிற ராஜேந்திரசோழ நல்லூர் ஊரவர்கள், இக்கோட்டத்து ஆற்றூர் நாட்டுத் திருவிண்ணகர் என்னும் ஊரில்அமைந்திருந்த திருவிண்ணகராழ்வார் கோயில் வழிபாட்டுத் தேவை, திருமடைப்பள்ளி புறம் ஆகியவற்றிற்காக, அவ்வாழ்வார் கோயில் பண்டாரத்தில் இருந்து காசு பெற்று பாலுர் ஊரில் நிலம் ஒன்றினை வாங்கி இறைநீக்கி தேவதானமாக அளித்துள்ளனர். இக்கல்வெட்டு திருமுக்கூடல் ஊரிலிருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் பாலூர் என்ற ஊருக்கருகில் அமைந்துள்ள ஆற்றூர் விண்ணகராழ்வார் (திருமால் கோயில்) கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைச்செய்தி, இக்கோயிலில் கல்வெட்டாக வெட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டு விக்கிரம சோழனின் 3 – ஆம் ஆட்சியாண்டிற்கு (கி.பி. 1121) உரியது. (30/108 – 180/1915)

❋❋❋

# திருவிழாக்கள்

இத்திருத்தலத்தில் எட்டு உற்சவங்கள் விமரிசையாக நடைபெறுகின்றன. இந்த உற்சவங்களை இவ்வூரைச் சேர்ந்த பல்வேறு மரபினர் உபயமாக ஏற்று நடத்துகின்றனர். சில உற்சவங்களை கோயில் நிர்வாகம் நடத்துகிறது.

| வ.எண் | விழா நிகழும் | மாதம் உற்சவங்கள் | உபயம் |
|---|---|---|---|
| 1. | ஆவணி மாதம் | கிருஷ்ணஜெயந்தி | யாதவமரபினர் |
| 2. | புரட்டாசி | விஜய தசமி | கோயில் நிர்வாகம் |
| 3. | கார்த்திகை | திருக்கார்த்திகை தீபம் | கோயில் நிர்வாகம் |
| 4. | மார்கழி | வைகுண்ட ஏகாதசி | வன்னியர் |
| 5. | தை | பாரிவேட்டை | கோயில் |
| 6. | தை | இரதசப்தமி | பண்டிதர் |
| 7. | மாசி | மகம் | முதலியார் |
| 8. | பங்குனி | யுகாதி | கோயில் நிர்வாகம் |

## கிருஷ்ண ஜெயந்தி

இது ஆவணி மாதம் அவிட்ட நட்சத்திலிருந்து எட்டாம் நாள் ரோகிணி நட்சத்திரத்தன்று கொண்டாடப்படும் விழாவாகும். அன்று அஷ்டமி திதியில் கண்ணன் பிறந்தார். இதைக் கிருஷ்ணஜெயந்தி எனக் கொண்டாடுவர். ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம் அவ்வூரில் உள்ள யாதவ மரபினர் உபயத்தினால் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.[1]

விழாநாளன்று காலை உற்வசருக்குத் திருமஞ்சன மண்டபத்தில் திருமஞ்சனம் நடைபெறும்.

மாலையில் உற்சவர் நாச்சியாருடன் தொட்டில் வீதி புறப்பாடு செய்வார். வீதியில் உறியடி உற்சவம் நடைபெறும்.

## விஜயதசமி

உலகத்தாயாகிய உமா தேவியை வழிபடச் செய்யும் பண்டிகை நவராத்திரியாகும். இது புரட்டாசி மாதம் பூர்வ பட்ச பிரதமை திதி முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும். முதல் மூன்று நாட்கள் துர்கா தேவியையும், அடுத்த மூன்று நாட்கள் இலட்சுமி தேவியையும், இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதி தேவியையும் வழிபடுவர். பத்தாம் நாள் விஜய தசமி கலைமகள் விழாவாகும். அன்று கல்வி சம்பந்தமான அனைத்து வேலைகளையும் தொடங்குவர்.[2]

இக்கோயில் இவ்விழாவினைக் கோயில் நிர்வாகமே ஏற்று சிறப்பாக நடத்துகிறது. காலை உற்சவருக்கு திருமஞ்சன மண்டபத்தில் திருமஞ்சனம் நடைபெறும். மாலையில் உற்சவர் நாச்சியாருடன் வீதி புறப்பாடு செய்வார். பிறகு வன்னிமரம் நடுதல் நிகழ்ச்சி நடைபெறும். இத்திருத்தலத்தின் அருகில் உற்சவர் வன்னிமரத்தின் மீது அம்பு எய்தல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறும். வீதி புறப்பாட்டிறகுப் பிறகு உற்சவர் திருமஞ்சன மண்டபத்திற்குச் செல்வார்.

## திருக்கார்த்திகைத் தீபம்

கார்த்திகை மாதம் கிருத்திகை நாளன்று பௌர்ணமி திதி சேர்ந்து வரும் போது இவ்விழா கொண்டாடப்படுகிறது.

இவ்விழா ஆண்டு தோறும் நடைபெறும், இந்த திருவிழாவினை கோயில் நிர்வாகமே ஏற்று நடத்துகிறது. விழா நாளன்று காலை திருமஞ்சன மண்டபத்தில் உற்சவருக்கு திருமஞ்சனம் நடைபெறும். அன்று மாலை கோயிலில் அகல் விளக்குகள் ஏற்றி பூஜை செய்து விளக்குகள் எல்லா சன்னதியிலும், ஆறு மற்றும் ஏரி முதலிய இடங்களிலும் வைக்கப்படும்.

மாலையில் உற்சவர் நாச்சியாருடன் தொட்டில் புறப்பாடு செய்வார். அன்று இரவு “சொக்கப்பனை’’ கொளுத்தப்படும்.

## வைகுண்ட ஏகாதசி மற்றும் கருடசேவை

விரதங்களில்சிறந்தது ஏகாதசி விரதமாகும். சகல பாவங்களையும் போக்கும் வல்லமை கொண்ட அசுவ மேதயாகம் செய்யும் பலனுக்குச் சற்றும் குறையாத பலன் கொண்டதாகும் என்பது வைணவர்களின் நம்பிக்கையாகும்.

இத்திதி மாதம் இருமுறை வரும். ஒன்று வளர்பிறை ஏகாதசி மற்றொன்று தேய்பிறை ஏகாதசி, வளர்பிறை ஏகாதசி – சுக்லபட்ச ஏகாதசியென்றும், தேய்பிறை ஏகாதசி கிருஷ்ணபட்ச என்றும் கூறுவர். ஓர் ஆண்டில் 25 ஏகாதசி தினங்கள் வருகின்றன. அவை

| மாதம் | கிருஷ்ணபட்சஏகாதசி | சுக்லபட்ச ஏகாதசி |
|---|---|---|
| சித்திரை | பாபமோசனிகாஏகாதசி | காமதா ஏகாதசி |
| வைகாசி | வருதிநீ ஏகாதசி | மோகினி ஏகாதசி |
| ஆனி | அபராஏகாதசி | நிர்ஜலா ஏகாதசி |
| ஆடி | யோகநீ ஏகாதசி | சயநீ ஏகாதசி |
| ஆவணி | காமிகா ஏகாதசி | புத்திரஜா ஏகாதசி |
| புரட்டாசி | அஜா ஏகாதசி | பத்மநாபா ஏகாதசி |
| ஐப்பசி | இந்திர ஏகாதசி | பாபாங்குசா ஏகாதசி |
| கார்த்திகை | ரமா ஏகாதசி | பிரபோதினி ஏகாதசி |
| மார்கழி | உற்பத்தி ஏகாதசி | மோட்ச ஏகாதசி |
| தை | ஸபலா ஏகாதசி | புத்ரா ஏகாதசி |
| மாசி | ஷட்திலா ஏகாதசி | ஜெயா ஏகாதசி |
| பங்குனி | விஜயா ஏகாதசி | ஆமலதி ஏகாதசி |

மற்றும் ஒரு ஏகாதசி கமலா ஏகாதசியாகும்.''

இக்கோயிலில் ஆண்டு தோறும் மார்கழி மாதம் சுக்லபட்சத்தில் வரும் மோட்ச ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி உற்சவம் நடைபெறும். அன்றே கருடசேவை உற்வசம் நடைபெறும் இந்த உற்வசத்தை வன்னியர் ஏற்று நடத்துகின்றனர்.

இந்த நாளில் அதிகாலை 4.30 மணி அளவில் சொர்க்கவாசல் திறக்கப்படும். இங்கு பரமபரதப்பெருமாள் பக்தர்களுக்குக் காட்சி அளிப்பார். பிறகு காலை 5.30 மணிக்கு சொர்க்க வாசல் கதவு மூடப்படும்.

பிறகு உற்சவர் புறப்பாடு நிகழ்ச்சி நடைபெறும். அன்று காலை 10.30 மணி (ஏறக்குறைய) அளவில் கருட வாகனத்தில் உற்சவர் வீதி புறப்பாடு நடைபெறும். இவ்விழாதான் கருடசேவை. வீதி புறப்பாடு முடிந்ததும் திருமஞ்சன மண்டபத்தில் உற்சவர் நிலைப்பாடு அடைவார்.

மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசியன்று, சூரியோதய நேரத்தில் சொர்க்கவாசல் திறப்புவிழாவும் ஏகாதசி விழாவும் சிறப்பாக நடைபெறும். பக்தர்கள் முக்கூடலாற்றில் இரவே வந்து தங்கி அதிகாலை நீராடித் திருமாலை வணங்குவர். பக்தர்கள் மகிழ அன்று இரவு “தொண்டைமான் சக்ரவர்த்தி'' என்ற நாடகத்தை அக்கிராம மக்கள் நடித்துக் காட்டுவர்.[4]

## பாரிவேட்டை உற்சவம்

வருடத்தோறும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் மறுநாள் மாட்டுப் பொங்கல் அன்று பரிவேட்டை உற்சவம் நடைபெறும்.

இவ்வுற்சவத்தின் சிறப்புக்கூறாக காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜ பெருமாள், பழைய சீவரம் லட்சுமி நாஸிம்மசுவாமி, சாலவாக்கம் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள், காவாந்தண்டலம் பெருமாள் ஆகிய நால்வருடன் திருமுக்கூடல் பெருமாள் வீதி உலாவரும் நிகழ்ச்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

காலையில் பெருமாளுக்குத் திருமஞ்சனம் நடைபெறும். மேலும் இவ்வுற்சவத்தின் போது, பெருமாள் மட்டும் வீதிப் புறப்பாடு செய்து ஏறக்குறைய 10 மணி அளவில் நிலைப்பாடு செய்வார்.

சாலவாக்கம் பெருமாளும், காவாந்தண்டலம் பெருமாளும் இத்திருக்கோயிலுக்கு எழுந்தருளுவர். காஞ்சி வரதராசப்பெருமாள் பல்லக்கு மூலம் பழைய சீவரம் இலட்சுமிநரசிம்மசுவாமி கோயிலுக்கு வருவார். அங்கிருந்து மாலை 4 மணி அளவில் பழைய சீவரம் இலட்சுமி நரசிம்மருடன் திருமுக்கூடலில் உள்ள இத்திருத்தலத்திற்கு எழுந்தருளுவார். காவாந்தண்டலம், சாலவாக்கம் பெருமாள்கள்

கோயிலில் எதிர் கொண்டு அவர்களை வரவேற்று இத்திருத்தலத்திற்கு அழைத்துச் செல்வார்கள்.

### தங்கும் மண்டபங்கள்

| | | |
|---|---|---|
| காஞ்சி வரதர் | – | பெரியமண்டபம் |
| பழைய சீவரப்பெருமாள் | – | நான்கு கால் மண்டபம் |
| திருமுக்கூடல் | – | சொர்க்கவாசல் நுழைவு மண்டபம் |
| சாலவாக்கம் | – | அனுமன் சன்னதியுலுள்ள மண்டபம் |
| காவாந்தண்டலப் பெருமாள் | – | அனுமன் மண்டபத்திற்கு அடுத்துள்ள வாகனமண்டபம் |

ஊர்மக்கள் வந்து கப்பம் கட்டும் பரிமாற்றம் நடைபெறும். பிறகு மாலையில் உற்சவரான ஸ்ரீநிவாசருக்கு சிக்கு ஆடை சார்த்தல்வெண்ணிற துணியால் ஆன கொண்டை சாற்று நடைபெறும்.[5]

பின் இவ்வைந்து பெருமாள்களும் இவ்வூர் மாடவீதிகளில் உலா வருவார்கள். அன்று இரவே ஏறக்குறைய 10 மணி அளவில் கோயிலின் எதிரில் திருமுக்கூடல் பெருமாளைத் தவிர மற்ற நால்வரும் அவரவர் திருத்தல்களுக்குப் பல்லாக்குகள் மூலமாகப் பிரிந்து செல்வார்கள்.

### இரத சப்தமி (அ) ரத தசமி

சூரியன் மகர ராசியில் நுழைவதனையே பொங்கலாகக் கொண்டாடுகிறோம். ஆனால் உண்மையில் அமாவாசைக்கு அடுத்த வளர்பிறை ஏழாம்நாள் சப்தமி திதியன்றே சூரியனின் தேரானது வடக்கு முகமாகத் திரும்புகின்றது. இதனை இரத சப்தமி, மகா சப்தமி, ஜெயந்தி சப்தமி என்பர்.''

இவ்வுற்சவம் ஆண்டு தோறும் தை மாதம் பண்டிதர் மரபினரின் உபயத்தால் நடைபெறுகிறது. இந்நாளன்று உற்சவருக்குத் திருமஞ்சனம் நடைபெறும். திருமஞ்சனம் முடிந்தவுடன் சூரியபிரபை வானத்தில் உற்சவரை அமர்த்திக் கோபுர தரிசனம் செய்ய ஏற்பாடு செய்வர். இத்தரிசனம் முடிந்தவுடன் உற்சவர் ஆஸ்தானம் அடைவார். அன்று மாலை வெண்ணிற ஆடை (வெள்ளை வஸ்திரம்) அணிவித்து

சந்திரப்பிரபையில் வீதி புறப்பாடு நடைபெறும். அன்று இரவே பெருமாள் ஆஸ்தானம் அடைவார்.

## மாசி மகம்

சந்திரன் சிம்மராசியில் மக நட்சிரத்தில் நுழையும் நாளில் மாசி மகவிழா கொண்டாடப் பெறுகிறது.

முதலாம் இராசேந்திரர் தமது மூன்றாம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1015) மாசித் திங்கள் மகம் விழா நடத்த பொற்கொடை அளித்தார். இவ்விழா இன்று வரை நடைபெறுகிறது.[8]

ஆலய கிழக்கு சுவரில் பரகேசரி வர்மன் என்கிற இராசேந்திர சோழ தேவருடைய 3 – ஆம் ஆண்டு கல்வெட்டில் மாசி மகம் திருவிழா கொண்டாட பொன் தானமாக அளிக்கப்பட்டச்செய்தி கூறப்பட்டுள்ளது.

## யுகாதி

ஆண்டுதோறும் பங்குனி மாதம் உற்சவம் நடைபெறும். இவ்வுற்சவத்தை கோயில் நடத்துகிறது.

அன்று இரவு புதிய ஆண்டிற்கான பஞ்சாங்கம் வாசிக்கும் நிகழ்ச்சி பழைய வியாக்கியான மண்டபத்தில் நடைபெறுகிறது. இம்மண்டபம் தற்போது பஞ்சாங்க மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இதற்குரிய மானியத்தைப் பெற்றுப் பஞ்சாங்கம் படிப்போரும் இன்று உளர். பஞ்சாங்கம் படிபவருக்கு மானியம் கொடுக்கும் வழக்கம் இன்றும் வழக்கில் உள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. பாலமுருகன், இந்து விரதங்களும், பண்டிகைகளும், சங்கர் பதிப்பகம் ம.ப. அக்டோபர் 1997, ப.எண். – 22.
2.மேற்படி ப.எண் – 26.
3.நெ.சி. தெய்வசிகாமணி, ஏகாதசி விரத மகாத்மியம், பயணியர் பப்ளிகேஷனஸ் ம.ப. அக்டோபர் 2002, பக். எண். 1,2,3,4,5,6.
4.தாமரைக்கண்ணன், இதய தீபம், ஜூலை 2000, ப.எண். 75.
5.திருக்கோயிலின் அர்ச்சகர் திரு. சீனிவாச பட்டாச்சாரியார் அவர்களுடன் நேர்காணல், 28.06.04.
6.பாலமுருகன், இந்து விரதங்களும் பண்டிகைகளும், சங்கர் பதிப்பகம், மு.ப. அக்டோபர் 1997, ப.எண். 48.
7.தாமரைக் கண்ணன், இதய தீபம், ஜூலை – 2000, ப.எண்.74.



வாயிற்கோபுரம்

கர்ணகுண்டல ஆஞ்சநேயர் சன்னதி
(ம)வாகனமண்டபம்





காஞ்சிவரதர் மண்டபம்



வைகுந்தவள்ளித்தாயார் சன்னதி



நீண்டசதுரவிமானம்

முதல்திருச்சுற்றுசுவர்
மருத்துவ கல்வெட்டு உள்ளபகுதி





பலிபீடம்



கொடிமரம்


திருமாளிகைபத்தி


கோட்டபஞ்சரம்

மகாமண்டபம்





வேணுகோபாலன்
புடைப்புச்சிற்பம்



மண்டப தூண்சிற்பங்கள்



ஆற்றுப்படுக்கையில் கோயில் தோற்றம்



பொய்கை ஆழ்வார்



பூதத்தாழ்வார்



பேயாழ்வார்



திருமழமிசை ஆழ்வார்



நம்மாழ்வார்



மதுரகவி ஆழ்வார்



குலசேகராழ்வார்



பெரியாழ்வார்



தொண்டரடிப்பொடியாழ்வார்



திருப்பணாழ்வார்



குலசேகராழ்வார்



பெரியாழ்வார்


நாராயணர்


வைணவ அடியார்



துவாரபாலகர்



கருடாழ்வார்

